மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

**Manonmaniam Sundaranar University**

Reaccredited with 'A' Grade (CGPA 3.13 Out of 4.0) by NAAC (3rd Cycle)

Tirunelveli - 627 012, Tamilnadu, India.



பகுதி – I பொதுத்தமிழ்ப் பயிலாத அனைத்து இளநிலைப் பட்டப்படிப்பு தாய்மொழித் தமிழ், மாணவர்களுக்கு உரிய துறை சாரா விருப்பப் பாடத்திட்டம் (**Non Major Elective**)

## கற்றல் விளைவுகள் சார் பாடத்திட்டக் கட்டமைப்பு

Learning Outcome Based Curriculum Frame Work (LOCF)

**பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்ற கல்லூரிகளுக்கு**

**2021, 2022, 2023** ஆகிய ஆண்டுகளில் சேரும் மாணவர்க்குரியது

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி- 627 012

## நோக்கம்: (VISION)

தமிழ்மொழி வாயிலாகச் செவ்வியல் இலக்கிய, இலக்கணங்களால் மாணாக்கரின் மொழியறிவு, படைப்பாற்றல், மொழிபெயர்ப்பு, ஆய்வுத்திறன் மற்றும் ஆளுமைத்திறனை மேம்படுத்தித் திறமையான பட்டதாரிகளை உருவாக்கத் தரமான உயர்கல்வியை வழங்குதல்.

## செயலாக்கம்: (MISSION)

- இலக்கியங்களின் வழித் தமிழ்ச் சமூகம் மற்றும் பண்பாடு, கலாச்சாரங்களைக் கற்பித்துத் தமிழ்ச் சமூகத்தின் மேம்பாட்டினை உயர்த்துதல்
- திறமையான ஆராய்ச்சியாளர்களாக மாணவர்களை உருவாக்க விமர்சனச் சிந்தனை மற்றும் மதிப்பிட்டுத் திறன்களை ஊக்குவித்தல்
- மாணாக்கரின் இலக்கிய, மொழியியல் திறனைப் பல்வேறு காலக்கட்ட இலக்கியங்கள் வாயிலாக மேம்படுத்துதல்

| நிரல் கல்வி சார் நோக்கங்கள் (**Program Educational Objectives-PEOs**) | |
|---|---|
| • | மொழி ஆளுமைத்திறனை மேம்படுத்தல் |
| • | செவ்வியல் மொழி அமைப்பினை அறிதல் |
| • | தமிழ் இலக்கிய வரலாற்றினை வகைமை நோக்கில் உணர்தல் |
| • | படைப்பாற்றல் திறனை மேம்படுத்தல் |
| • | இலக்கிய ஆய்வுத்திறனை வளர்த்தல் |
| • | வாழ்வியல் அறங்களைப் போதித்தல் |
| • | படிக்கும் ஆர்வத்தினைத் தூண்டுதல் |
| • | சமுதாயச் சிக்கல்களை அறிந்து அவற்றைக்களைய ஊக்குவித்தல் |
| • | நற்பண்புகளை வளர்த்தல் |
| • | தாய்மொழியின் தனிச்சிறப்புகளை உணர்ந்து தாய்மொழிப்பற்றை வளர்த்தல் |

## திட்டத்தின் முடிவுகள் (Program Outcomes - $PO_S$)

| | |
|---|---|
| • | மொழியைப் பிழையின்றிப் பேச, எழுத, கற்கத் தேவையான புலமை பெறுதல் |
| • | இலக்கிய வரலாற்றுப் பின்புலம் அறிதல் |
| • | சமூக வாழ்வியல் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் திறன் அடைதல் |
| • | தாய்மொழி வழிக் கல்வி வாயிலான அரசுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற தன்னம்பிக்கை வளர்த்தல் |
| • | நல்லொழுக்கம், நற்பண்புகள், சமத்துவம், சகோதரத்துவம் உணர்தல் |

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி - 12

2021, 2022, 2023 ஆகிய ஆண்டுகளில் சேரும் மாணவர்க்குரியது

பகுதி - **I** பொதுத்தமிழ்ப் பயிலாத அனைத்து இளநிலைப் பட்டப்படிப்பு தாய்மொழித் தமிழ், மாணவர்களுக்கு உரிய துறை சாரா விருப்பப் பாடத்திட்டம் (**Non Major Elective)**

மூன்றாம் பருவம் - வளர் தமிழ் தாள் 1

நான்காகம் பருவம் - வளர் தமிழ் தாள் 2

இவ்விரு தாள்களும் பொதுத் தமிழ்ப்பயிலாத அனைத்து இளநிலைப்பட்டப் படிப்பு தாய்மொழித் தமிழ், மாணவர்களும் தமிழ்மொழியில் நன்கு பயிற்சி பெற்றிருத்தல் இன்றியமையாதது என்னும் நோக்கில் இப்பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தமிழ்மொழியின் இனிமையையும், காலந்தோறும் பெற்று வரும் வளர்ச்சியையும் அறிந்து கொள்வது சிறப்பானது. தாய்மொழிக் கல்வியில் மாணவர்கள் மொழித்திறன் பெறுவது முக்கியத்துவம் வாய்ந்தது என்னும் நோக்கில் இப்பாடத்திட்டம் தொகுக்கப்பட்டுள்ளது. இக்கையேடு வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்த மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்புமிகு முனைவர் கா.பிச்சுமணி அவர்களுக்கும், பதிவாளர் (பொ) முனைவர் அர.மருதகுட்டி அவர்களுக்கும், பாடத்திட்டக் குழுவினர் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடத்திட்டக் குழுவினர்

அலகு - 1

## செய்யுள் பகுதி

### 1. கடவுள் வாழ்த்து

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
   பகவன் முதற்றே உலகு
2. கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
   நற்றாள் தொழாஅர் எனின்
3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
   நிலமிசை நீடுவாழ் வார்.
4. வேண்டுதல வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
   யாண்டும் இடும்பை இல.
5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
   பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

திருவள்ளுவர்

### 2. தமிழின் இனிமை

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

**பாரதிதாசன்**

### 3. புறநானூறு

"பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பலசான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவீர் மாதோ

நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே”

நரிவெரூஉத் தலையார்

## 4. பட்டினப் பாலை – வணிகர் குடிச்சிறப்பு

நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கைப்
பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேசத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்

**கடியலூர் உருத்திரங்கண்ணனார்.**

## 5. குருதிக்கொடை

இறைக்கின்ற கிணற்றில்நீர் சுரப்பதைப்போல்
        இரத்தத்தைத் கொடுப்பதனாற் குருதி ஊறும்!
அரைக்கின்ற சந்தனந்தான் மணப்ப தைப்போல்
        அளிப்பதனாற் குருதியது தூய்மை யாகும்!
தருகின்ற குருதியதே உயிரைக் காக்கும்
        தன்னுடலுக்கு ஊறேதும் நேர்ந்தி டாது!
குருதிக்கொடை ஒன்றேதான் கொடையுள் மேலாம்
        குவலயத்துள் இதுபோன்ற கொடையொன் றில்லை!
மனிதனுக்கு மனிதன்தான் உதவல் வேண்டும்

மாடுகளா ஆடுகளா உதவும் வந்து?
புனிதமான இப்பணியில் தோய்தல் வேண்டும்
போகின்ற உயிரதனை மீட்டல் வேண்டும்!
மணிநேரம் வாழந்தாலும் மற்ற வர்க்காய்
வாழ்ந்திட்டோ மெனும்நிறைவை யடைதல் வேண்டும்
பணிகளுளே சிறந்ததுவாய் இதனைச் செய்வோம்
பலர்வாழ நாம்வாழும் பெருமை கொள்வோம்!

**வெற்றியழகன்**

## 6. உண்மையான உண்மைகள்

“ஒரு சின்னஞ் சிறிய செடி
மலரேந்தி மற்றவர்களுக்கு
மகிழ்ச்சி தராமல் இருக்கவே முடியவில்லை
ஒரு பென்னம் பெரிய மரம்
மற்றவர்களுக்கு நிழல்தராமல்
அந்தமரத்தால் வளரவே முடியவில்லை.!
..........
உன்னுடைய கணக்கிலே
ஆறறிவு இல்லாத உயிர்கள் இவை.......
மலரேந்தும் செடிகளுக்குப்
பட்டாடை போர்த்துவதில்லை நீங்கள்
நிழல் விரிக்கும் மரங்களையும்
வெட்டாமல் விட்டிடுவதில்லை நீங்கள்!
புறக்கணிப்பு புன்மைச் செயல்கள்
இவற்றின் மத்தியிலும்
இதயம் தளர்ந்திடவே இல்லை அந்த உயிர்கள்!
பார்த்தாயா?
உன்னைச் சுற்றி வளர்ந்து கிடக்கின்றன
உண்மையான உண்மைகளை நீ பார்தாயா?

சாலை இளந்திரையன்

அலகு : 2

**இலக்கணம்**

1. முதலெழுத்து
2. சார்பெழுத்து
3. சுட்டெழுத்து
4. வினா எழுத்து

## அலகு : 2 - இலக்கணப் பகுதி

## எழுத்து


எழுத்திலக்கணம் : எழுத்தின் பிறப்பு முதலாக விளக்கிக் கூறுவது எழுத்திலக்கணம் ஆகும். எழுதப்படும் காரணத்தால் எழுத்து எனப் பெயர் பெற்றது.எழுத்து ஒலிவடிவம் என இரு வடிவங்களைக் கொண்டுள்ளது. எழுத்து உச்சரிக்கப்படும்போது ஒலிவடிவம் பெறுகிறது. எழுதப்படும்போது வரிவடிவம் பெறுகிறது.

எழுத்து : "எழுதப்படுதலின் எழுத்தென மொழிப" சொல்லுக்குக் காரணமாகவும், அணுத்திரளின் காரியமாகவும், இருக்கின்ற ஒலியே எழுத்தாகும்.

நுட்பமான ஒலியணுக்களின் இணைத்த சேர்க்கையால் ஒரு தெளிவான ஒலி பிறக்கும். அவ்வொலியைக் குறிக்கும் உருவமே எழுத்தாகும். எழுத்தே சொல் பிறப்பதற்குக் காரணமாய் அமைவது அவ்வெழுத்து முதலெழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும்.

மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலி
எழுத்து அது முதல் சார்பு என இரு வகைத்தே

## எழுத்தின் வகைகள்


எழுத்து
முதல் (30)
சார்பு (10)
உயிர் (12)
மெய் (18)
குறில் (5)
நெடில் (7)
வல்லினம்(6)
இடையினம்(6)
மெல்லினம்(6)
1.உயிர்மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலுகரம்
6. குற்றியலிகரம்
7. ஐகாரக்குறுக்கம்
8.ஔகாரக்குறுக்கம்
9.மகரக்குறுக்கம்
10. ஆய்தக்குறுக்கம்

**உயிரெழுத்துக்கள் -12 அவை**

1. அ - அலை
2. ஆ - ஆலை
3. இ - இனம்
4. ஈ - ஈனம்
5. உ - உடல்
6. ஊ - ஊடல்
7. எ - எரி
8. ஏ - ஏரி
9. ஐ - ஐவர்
10. ஒ - ஒட்டு
11. ஓ - ஓட்டு
12. ஔ - ஔவையார்.

குறில் 5 எழுத்துக்கள், நெடில் 7 எழுத்துக்கள் ஆகிய 12 எழுத்துக்கள் தமிழ்மொழியிலுள்ள உயிர் எழுத்துகளாகும்.

அ, இ, உ, எ, ஒ - குறில்

ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஐ, ஔ - நெடில்

குறைந்த அளவு (1 மாத்திரை) ஒலிப்பதைக் குறில் என்றும், நீண்ட அளவு (2 மாத்திரை) ஒலிப்பதை நெடில் என்றும் கூறுவர்.

**மெய்யெழுத்துக்கள்** 18:- மெய்யெழுத்துக்களை அவற்றின் ஒலிப்புத்தன்மை அடிப்படையில் மூன்றாக வகைப்படுத்துவர்.

கசடதபற - வல்லினம்

ஙஞணநமன - மெல்லினம்

யரலவழள - இடையினம்

புள்ளி பெற்று அரைமாத்திரை நேரம் ஒலிக்கின்ற எழுத்துக்கள் மெய்யெழுத்துகள் எனப்டும்.

| | | | |
|---|---|---|---|
| க் - பக்கம் | ண் - பண்டம் | ய் - செய்வி | ள் - ஆள் |
| ங் - பங்கம் | த் - தத்தை | ர் - ஆர்(மரம்) | ற் - குற்றம் |
| ச் - அச்சு | ந் - தந்தை | ல் - ஆல்(மரம்) | ன் - குன்றம் |
| ஞ் - அஞ்சு | ப் - அப்பு | வ் - செவ்வி | |
| ட் - பட்டம் | ம் - அம்பு | ழ் - ஆழ் | |

மெய்யெழுத்துகளில் வன்மையான ஓசையுடையவை வல்லினமென்றும், மென்மையான ஓசையுடைய மெல்லினம் என்றும், அவை இரண்டிற்கும் இடைப்பட்ட ஓசையுடையவை இடையினம் என்றும் வழங்கப்படும். அவற்றை முறையேவல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என்றும் கூறுவர்.

தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை 247

| | | |
|---|---|---|
| உயிர் | - | 12 |
| மெய் | - | 18 |
| உயிர்மெய் | - | 216 |
| ஆய்தம் | - | 1 |
| மொத்தம் | | 247 |

## கூறு 2 முதலெழுத்து

'அ' முதல் 'ஔ' வரையுள்ள பன்னிரெண்டு உயிரெழுத்துகளும் 'க்' முதல் 'ன்' வரையுள்ள பதினெட்டு மெய்யெழுத்துகளும் ஆகிய முப்பதும் முதலெழுத்துகள் எனப்டும்.

## 'உயிரும் உடம்புமாம முப்பதும் முதலே'

மொழிக்கு உயிர் போன்றவை உயிரெழுத்துகள் உடல் போன்றவை மெய்யெழுத்துகள். இவை 216 உயிர்மெய்யெழுத்துகள் தோன்ற அடிப்டையாய் உள்ளன. இவ்வாறு மொழிக்கு முதற்காரணமாய் விளங்குவதால் இவை முதலெழுத்துகள் என்று வழங்கப்படுகின்றன.

## 2. சார்பு எழுத்துகள்

முதல் எழுத்துகளைச் சார்ந்து இயங்கும் எழுத்துகறள் சார்பெழுத்துகள் எனப்படும். சார்பெழுத்துகள் 10 வகைப்படும்.

“உயிர்மெய் ஆய்தம் உயிரள பொற்றள
ப.ஃகிய இஉஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும்”

1. உயிர்மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலுகரம்

6. குற்றியலிகரம்
7. ஐகாரக்குறுக்கம்
8. ஔகாரக்குறுக்கம்
9. மகரக்குறுக்கம்
10. ஆய்தக்குறுக்கம்

**உயிர்மெய்**

உயிரும் மெய்யும் சேர்ந்து பிறக்கக் கூடிய எழுத்து உயிர்மெய் எழுத்து எனப்படும். தமிழில் உயிர் பன்னிரெண்டும் மெய் பதினெட்டும் இணைந்து 216 உயிர்மெய்யெழுத்துக்கள் உள்ளன.

12 x 18 = 216

(எ.கா) க் + அ = க

க் + ஆ = கா

உயிர்மெய்யெழுத்துக்களைப் பிரித்துப் பார்த்தால் முதலில் மெய்யும் அடுத்து உயிரும் இருக்கும்.

க + க் = அ

இதனை மெய்யுயிர் என்று கூறுதலே முறையெனினும், இதில் சேர்ந்திருக்கும் உயிரெழுத்தின் தலைமையும் சிறப்பும் கருதி உயிர்மெய் என்று வழங்கப்படுகின்றது.

உயிர் மெய்யெழுத்துக்கள் அவற்றில் சேர்ந்திருக்கும் உயிரெழுத்தின் மாத்திரையளவே ஒலிக்கப்படும். சுருங்கக்கூறின் உயிர்மெய்க் குறில் ஒரு மாத்திரை.உயிர்மெய் நெடில் இரண்டு மாத்திரை.

(எ.கா)க் + அ = க (1 மாத்திரை)

க் + ஆ = கா (2 மாத்திரை)

## 2. ஆய்தம்

ஆய்த எழுத்தின் வரிவடிவம் ∴ என்பதாகும். மூன்று புள்ளிகளாக எழுதப்படும் ஆய்த எழுத்திற்கு அ.ஃ.கேனம், தனிநிலை, புள்ளி, ஒற்று என்னும் வேறுபெயர்களும் உண்டு.

ஆய்த எழுத்து தனிக்குறிலின் பின்னரும், கு, சு, டு, து, பு, று என்ற குற்றியலுகரம் பெற்ற ஆறு வல்லெழுத்துக்களின் முன்னரும் அமைந்து வரும்.

(எ.கா)

அஃது, எஃகு

எஃகு

குறில் ஆய்தம் வல்லின உயிர்மெய்

3. **உயிரளபெடை:**

உயிர் + அளபெடை = உயிரளபெடை. அளபெடை என்றால் “நீண்டு ஒலித்தல்” என்னும் பொருள்படும். உயிர் நெட்டெழுத்துக்கள் ஏழும் தமக்குரிய இரண்டு மாத்திரையிலி இருந்து நீண்டு ஒலிப்பதற்கு உயிரளபெடை எனப்படும். மொழி முதல், இடை, கடை ஆகிய மூன்று இடங்களிலும் உயிர்நெடில் அளபெடுக்கும். ஓர் உயிர்நெடில் அளபெடுப்பதைக் காட்டுதற்கு அதனை அடுத்து அவ்வெழுத்திற்கு இனமான குறில் எழுத்து எழுதப்படும்.

(எ.கா): ஓஒதல் வேண்டும் - முதல்
கொடுப்பதூஉம் - இடை
நல்ல படாஅ பறை - கடை

**உயிரளபெடையின் வகைகள்:**

இசைநிறையளபெடை அல்லது செய்யுளிசை அளபெடை, இன்னிசையளபெடை, சொல்லிசை அளபெடை என மூன்று வகைப்படும்.

**அ) செய்யுளிசை அல்லது இசைநிறை அளபெடை:**

செய்யுளில் ஓசை குறையும் போது, குறைந்த ஓசையை நிறைவு செய்தற்கு உயிர் நெட்டெழுத்து ஏழும் அளபெடுப்பது செய்யுளிசை அளபெடை எனப்படும்.

(எ.கா) “நற்றாள் தொழாஅர் எனின்”

**(ஆ) இன்னிசை அளபெடை:** செய்யுளில் ஓசை குறையாதவிடத்தும் ஓசை இனிமைக்காகக் குறில் நெடிலாய் மாறி அளபெடுப்பது இன்னிசை அளபெடையாகும். (செவிக்கு இனிய ஓசையைத் தருவதற்காக அளவெடுப்பது இவ்வகையாகும்)

(எ.கா) கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்”

உடுப்பதூஉம், உண்பதூஉம் - இதில் “து” என்னும் குறில் “தூ” என்ற நெடிலாகி “தூஉ” என்று அளபெடுத்துள்ளது.

**இ) சொல்லிசையளபெடை:**

செய்யுளில் ஓசை குறையாத பொழுதும், பெயர்ச்சொல்லை வினையெச்சச் சொல்லாக மாற்றுவத்கு அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.

எ.கா – "உரன் நசைஇ"

இதில் நசை (விருப்பம்) என்னும் பெயர்ச்சொல் அளபெடுத்தலால் "விரும்பி: என்னும் பொருள் தரும் வினையெச்சச் சொல்லாக மாறியது.

நசை - விருப்பம்

நசைஇ - விரும்பி

**4. ஒற்றளபெடை:**

ஒற்று + அளபெடை = ஒற்றளபெடை. ஒற்றெழுத்து தனக்குரிய அரைமாத்திரையில் இருந்து நீண்டு ஒலித்தல்.

செய்யுளில் ஓசை குறையும் பொழுது, அதனை நிறைவு செய்ய மெய்யெழுத்துக்களில் ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் ல் ள் என்னும் 10 எழுத்துக்களும், ஆய்த எழுத்து ஒன்றும் ஆகிய 11 எழுத்துக்களும் மொழிக்கு இடை, கடை ஆகிய இடங்களில் குறிற்கீழும் குறிலிணையின் கீழும் அளபெடுக்கும். இதனை ஒற்றளபெடை என்பர்.

ஒற்றெழுத்து அளபெடுத்ததைக் காட்ட அவ்வெழுத்தினை அடுத்து அதே எழுத்து எழுதப்படும்.

(எ.கா) கலங்ங்கு – குறிலிணைக் கீழ் இடை

கண்ண் - குறிற்கீழ்க் கடை

வெ∴ ∴குவார்க்கு – ஆய்தம் அளபெடுத்தால்

**5. குற்றியலுகரம்**

குறுமை + இயல்+ உகரம்= குற்றியலுகரம். குற்றியலுகரம் என்றால் குறுகிய ஓசையை உடைய உகரம் என்று பொருள். ஒரு மாத்திரை அளவு ஒலிக்க வேண்டிய உகரம் அரைமாத்திரை அளவாகக் குறைந்தொலிப்பது குற்றியலுகரமாகும்.

தனி நெடிலுடனோ. பல எழுத்துக்களைத் தொடர்ந்தோ சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்யோடு சேர்ந்து வரும் உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில இருந்து குறைந்து அரை மாத்திரை அளவே ஒலிக்கும். அதனைக் குற்றியலுகரம் என்பர். குசுடுதுபுறு என்னும் எழுத்துக்களுள் ஒன்றை இறுதியில் பெற்று வரும்.

(எ.கா) பாக்கு, பஞ்சு, பாட்டு, பந்து, அன்பு, எயிறு.

வகைகள்: குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

1. நாடு – நெடில் தொடர்க் குற்றியலுகரம்
2. எ∴கு – ஆய்தத் தொடர்க்குற்றியலுகரம்
3. வரகு – உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
4. பாக்கு – வன்றொடர்க்குற்றியலுகரம்
5. பந்து – மென்றொடர்க் குற்றியலுகரம்
6. சார்பு - இடைத்தொடர்க் குற்றியலுகரம்

**6. குற்றியலிகரம்:**

குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம் குறுகிய ஓசையுடைய இகரம் என்று பொருள். இகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் இருந்து அரை மாத்திரையாகக் குறைந்தொலிப்பது குற்றியலிகரமாகும்.

(எ.கா) நாடு+ யாது = நாடியாது

வீடு+ யாது = வீடியாது

நிலைமொழியின் ஈற்றெழுத்து குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதலெழுத்து யகரமாக இருந்தால், புணரும் போது நிலைமொழி ஈற்றிலுள்ள குற்றியலுகரம் இகரமாகத் திரியும். இகரம் தனக்குரிய 1 மாத்திரை அளவில் இருந்து ½ மாத்திரை அளவாக ஒலிக்கும்.

மியா என்னும் முன்னிலை அசைச் சொல்லில் மி - இல் உள்ள இகரம் அரைமாத்திரை அளவே ஒலிக்கும். இவ்வாறு குறைந்தொலிக்கும் இகரம் குற்றியலிகரமாகும்.

எ.கா: கொக்கு+ யாது = கொக்கியாது

கேள் + மியா = கேண்மியா

**7. ஐகாரக்குறுக்கம்**

ஐகாரம்+ குறுக்கம்= ஐகாரக்குறுக்கம். ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையில் இருந்து குறைந்து ஒன்றரை மாத்திரையாகவும், ஒருமாத்திரையாகவும் ஒலிக்கும். ஐகாரம் மொழிக்கு முதல், இடை, கடை ஆகிய இடங்களில் வரும் பொழுது, மொழிக்கு முதலில் ஒன்றரை மாத்திரை அளவும், ஏனைய இடங்களில் ஒரு மாத்திரை அளவும் ஒலிக்கும்

ஐகாரம் இவ்வாறு குறைந்து ஒலிப்பதே ஐகாரக் குறுக்கமாகும். ஐகாரம் தன்னைச் சுட்டிக் கூறும்போது மட்டுமே இரண்டு மாத்திரையளவு ஒலிக்கும்.

(எ.கா) ஐந்து– முதல் 1½ மாத்திரை

வளையல் - இடை – 1 மாத்திரை

வலை - கடை – 1 மாத்திரை

ஐ – 2 மாத்திரை

**8. ஔகாரக்குறுக்கம்:**

ஔகாரம் தன்னைச் சுட்டிக் கூறும் போது மட்டுமே இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கும். மொழிக்கு முதலில் வரும் பொழுது ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கும். அதுவே ஔகாரக் குறுக்கமாகும். ஔகாரம் மொழிக்கு இடையிலும், கடையிலும் வராது,

(எ.கா) ஔவை – மொழிக்கு முதலில் - 1½ மாத்திரை

“தற்சுட் டளமொழி ஐம்மூ வழியும்
நையும் ஔவும் முதல்அற் றாகும்”.

**9. மகரக்குறுக்கம்**

மகரம்+ குறுக்கம் = மகரக்குறுக்கம்

“ம்” தனக்குரிய ½மாத்திரை அளவில் இருந்து ¼மாத்திரையாகக் குறைந்தொலிப்பது மகரக் குறுக்கமாகும்.

1. போலும், மருளும் என்ற சொற்கள், செய்யுளில் வரும்போது உகரம் கெட்டு போல்ம், மருள்ம் என்றாகிப் போன்ம், மருண்ம் என்று திரியும். ஈற்றிலுள்ள மகரம் அரை மாத்திரையில் இருந்து குறைந்து கால் மாத்திரை அளவே ஒலிக்கும்.
2. தரும் வளவன், வரும் வண்டி

நிலைமொழி ஈற்றில் மகரமும், வருமொழி முதலில் வகரமும் வந்தால் அவை புணருகின்ற போது, நிலைமொழி ஈற்றிலுள்ள மகரம் ½ மாத்திரையில் இருந்து குறைந்து ¼ மாத்திரை அளவே ஒலிக்கும். இவ்வாறு குறைந்தொலிக்கும் மகரம் மகரக்குறுக்கம் எனப்படும்.

**10. ஆய்தக்குறுக்கம்:**

ஆய்தம் + குறுக்கம் = ஆய்தக்குறுக்கம். ஆய்த எழுத்து தனக்குரிய அரைமாத்திரையில் இருந்து ¼ மாத்திரையாகக் குறைந்தொலிப்பது ஆய்தக் குறுக்கமாகும்.

கல்+ தீது = க.ः.றீது

முள் + தீது = மு.ः.டீது

நிலைமொழியில் தனிக்குறிலின் கீழ்வரும் லகரமும் ளகரமும் தகர முதன்மொழியோடு புணரும் போது ஆய்தமாக மாறியுள்ளன. அவ்வாறு மாறிய ஆய்தம் அரை மாத்திரையில் இருந்து குறைந்து கால் மாத்திரை அளவு ஒலிக்கும். அதுவே ஆய்தக் குறுக்கமாகும்.

"லளவீற் றியைபினாம் ஆய்தம் அ.ः.கும்" –(நன்னூல் 97)

**சுட்டெழுத்துகள்:**

சுட்டிப் பொருள் உணர்த்த வருவன சுட்டெழுத்துக்கள் எனப்படும். தமிழில் மூன்று சுட்டெழுத்துகள் உள்ளன. அவை அ, இ, உ, என்பன.

அ – சேய்மை (அவன், அவள், அவர், அது, அவை)

இ - அண்மை (இவன், இவள், இவர், இது. இவை)

உ –உடைமை (உவன், உவள், உவர், உது, உவை)

உகரச் சுட்டு இக்காலத்து வழக்கிலில்லை.

**சுட்டெழுத்தின் வகைகள்:**

சுட்டு அகச்சுட்டு, புறச்சுட்டு என இருவகைப்படும். ஒரு சொல்லின் அகத்தே சுட்டு அமைந்து வருமேயானால் அகச்சுட்டு என்றும், ஒரு சொல்லின் புறத்தே சுட்டு அமைந்து வருமேயானால் புறச்சுட்டு என்றும் வழங்கப்படும்.

அவன், அது, அந்த
இவன், இது, இந்த } அகச்சுட்டு

அப்பையன், அக்காலம்
இவ்வுலகம், இவ்வூர் } புறச்சுட்டு

(அ+ பையன்,அ + காலம், இ + உலகம், இ + ஊர்)

மேலும் செய்யுளில் சுட்டு நீண்டு வருதலும உண்டு.

ஆ,ஈ, ஊ, ஆங்கு,ஈங்கு, ஊங்கு,

"அஇ உம் முதல் தனிவரிற் சுட்டே"

**4. வினா எழுத்துகள்:**

வினாப்பொருள் உணர்த்த வருவன வினா எழுத்துகள் எனப்படும். தமிழில் சொல் முதலிலும், சொல் இறுதியிலும் நின்று வினாப்பொருள் உணர்த்தும் எழுத்துக்கள் உள்ளன.

சொல் முதலில் வரும் வினாவெழுத்துகள்:

யா, எ, ஏ என்னும் எழுத்துக்கள் சொல்லின் முதலில் வரும்.

யா– யாவன், யாவள், யாவர், யாது, யாவை, யாங்ஙனம்

எ – எவன், எவள், எவர், எது, எவை, எங்கு, எப்படி, எவ்வாறு

ஏ –ஏன், ஏது

சொல் இறுதியாக வரும் வினாவெழுத்துக்கள்

ஆ, ஓ, ஏ என்னும் எழுத்துக்கள் சொல்லின் இறுதியில் வரும்.

ஆ –அவன் வந்தானா?

ஓ – அவன் வந்தானோ?

ஏ –அவன் வந்தானே?

ஏ என்னும் வின எழுத்து சொல்லின் இறுதியில் இக்கால வழக்கிற் பலவிதமாக மாறுபட்டு வருகிறது. அவன் வந்தானே? என்பது போல் வழங்காமல், அவன் தானே வந்தான்? என்ற முறையில வழங்கி வருகிறது.

**வினாவெழுத்தின் வகைகள்:**

வினாவும் அகவினா, புறவினா என இரண்டு வகைப்படும். சொல்லோடு வினாவெழுத்து சேர்ந்து, பிரிக்க முடியாமல் நிற்பது அகவினா, சொல்லோடு வினாவெழுத்து சேர்ந்து பிரிக்கக்கூடிய நிலைமையில் நிற்பது புறவினா

எவன்?யாவர்? ஏது?–அகவினா

எம் மனிதன்? வந்தானா? – புறவினா

(எ. மனிதன்) (வந்தான் - ஆ)

ஆ, ஓ என்னும் எழுத்துக்கள் புறவினானவாகவே வரும்.

“எயா முதலும் ஆஓ ஈற்றும்

ஏஇருவழியும் வினாவாகும்மே”

வினாவைக்குறிக்கும் அடையாளம் வினாக்குறி (?) வினாவாக்கியங்களில் வினாக்குறி கண்டிப்பாய் அமைய வேண்டும்.

## அலகு :3 - இலக்கிய வரலாறு

## சங்க இலக்கியங்களின் சிறப்பியல்புகள்

### முன்னுரை

சங்க காலத்தில் எழுந்த இலக்கிய நூல்களைப் பாட்டு, தொகை எனப்பகுத்துள்ளனர். அவற்றுள் பத்துப்பாட்டு 8552 வரிகளையும், எட்டுத்தொகை 2426 தனிநிலைச் செய்யுள்களையும் தன்னகத்தே கொண்டு திகழுகின்றன. இவற்றை ஏறத்தாழ 461 புலவர்கள் இயற்றியுள்ளனர். இவர்களில் கபிலர், பரணர் ஔவையார், நக்கீரர் போன்றோர் குறிப்பிடத்தக்க புலவர் பெருமக்கள் ஆவர்.பெரும்பான்மையான பாக்களை அவர்களே படைத்துள்ளனர். மேற்குறிப்பிட்ட நூல்களின் தனிப்பட்ட சிறப்பை அவற்றுக்கென்று பொதுவாக அமைந்த சில இயல்புகளை, விரிவாகக் காண்போம்.

### பொருட்சிறப்பு:

பண்டைக்காலத்தில் வாழ்ந்த உலகமக்கள் அனைவரும் தங்கள் வாழ்க்கை இலட்சியங்களாகக் காதலையும், போரையும் கருதினர். பழம் பெருமை பெற்ற கிரேக்க இலத்தீன் இலக்கியங்கள், போற்றியுரைப்பது போலச் சங்கக் கவிஞர்களும், இவ்விரு கருத்துக்களையே தங்கள் கவிதைகளில் சிறப்பாகப் பாடியுள்ளனர். காதல் உணர்ச்சியைப் பத்துப்பாட்டில் வரும் மூன்று நெடும் பாட்டுக்களும், எட்டுத்தொகையில் ஐந்து தொகை நூல்களும், பரிபாடலில் பெரும்பாலான பாக்களும் சித்திரிக்க; புறப்பொருளான போர் நிகழ்ச்சியைப் புறநானூறும் பதிற்றுப்பத்தும் வருணிக்கின்றன. சங்கப் புலவர்கள் காதலை அகம் என்றும் வீரத்தை புறம் என்றும் பகுத்து, இலக்கியங்களை இயற்றி உள்ளனர்.

### திணைப்பிரிவு:-

மக்களுடைய பழக்க வழக்கங்கள் பண்பாடு முதலியன அவர்கள் வாழுகின்ற நில அமைப்பைப் பொறுத்துள்ளன என்ற அரிய உண்மையை வரலாற்று அறிவுக் கெட்டாத காலந்தொட்டே பண்டைத் தமிழ்மக்கள் உணர்ந்து, தமிழ்நாட்டு நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைகளாகப் பகுத்து, அந்தந்த நிலச்சூழ்நிலைக்கு ஏற்ப, மனித உள்ளத்தெழும் உணர்ச்சிப் பெருக்குகளை ஐவகை

ஒழுக்கங்களையும் வகுத்துக் கவிதை புனைந்துள்ளனர். இத்தகைய சிறந்த இலக்கியப் பாகுபாட்டைச் சங்க இலக்கியங்களில்தான் கண்டு களிக்கமுடியும். குறிஞ்சிநிலவொழுக்கத்தைக் கபிலரும், முல்லையை நல்லுருத்திரனாரும், பாலையைச் சேரன் கடுங்கோவும், மருதத்தை மருதனிள நாகனாரும், நெய்தலை அம்மூவனாரும், நல்லந்துவனாரும் அழகாக வருணிப்பதில் ஈடு இணையற்ற புலவர்களாவர்.

**சமத்துவப் பண்பு**

தமிழ்நாட்டின் பிற இலக்கிய காலங்களிலும், மற்ற உலக இலக்கயங்களிலும் கம்பன், காளிதாசன், வர்ஜில்,ஹோமர் போன்ற பெருங் கவிஞர்கள் முதன்மை பெற்றுத் திகழ்வர். ஆனால் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் தத்தமக்கென்று உரிய தனி உருவத்தோடு விளங்காது, சங்கக் கவிஞர்கள் என்ற ஓர் உருவமாகவே திகழ்கின்றனர். தமிழ்நாட்டில் சங்காலத்தில் தான் உலக வரலாற்றிலே காணமுடியாதபடி புலவர்கள் அனைவரும் ஒன்றாகக்கூடி, அரசனுக்கும் ஆண்டிக்கும் பொதுவாக விளங்கும் இலக்கிய விதி வகுத்துக் கூட்டு முயற்சியாகக் கவிதை புனைந்துள்ளனர். கவிஞர்கள் இயற்றும் காவியங்கள் அவர்களின் உருவத்தைத் தனித்தன்மைபட எடுத்துக் காட்டுவனவாகும். இத்தகைய காவிங்கள் சங்க காலத்தில் இல்லாமை, சங்கப் புலவர்களிடையே நிலவிய அறிவியல் சமத்துவத்தையே காட்டுகிறது. கணக்கற்ற அலைகள் கூடிக் கடலாகக் காட்சியளிப்பது போல, சங்கக் கவிஞர்கள் அனைவரும் ஒன்றாகத் திரண்டு தத்தமக்கு உரிய தனி இயல்பை இழந்து, சங்க இலக்கியம் என்ற ஒரு பேருருவமாகவே காட்சியளிக்கின்றனர்.இத்தகைய புதுமை இயல்பை நாம் சங்க காலத்தில் தான் காணமுடியும்.

**வருணனை இயல்பு**

இயற்கை அன்னை ஈன்ற அருந்தவப் புதல்வர்கள் சங்க காலப் புலவர்கள். அவ்வன்னையின் அரவணைப்பில் வாழ்ந்து சிறந்த அப்பெருமக்கள் தாங்கள் இயற்றிய நூல்களில், இயற்கைக் காட்சிகளின் எழிலை உவமைகளாக உருவகங்களாக, வனப்புமிக்க வருணனைகளாக வடித்துத் தந்துள்ளனர். இயற்கை வருணனையில்லாத பாக்களைச் சங்க இலக்கியங்களில் பார்ப்பது அரிது. இயற்கையை வருணிக்கும், திறத்தில் சங்கக் கவிஞர்கள் அகப்பொருள் இலக்கியங்களுக்கேயுரிய, உவமத்தையும்

(உள்ளுறை யுவமம்), அவ்வுமைக்கு அப்பாலும் ஓர் அரிய உட்கருத்தை உணர்த்தும் இறைச்சி என்ற இருவகைப் பொருள்களையும், உள்ளடக்கி உரைப்பர். இத்தகைய இயற்கைச் சிறப்பை நாம் சங்க காலத்தில் மட்டுமே காணலாம். எக்கருத்தையும் நேருக்கு நேராகக் கூறிக் கேட்போர் நெஞ்சத்தைப் புண்படுத்தாது, பண்பட்ட முறையில் நயமாகக் கூறுவதே சங்க கால நாகரிகமாகும். அகப்பொருள் பாக்களில் வரும் தோழியின் கூற்றுக்கள் அனைத்தும் இந் நயமான போக்கில் திகழ்தலைக் காணலாம்.

புலனுக்கு எட்டாத மயக்கப் பொருள்களில் மனத்தைச் செலுத்திச் சங்கப் புலவர்கள் குருட்டாட்டம் ஆடுவதில்லை. நம்பத்தகாத செய்திகளை நவில்வதில்லை. மிகைபடக் கூறுதலையும் மேற்கொள்வதில்லை. உலக இயற்கையையும், மக்கள் வாழ்க்கையையும் ஒட்டியே இலக்கியங்களை இயற்றியுள்ளனர்.

சங்கக் கவிஞர்கள் தங்கள் கண்ணால் கண்ட போர்களையும் ஊர்களையுமே உவமையாகக்கூறும் இயல்பினர். “வஞ்சிமா நகர் போன்ற அழகிய தலைவி”“வெண்ணிப்பேர் ஆரவாரத்தை ஒத்த அலர்” என உவமை கூறுவது சங்கப் புலவர்கள் மரபாகும். சங்க இலக்கியங்களில் அணிகளுக்கெல்லாம் தாயான உவமையணி தவிரப் பிற அணிகள் பெரும்பாலும் வருவதில்லை.

**உரிப்பொருள் உணர்வு**

நிலத்தை, அந்நிலத்தில் காணும் பற்பல வகைக் காட்சிகளையும் **(**முதல், கருப்பொருள்கள்) வருணிக்கும் சங்கக் கவிஞர்கள் அந்நிலத்தில் வாழும் மக்களின் உள்ளத்தில் அலைமோதும், உணர்ச்சிகளுக்குக் (உரிப்பொருள்) கலை மெருகு கூட்டுவதிலேயே கருத்தாக இருப்பர். ஆங்கில நாடக மேதையான சேக்ஸ்பியர் போன்று, மனித உணர்ச்சியின் ஆழ அகலத்தைத் தெளிவாகப் புலப்படுத்தும் பின்னணியாக இயற்கையைக் கையாண்டுள்ளனர். சங்கக் கவிஞர்களுக்கு இயற்கையல்ல. மனித உள்ளந்தான்மிக முக்கியம், நெடுதல் வாடை, முல்லைப்பாட்டு போன்ற நெடும் பாட்டுக்களும், கபிலர் கவிதைகளும் இவ்வுண்மையைத் தெளிவுப்படுத்தும் சான்றுகளாகும். சங்கப் புலவர்கள்,ஆழமாகவும், நுட்பமாகவும், அழகுற வருணித்த அகத்துறை இலக்கியங்கள், உலகிலேயே ஒப்பற்றன என உலக மக்களுக்கு உணர்த்துகிறார் பன்மொழி அறிஞர் தனிநாயகம் அடிகள்.

**காலக்கண்ணாடி**

சங்க கால மக்கள் வாழ்ந்துவந்த வாழ்வைத் தெளிவாகப் புலப்படுத்தும் காலக் கண்ணாடிகள் சங்க இலக்கியங்களாகும். உள்ளதை உள்ளவாறே உரைத்தல் சங்க இலக்கியங்களின் தலையாய சிறப்பு என அறிஞர்கள் பாராட்டி மொழிகின்றனர். இனம், குலம் என வேற்றுமை இல்லாமல்,கவிதைத் தெய்வத்தின் முன்னர், சங்கக் கவிஞர்கள் யாவரும், சமமாக விளங்கித் தங்கள் தங்கள் இதயங்களையே, காணிக்கைப் பொருளாக அளித்துள்ளனர். புறநானூறு இதற்குத் தக்க சான்றாகும்.

**நாடகப்போக்கு**

சங்க இலக்கியங்களில் வரும் அகப்பொருள் பாக்கள் எல்லாம் தலைவனும், தலைவியும், தோழியுமாகப் பேசுகின்ற நாடகப் போக்கிலேயே அமைந்துள்ளன. அவற்றை நாடகத் தனிநிலைச் செய்யுட்கள் (Dramstic Mobologues) என வழங்குவர். இச்செய்யுட்களின் உயிர் நாடியாகு விளங்கும் தோழியின் கூரிய அறிவும் சீரிய பண்பும் செறிந்த குணச்சித்திரத்தை இலக்கியம் கற்ற எவராலும் மறக்கமுடியாது.

**இயற்கை ஓசை**

சங்கப் பாக்கள் இயல்பான பேச்சிலுள்ள இயற்கை ஓசையோடு இயைந்து செல்லும் தன்மை தமிழுக்கு இயல்பாக அமைந்த நேரிய பெருமித நடையாகும். செல்ல வல்லன. ஔவையார், கபிலர் பாடிய பாக்கள் இவ்வுண்மைக்கேற்ற சிறந்த சான்றுகளாகும்.

**மொழித் தூய்மை**

சங்கப் பாடல்களில் வரும் சொற்கள் அனைத்தும் தமிழ்ச் சொற்கள். வடமொழிச் சொற்கள் அருகி வழங்குன்றன. சொல்லும், பொருளும் ஒன்றையொன்று தழுவிச் சென்று பொருள் முடியும் இடத்தோடு சொல்லும் முடிவது சங்க இலக்கியங்களின் தலையாய சிறப்பியல்பாகும்.

**இடம், காலத்தை வென்றவை**

“யாதும் ஊரே! யாவரும் கேளிர்!” என்னும் உலகப் பொதுமையையும், “உலகம் ஒன்று: அதில் வாழும் மக்கள் அனைவரும் உறவினர்” என்ற பேருண்மையையும் உணர்த்தும் பெருமை வாய்ந்தது சங்க இலக்கியம். காலம், நாடு போன்றவற்றைக் கடந்து, இலக்கிய இன்பம் அளிக்கும் ஆற்றல் பெற்றவை சங்க இலக்கியங்கள். தற்காலத் தன்மை

என்ற சிறப்பியல்பை பெற்றுப் பழைமைக்கும் பழைமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய் பொலிவும், புத்தம்புதுக்கருத்தும் தாங்கி, என்றும் சீரிளமைத் திறத்தோடு விளங்குவன சங்க இலக்கியங்களே யாகும்.

சங்க இலக்கியங்களின் இத்தகைய பல்வேறு சிறப்பியல்புகளும், சங்கப் புலவர்களின் சீரிய பண்புகளுந்தாம் சங்க காலத்தைத் தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே ஒரு பொற்காலமாக உயர்த்தி இருப்பதைத் காண முடிகிறது.

## 2. இரட்டைக் காப்பியங்கள்

### 1. சிலப்பதிகாரம்

**இந்நூல் எழுந்த வரலாறு**

காதற் கணவனான கோவலனோடு கண்ணகி விண்ணகம் சென்ற காட்சியைக் கண்ட குறவர்கள், மலைவளம் காணவந்த சேரன் செங்குட்டுவனிடம் கூற, அம் மன்னன் அருகிருந்த தண்டமிழ் ஆசான் சாத்தானார், கண்ணகிக்கும் கோவலனுக்கும், பாண்டிய மன்னனுக்கும் அவன் மனைவிக்கும் சிலம்பு காரணமாக நிகழந்த துயரச் செய்திகளையெலாம் யாம் அறிவோம் என்று தொடர்ந்துரைக்க, இதைச் செவி மடுத்த இளங்கோவடிகள், மனித வாழ்க்கையை இயக்கும் முப்பெரும் உண்மைகளைக் கொண்ட ஒப்பற்ற கதையிது" என்று உளம் மகிழ்ந்து சாத்தானார் இட்ட வேண்டுகோளின்படி இந்நூலை இயற்றியதாகச் சிலப்பதிகாரப் பதிகம் கூறுகிறது. அம்முப்பெரும் உண்மைகளாவன.

அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டு மென்பதூஉம் - ஆம்

**இந்நூல் அமைப்பு**

சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம், என்ற மூன்று காண்டங்களைக் கொண்டது. மங்கல வாழத்துப் பாடல் தொடங்கி நாடுகாண் காதை முடிய 10 காதைகளைப் புகார்க் காண்டமும், காடுகாண்காதை தொடங்கிக் கட்டுரை காதை முடிய 13 காதைகளை மதுரைக்காண்டமும், குன்றக் குரவை தொடங்கி வரம்தரு காதை முடிய 7 காதைகள் வஞ்சிக் காண்டமும், ஆக மொத்தம் 30 காதைகளைக் கொண்டு இந்நூல் திகழ்கிறது.

**சிலம்புக் கதை**

கோவலன், கண்ணிகியை மாநகரே வாழ்ந்த மணம் புரிந்த பின்னர், மாமலர் நெடுங்கண் மாதவிமேல் மையலுற்றுக் கண்ணகியைத் துறந்து வாழ்கின்றான். ஆனால், யாழின் மேலே ஊழ்வந்து உருத்த மாதவியை வெறுத்துத் தன் மனையகம் அடைந்து, பொழுது புலரும் முன்னே, கண்ணயோடு புகார் நகரைவிட்டு வெளியேறுகின்றான். இது புகார்க் காண்டமாகும்.

மதுரையை அடைந்து, மாதரி மனையிலே தங்கிச் சிலம்பு விற்கச் சென்ற நேரத்தில், பொற்கொல்லனால் கள்வன் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கோவலன் கொலை செய்யப்படுகின்றான். அடங்காச் சீற்றங்கொண்ட கண்ணகி அரசவையில் தோன்றி, உண்மையை நிலைநாட்டி, மதுரையை எரித்து, வஞ்சிமா நகர் நோக்கி, வறிதே செல்கிறாள். இது மதுரைக்காண்டமாகும்.

குறவர்கள் மொழிந்த செய்தியையறிந்த சேரன் செங்குட்டுவன், அரசியின் விருப்பத்தை ஏற்று, வடநாடு சென்று காவா நாவின் கனக விசயர்மேல் கல்லைஏற்றிக் கங்கையில் நீராட்டித் தென்னகம் திரும்பி, வஞ்சிமா நகரில் கண்ணகிக்குக் கோயில் எழுப்புகிறான். இப் பெருவிழாவைச் சிறப்பிக்கத் தமிழக வேந்தர்களும், கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் வருகின்றனர். கண்ணகியும் தெய்வ வடிவில் தோன்றி, மன்னவர்களுக்குப் பிழையா வரந்தந்து வாழ்த்தி மறைகின்றாள். இதுவே வஞ்சிக் காண்டமாகும்.

## சிலப்பதிகாரச் சிறப்பு

**முதல் காவியம்**

தமிழ்மொழியில் முதன்முதலாகத் தோன்றிய காவியம் சிலப்பதிகாரமாகும். கதையில் வரும் திருப்ப நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிலம்பே காரணமாதலின். புரட்சிகரமாயுள்ளது. கதைக் கருவால் பெயர்பெற்று விளங்கும் பெருமை சிலப்பதிகாரத்தையே சாரும்.

**இயல்தமிழ்க் காப்பியம்**

காவியத்தின் தொடக்கமே கவர்ச்சி மிகுந்து விளங்குகிறது. “திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்“ என்று ஆரம்பமாகும் அரச வாழ்த்து, ஒரே சமயத்தில் இறைவாழ்த்தாகவும் இயற்கை வாழ்த்தாகவும் திகழ்வது, இளங்கோவின் கற்பனைத் திறத்தையே புலப்படுத்துவதாகும்.

மணவறையில் “காதல(ன்)ற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல் தீதறுக” எனத் தோழியர் வாழத்துவது ஆசிரியரின் ஒப்பற்ற நாடக நயத்திற்கு ஓர் உயரிய சான்றாகும். மனையறம் படுத்த காதையில் கண்ணகியின் அங்க அழகை, மாசறு பொன்னே! வலம்புரி முத்தே” என்று கோவலன் பலபடப் பாராட்டுவதையும் கேட்கின்றோம். பின்னர் அடைக்கலக் காதையில், “பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!” எனக் கோவலன் அக அழகைப் பாராட்டுவதையும் கேட்கின்றோம். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையில் தான் இளங்கோவின் குணச்சித்திரத்திறமையைக் கண்டு வியக்கின்றோம். அரங்கேற்று காதையில் ஆடலாசிரியன், இசையாசிரியன், நன்னூற் புலவன் போன்றோரின் இலக்கணத்தையும், ஆடும் அரங்கத்தின் இயல்பையும், விளக்கிச் செல்லும் இளங்கோவின் கலையறிவைக் கண்டு பெருவியப்பில் மூழ்குகின்றோம்.மாதவியின் ஆடல் பாடல் திறத்தை எத்தகைய அழகுநயத்தோடு கூறுகிறார், பாருங்கள்.

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின்று இசைத்தது ஆமந் திரிகை….

என்று அடுக்கிக் கொண்டே போய்
பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக்
“காட்டினாள்” என முடித்துக் காட்டுவது, உச்ச நிலையாகும்.

“அந்திமாலைச் சிறப்புச் செய் காதை” காவிய உலகம் கண்டிராத ஒரு கற்பனைப் படைப்பாகும். அக் காதையின் தொடக்கமும் முடிவும் கலைமெருகு ஏறிய காப்பியப் பகுதியாகும். மாதவியும் கோவலனும் போட்டியிட்டுப் பாடும் கானல் வரிப் பாக்கள், இசை இனிமை இழைந்து செல்லும் இன்பத் தேக்கங்களாகும்.

மதுரைமா நகரத்தில், கை சிவக்க, கண் சிவக்கக் கறி சமைத்து உணவாக்கிக் கண்ணகி உடல்ட வியர்க்கக் கோவலனுக்கு உணவு பரிமாறி ஒன்றாக உரையாடும் கலையழகு வாய்ந்த கொலைக்களக் காதை, படிப்போரின் ஊனையும் நெஞ்சத்தையும் உருக்கிவிடும். கோவலன் கொலையுண்ட நிலையில் ஒருத்தி வந்து சொல்லாடாமல் நிற்பதைப் பார்த்துச் சோர்வுற்ற கண்ணகி.

“காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்

ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சன்றே
ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சாயின்
ஏதிலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ?

தஞ்சமோ தோழீ! தலைவன் வரக் காணேன்
வஞ்சமோ உண்டு மயங்குமென் நெஞ்சன்றே
வஞ்சமோ உண்டு மயங்குமென் நெஞ்சாயின்
எஞ்சிலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ?

என்று துடிதுடித்துக் கேட்கின்றாள். கள்வனென்று கணவனைக் கொன்றனர் என்னும் செய்தியைக் கேட்டதும், பொங்கியெழுந்தாள் விழுந்தாள் செங்கண் சிவக்க அழுதாள்.

“பட்டேன் படாத துயரம் படுகாலை
உற்றேன் உறாதது உறுவனே ஈதொன்று!
கள்வனோ அல்லன் கணவனென் காற்சிலம்பு
கொள்ளும் விலைபொருட்டாற் கொன்றாரே ஈதொன்று!

எனப் பல்வாறு அரற்றிக்கொண்டு ஊர்மக்களை நோக்கிக் கேட்கிறாள்.

பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?
................
சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டு கொல்?
..................
தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?

எனச் சீறி நின்றாள். நினைத்தாள் நெடுங்கயற்கண் நெடுங்கயற்கண் நீர்துடையாச் சென்றாள் அரசன் செழுங்கோயில் வாயில் முன்” என்று சோகச் சுவையும், வீரச் சுவையும், போட்டி போட, இளங்கோ கதையை நடத்திக் கொண்டே செல்கின்றார். பின்னர், அரசவைக்குச் சென்று கண்ணகி வழக்காடி வெற்றி பெறுகின்றாள். இவ் வழக்குரை காதை இளங்கோவின் சொல் திறத்திற்கும் நாடக நயத்திற்கும் இணையற்ற சான்றாகும். இத்தகைய எண்ணற்ற கனிவு மிக்க இயல்தமிழ்ப்பாக்களை இந்நூலில் உளம் மகிழ நுகரலாம்.

**இசைத் தமிழ்க் காப்பியம்**

சிலப்பதிகாரம் கானல்வரி, ஆற்றுவரி, அம்மானைவரி, கந்துகவரி, குரவைப்பாட்டு, வள்ளைப்பாட்டு முதலான இசைப்பாட்டுக்களையும் கொண்டு திகழும் இசைத்தமிழ்க் காப்பியமாகும். பற்பல வகைப்பண்களையும், இசைக்கருவிகளையும் அறிந்து கொள்ளத் துணைபுரியும் இசைத் தமிழ்க் களஞ்சியமாகும்.

**நாடகக் காப்பியம்**

சிலம்பு, இயல்தமிழ்க் காப்பியம் மட்டுமன்றி இசைத்தமிழ்க்காப்பியம் மட்டுமன்றி தமிழில் தோன்றிய முதல் நாடகக் காப்பியமும் ஆகும். வழக்குரை காதையில் ஆசிரியர் கையாளுவது போன்ற உரையாடல்களும், கோவலன், மாதவி கண்ணகி முதலியோர் வாழ்க்கையில் ஏற்பட்ட கதை நிகழ்ச்சிகளை வரலாற்று ஆசிரியன் போன்று வரிசையாகச் சொல்லாமல், இடத்திற்கும், பாத்திரத்திற்கும் ஏற்றாற்போல் ஆங்காங்கு ஆசிரியர் மாற்றியமைத்துச் செல்லுவதே இந்நூலைச் சிறந்த நாடக நூலாக ஆக்கிவிட்டது. இந்நூலை ஒரு நாடக இலக்கியம் என்று முற்றிலும் கூற முடியவில்லை என்றாலும், சிறந்த நாடகக் காப்பியம் என அழைக்கலாம். இவ்வாறு இயல், இசை, நாடகம், என்ற மூவகைத் தமிழும் கலந்து விளங்கும் சிலப்பதிகாரத்தை, முத்தமிழ்க்காப்பியம் எனவும் வழங்கலாம்.

**தேசியக் காப்பியம்**

சோழநாட்டுச் சிறப்பைப் புகார்க் காண்டத்திலும், பாண்டிய நாட்டுப் பெருமையை மதுரைக் காண்டத்திலும், சேரநாட்டுச் செம்மையை வஞ்சிக் காண்டத்திலுமாக இளங்கோ பாடியுள்ளார். சோழநாட்டு மண்ணில் பிறந்த கண்ணகி, பாண்டிய நாட்டு மதுரைக்கு வந்து கணவனைப் பறிகொடுத்துச் சேரநாடு சென்று, வானவர் தொழுதேத்தும் பத்தினித் தெய்வமாக மாறுகிறாள். தமிழகத்து முப்பெரும் நாட்டையும் பின்னிப் படரும் சிலம்புக் கதையை, இளங்கோ தம் இணையிலாக் கவிதைத் திறத்தால், இறவாத காவியமாக இயற்றிவிட்டார். இத்தகைய சிலம்புக் காவியத்தைச் செந்தமிழ் நாட்டுத் தேசியக் காப்பிம் (Natilonal Epic) எனவும் நாம் சிறப்பித்துக் கூறலாம்.

**மூவேந்தர் காப்பியம்**

சேரநாட்டைச் சேர்ந்த செம்மல் செங்குட்டுவனையும், அறந்தவறிய பாண்டிய நாட்டரசனையும், காவிரி நாட்டுக் காவலரையும் ஒன்றாக இணைத்துப் பாராட்டிய சிலப்பதிகாரக் காவியத்தை தமிழ்நாட்டு மூவேந்தர் காப்பியம் எனவும் பாராட்டி மகிழலாம்.

**குடிமக்கள் காப்பியம்**

ஆனால், மூவேந்தர் புகழ்பாடும் சிலப்பதிகாரம், ஒரு முடிமன்னர் காப்பியமன்று குடிமக்களுள் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்கிய கோவலன் கண்ணகியையே கதைத் தலைவர்களாகக் கொண்ட குடிமக்கள் காப்பியமாகும். தமிழ் மொழியில் முதன் முதலில் தோன்றிய சிலம்புக் காவியம், குடிமக்கள் காப்பியமாகவும் விளங்குவது தமிழ் மொழிக்கமைந்த பெரும் பேறேயாகும்.

**பெண் பெருமை பேசும் நூல்**

மண்ணக மகளிருள் ஒருத்தியாகப் புகார்க் காண்டத்திலே விளங்கி, மனித நிலையைக் கடந்தவளாக மதுரைக் காண்டத்திலே தோற்றந் தந்து, வானவர் தொழுதேத்தும் பத்தினித் தெய்வமாக வஞ்சிக் காண்டத்தில் காட்சி தரும் கதைத் தலைவியாகிய கண்ணகியின் படிப்படியான பத்தினித் தெய்வ வளர்ச்சியைப் பாராட்டி உரைப்பதே இச்செந்தமிழ்க் காவியத்தின் சீரிய குறிக்கோளாகும். இவ்வாறு பெண்ணின் பெருமையை முதன் முதலாகக் காவிய வடிவில் உலகிற்கு உணர்த்திய பெருமையும் இக் காப்பியத்தையே சாரும்.

**வரலாற்றுக் காப்பியம்**

கானல் வரி, கடலோடு காதையில், மருத நில மக்கள் வாழ்வையும், குன்றக் குரவையில், குறிஞ்சி நில மக்கள் வாழ்வையும், ஆய்ச்சியர் குரவையில், முல்லை நிலமாந்தர் வாழ்வையும், வேட்டுவ வரியில், பாலை நிலமக்கள் வாழ்வையும், புகார், மதுரை நகர வருணனைகளால், நகர மாந்தர்களின் நாகரிக வாழ்வையும் வளமுறச் சித்தரித்துக் காட்டும் இச்சிலப்பதிகாரக் காவியத்தை ஒரு சிறந்த வரலாற்றுக் காவியம் எனவும் வழங்கலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, சிலப்பதிகாரம் இலக்கியச்சுவை மிக்க ஒரு செந்தமிழ்க் காப்பியமாகும் என்னும் பெருமையே தலையாய சிறப்பாகும்.

# மணிமேகலை

## மணிமேகலை அமைப்பு

காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திரனுக்கு விழாத் தொடங்கிய ‘விழாவறை காதை’ முதல்,‘பவத்திறம் அறுக’ என மணிமேகலை நோற்றது முடிய அமைந்த முப்பது காதைகளைக் கொண்டு திகழ்வது மணிமேகலை நூலாகும். “கூலவாணிகன் சாத்தனார் இந்நூலை இயற்றினார். இளங்கோ வேந்தன் அவர் அருகிருந்து கேட்டார்” என இந்நூற் பதிகம் கூறுகின்றது.

இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திறம் மணிமே கலைதுறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென்.

(பதிகம் 95 – 98)

## பெயர்ச் சிறப்பு

மணிமேகலை என்னும் இலக்கியத் தலைவியின் பெயராலேயே இந்நூலுக்குப் பெயர் அமைந்துள்ளது. இதற்கு “மணிமேகலை துறவு“ என்னும் பெரும் உண்டென்று மேலே கண்டோம். ஈண்டு இலக்கியத் தலைவிக்கு அப்பெயர் எவ்வாறு அமைந்தது என்பது அறியற்பாலது.

கோவலனுடைய முன்னோன் ஒருவன், அயல்நாட்டு வணிகத்தின் பொருட்டுக் கடலில் கலஞ்செலுத்திச் சென்ற வணிகர் கூட்டத்துள் ஒருவனாய்ச் சென்றனன், அப்போது பெருஞ் சூறைக்காற்று வீசவே, கப்பல் கவிழ்ந்துவிட்டது. மேற்கூறிய வணிகன் உயிருக்குத் தத்தளித்துக் கொண்டிருந்தான். அப்போது மணி பல்லவத் தீவில் வாழும் மணிமேகலா தெய்வம் ஆங்கு வந்து அவனைக் காப்பாற்றி வான்வழியே காவிரிப்பூம்பட்டினத்தில் கொண்டுவந்து விட்டுச் சென்றது. அது முதல் கோவலனுடைய முன்னோரெல்லாம் மணிமேகலா தெய்வத்தைத் தம் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டு வருவாராயினர். கோவலன் மாதவியின்பால் தனக்கு பிறந்த பெண் மகவுக்குத் தன் குலத்தெய்வத்தின் நினைவாகவே மணிமேகலை என்ற பெயர் சூட்டி மகிழ்ந்தான். அதுவே இவ் விலக்கியத்திற்கும் பெயராயிற்று.

**மணிமேகலை கதை**

கோவலன் கொலையுண்டான் என்ற கொடுஞ் - செய்தி கேட்டுப் பெறாத மாதவி, தன் குலத் - தொழிலைத்துறந்து தன் அருமை மகளாகிய மணிமேகலையுடன், புத்தமதத்திலே சேர்ந்துவிடுகிறாள். புத்த பகவானை வழிபடப் புதுமலர், பறிக்க, மணிமேகலை, தன் தோழி சுதமதியுடன் உவவனம் செல்கிறாள். இதை அறிந்த மன்னன் மகன் உதயகுமாரன், உவவனத்திற்குத் தேரேறி வர, தேரொலி கேட்ட மணிமேகலை நடுக்குற்றுப் பளிக்கறை மண்டபம் புகுந்து, தாழிட்டுக் கொள்கிறாள். பேரழகி மணிமேகலையைக் கண்ணுற்ற உதயகுமாரன் தன் உள்ளத்தை இழக்கிறான். மணிமேகலையும் தன்மனத்தைச் சற்றுப் பறிகொடுக்கிறாள். ஆனால், அதற்குள் இந்திரவிழாக் காணப் புகார்நகர் வந்த மணிமேகலா தெய்வம், மணிமேகலையை மணி பல்லவத் தீவிற்குத் தூக்கிச் சென்று இவ்உதய குமாரனே கடந்த பிறப்பில் மணிமேகலையின் காதலனாவான் எனப் பழம் பிறப்பு உணர்த்துகிறது. மாதவி, மணிமேகலை, சுதமதி ஆகிய மூவரும் சென்ற பிறப்பில் தாரை, வீரை, இலக்குமி என்னும் உடன்பிறந்தாராய் இருந்தனர் என்பதும், அங்க நாட்டுச் சச்சய நகரத்து அரசனான துச்சயம் என்பவனுக்கு வாழக்கைப்பட்ட தாரையும், வீரையுமே இப்போது மணிமேகலையின் தாயும், தோழியுமான;மாதவியும், சுதமதியுமாகப் பிறந்துள்ளனர் என்பதும், அசோதர நகரத்து அரசனான துச்சயம் என்பவனுக்கு வாழ்க்கைப்பட்ட தாரையும் வீரையுமே இப்போது மணிமேகலையின் தாயும் தோழியுமான மாதவியும், சுதமதியுமாகப் பிறந்துள்ளனர் என்பதும், அசோதர நகரத்து இளவரசனான இராகுலனை மணந்திருந்த இலக்குமியே இப்போது மணிமேகலையாகவும், இராகுலனே உதயகுமரானாகவும் பிறந்துள்ளனர் என்பதும் பிறவும், அறியப்படுகின்றன.

மணிபல்லவத் தீவில் வாழ்ந்த தீவதிலகை என்பவளால், மணிமேகலை அன்னம் வழங்கும் அமுத சுரபிப் பாத்திரத்தைப் பெற்று அத் தீவினின்றும் புறப்பட்டுக் காவிரிப்பூம்பட்டினம் அடைந்து மாதவி, சுதமதி என்னும் இருவரையும் அறவண அடிகள் பால் அழைத்துச் செல்கிறாள். அறவண அடிகள் அம் மூவருக்கும் ஆபுத்திர் வரலாற்றை எடுத்துரைக்கிறார். பசிப்பிணி தீர்க்கத் துணிந்த மணிமேகலை, பத்தினிப் பெண் ஆகிய ஆதிரையிடம் சென்று, அட்சயப் பாத்திரத்தில் பிச்சைஏற்றுச் சோர்ந்த உயிர்களுக்கெல்லாம் சோறு வழங்குகிறாள்.

பின்னர், உலகவறிவிக்குச் சென்று உணவு கொடுக்கின்றாள். இதைச் செவியுற்ற உதயகுமாரன் தேரேறி உலக வறவிக்கு வருகிறான். உதயகுமரனைக் கண்ட மணிமேகலை தன் மந்திர வலிமையால், காயசண்டிகை என்னும் வித்தியாதரப் பெண்ணின் வடிவெய்துகிறாள். இவ்வடிவுடன் குற்றவாளிகளுக்கு உணவூட்டச் சிறைச்சாலைக்குச் செல்கிறாள். சிறைக் காவலர் மணிமேகலையைச் சிறைப்படுத்தி, மன்னன் முன்னிலையில் நிறுத்துகிறார்கள். அரசனோ, மணிமேகலை சொல் கேட்டுச் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றுகிறான். காயசண்டிகை வடிவில் இருப்பவள் மணிமேகலைதான் என்பதை உணர்ந்து உதயகுமரன் செல்கிறான். அவன் வருகையை அறிந்த மணிமேகலை அவனுக்கு அறிவுரை கூற முற்படுகிறாள்.

இந்நிலையில் அங்கு வந்த காயசண்டிகையின் கணவன், மணிமேகலையைத் தன் மனைவியெனவும், உதயகுமரனை அவள் கள்ளக் காதலன் எனவும் பிறழ உணர்ந்துவிடுகிறான். அன்று இரவு காமவேட்கை கொண்டவனான உதயகுமாரன், மணிமேகலையைக் காண அங்கு வந்தபோது ஒளிந்திருந்த காயசண்டிகையின் கணவன் உதயகுமாரனை வாளால் வெட்டி வீழ்த்தி விடுகிறான். இந்நிலையில், நல்வினையாகக் கந்திற்பாவை தோன்றி உண்மையை உரைத்து, மணிமேகைலையைக் காப்பாற்றுகிறது. மகன் இறந்த செய்தியைக் கேட்ட மன்னன் மணிமேகலையைச் சிறை செய்கிறான்.

மகன் கொலை கேட்ட அரசமாதேவி உளம் மறுகி, மணிமேகலையை பலவாறு துன்புறுத்துகிறாள். கடுகளவும் துன்பம் மணிமேகலையைத்தொடராதது கண்டு அஞ்சிய தேவியார் தம் குற்றம் பொறுக்குமாறு, மணிமேகலையைத் தொழுது வேண்ட, மணிமேகலை, அவ்வரசியாருக்குப் பற்பல அறிவுரைகளைக் கூறுகிறாள். பின்னர், அறவண அடிகளின் ஆணைக்கேற்ப மணிமேகலை, அவ்விடத்தினின்று நீங்கி, வான் வழியே ஆபுத்திரன் அரசனாகப் பிறந்து ஆட்சி செய்யும் நாட்டை அடைந்து, அவனது பழம் பிறப்பை அவனுக்கு விளங்க உரைக்கிறாள். பின்னர் வான்வழியாக வஞ்சி மாநகருக்கும் சென்று அறவண அடிகள் பால் அமர்ந்து, அவர் காட்டிய ஞான விளக்கின் துணைவழி நின்று தவத்திறம் பூண்டு, தருமம் கேட்டு, இப்பவத்திறம் அற, அந்நகரிலே தவம் செய்து வாழ்கிறாள் என உரைப்பதே மணிமேகலை கதையாகும்.

**மணிமேகலை மாண்பு**

உரையாசிரியராகிய பேராசிரியரும், சிவப்பிரகாசரும், ஒருங்கே பாராட்டிப் போற்றும் சிறப்பினையுடையது மணிமேகலை.

தமிழ்மொழியில் முதன்முதலாகத் தோன்றிய சமயக் காப்பியம் என்னும் சிறப்பும், புத்தமதச் சார்புடைய முழு முதல் பேரிலக்கியம் என்னும் பெருமையும் மணிமேகலைக் காவியத்தையே சாரும்.

இந்நூலில் இளமை, இன்பம், யாக்கை, செல்வம் முதலியவற்றின் நிலைமையாமையும்; களவு, கொலை, கள், காமம் முதலியவற்றால் வரும் துயர நிலைகளையும் கூறிப் புத்தசமயக் கொள்கைகளைப் போதிக்கின்றார். புத்தமதத்திற்கே உரிய புத்தம், தன்மம், சங்கம் என்னும் திரிபீடகத்தையும், பள்ளி வேதி, சீலம் ஆகியவற்றையும் ஆங்காங்குக் கூறிச் செல்கின்றார்.

புத்தமதக் கருத்தைப் பரப்பும் ஒரே வேட்கையோடு, சாத்தானார் மணிமேகலைக் காப்பித்தை இயற்றவில்லை! புரட்சிகரமாக விளங்கிய புத்தமத்தை ஒரு கருவியாகக் கையாண்டு, மக்கள் சமுதாயத்தை மாற்றியமைக்கும் சீர்திருத்த நோக்கோடுதான் இம் மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியுள்ளார். பரத்தை யொழிப்பு, மதுவொழிப்பு, பசியொழிப்பு, சிறையொழிப்பு, சாதியொழிப்பு என்ற சீர்திருத்தக் கருத்துக்களின் செல்வக் களஞ்சியமாகவே இச் செந்தமிழ்க் காப்பியம் காட்சியளிக்கிறதெனலாம்.

பண்டைத் தமிழகத்தின் வளத்தையும், நாகரிகத்தையும் திறம்பட எடுத்துரைக்கும் மாண்பினையும் உடையது மணிமேகலை ஆகும்.

மணிபல்லவம், இரத்தினதீவம், சாவகம், காஞ்சிநகர், வஞ்சிநகர், காவிரிப்பூம்பட்டினம் ஆகியவை பற்றிய செய்திகளையும் அந்நகர்களின் தொழில்வளம், நாகரிகச் சிறப்புக்கள் பற்றியும் இந் நூலிலே காணலாம். நகர்களில் அமைந்த மனைகள் தோறும் கண்கவர் ஓவியங்களையும் சிலைகளையும் காணலாம் எனக் கூறுகின்றார். சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதையில் அக்காலத்து நிலவிய பல்வகைச் சமயக் கொள்கைகளையும் எடுத்துரைக்கின்றார். இக்காப்பியத்தில் கிளைக் கதைகளாக ஆதிரை, மருதி விசாகை முதலிய பத்தினிப் பெண்களின் வரலாற்று உண்மைகளைப் பங்கு கொள்ளும் பாத்திரங்களே, பேசுமாறு அமைத்துவிடுகிறார். இடையிடையே பல இதிகாசக்கதைகளையும், புராணக் கதைகளையும் திறம்படக் கூறிவிடுகிறார்.

எல்லாத் தமிழ்க் காப்பியங்களிலும், மிக எளிய நடையிலே இயன்றுள்ளது மணிமேகலை, சொற்கள் கலகலப்பாக ஒன்றொடொன்று மோதிப் புரளாமல், எளிய இனிய யாப்பு வடிவிலே செல்லுகின்றன.

“புத்த மதத் தொடர்பான சில சொற்களையும் தொடர்களையும் இடத்திற்கேற்பச் சாத்தனார் தம் நூலில் மொழி பெயர்த்து அமைத்துள்ளது பாராட்டுக்குரியதாகும்” எனச் சிறப்பித்து மொழிகிறார் தமிழ்ப்பெரியோர், டாக்டர் உ.வே.சா.

கற்றோர் இதயத்தைக் கவரும் இலக்கியச் சுவை போகப் போக நூலிலே குறைவு என்றாலும் கூட, காதலுக்கும் கடமைக்கும் இடையே போராடும் மணிமேகலை குணச்சித்திரத்தை நாம் எளிதில் மறக்க முடியாது. குரவம், மரவம், குருந்து, கொன்றை போன்ற பல்வகை மரங்களைக் கூறி, அம்மரங்களில் மலர்ந்த பூக்களால் அவ் உவவனம் நிறைந்து வித்தகரியற்றிய கைவினைச் சித்திரச் செய்கைப் படாம் போர்த்தது ஒப்பந்ததோன்றியது என்று வருணிப்பதும், “புனையா ஓவியம் புறம்போந்தன்ன” அணிகலன் அணியா மணிமேகலை சென்றாள் என உவமிப்பதும், மணிமேகலா தெய்வம் வந்து தோன்றும் காதையில் அந்திப் பொழுதை ஒரு பெண்ணாக உருவகம் செய்யும் விந்தையும் (119 – 141), படிப்போர்க்கு இன்பம் பயப்பனவாகும்.

பசியின் கொடுமைகளை விவரித்து,

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில் -
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே

என்று அறிவுரைகள் கூறுவதும்,

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்லவமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை ஆவது
எவ்வுயிர்க் காயினும் இரங்குதல் வேண்டும்.

என இராசமாதேவிக்கு மணிமேகலை அறிவுரை கூறுவதும், இலக்கியம் கற்போர் நெஞ்சில் என்றும் நிற்பனவாகும்.

# அலகு : 4 உரைநடை
# உலகத் தமிழர்கள்

காட்டில் பெண் சிங்கம் வேட்டையாடும் காட்டெருமை ஒன்றை வீழ்த்தும், இதனை ஆண் சிங்கம் கவனிக்கும். அது மட்டும் காட்டெருமையைக் கிழித்துத் தின்னும். அது தின்ற பிறகு மிச்சம் இருப்பதைப் பெண் சிங்கம் உண்ணும். இப்படிப்பட்ட ஆண் சிங்கத்தைப் போன்று தன்னலம் மட்டுமே கொண்ட இனம் உண்டு.

வல்லூறுகள் உயர்ந்த கிளையில் கூடு கட்டி வாழும். அவற்றுக்குக் குஞ்சுகள் தோன்றும். அந்தக் குஞ்சுகளுக்கு ஆண் வல்லூறும் பெண் வல்லூறும் உணவூட்டும். இந்த வல்லூறுகளைப் போல், தம் குடும்ப நலனை மட்டுமே கருதி உழைக்கும் இனமும் உண்டு.

யானைக் கூட்டத்தில் ஒரு பெண் யானைக்குக் குட்டி ஒன்று பிறக்கும், அந்தக் குட்டியின் நலனில் கூட்டத்திலுள்ள பல பெண் யானைகள் கவனமாக இருக்கும். இந்த யானைகளைப் போலத் தன் இனத்தின் நன்மையை மட்டுமே கொண்ட இனமும் இருக்கிறது.

இவற்றைக் கடந்த நிலையில் உலக மக்கள் அனைவரையும் தம்மவராகப் போற்றும் ஓரினம் உண்டு. அது தமிழினமாகும். கிரேக்கர்கள் தம்மைத் தவிர மற்ற அனைவரும் காட்டுமிராண்டிகள் என்றார்கள். அவ்வாறே ஆரியர்களும் எண்ணினார்கள். மற்ற எல்லோரும் மிலேச்சர்கள் என்று இழித்துரைத்தார்கள். தமிழர்கள் மட்டுமே, உலகத்தவர் அனைவரும் தம் உறவினர் என்று கூறினார்கள் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று கூறிய கணியன் பூங்குன்றனாரின் பாடல் வரி இக்கருத்தை உறுதிப்படுத்தும். ஒருவனுக்கு எல்லா நாடும் தன் நாடாகும். எல்லா ஊரும் தன் ஊர் ஆகும் என்று திருவள்ளுவரும் சொல்லியிருக்கிறார்.

“யாதானும் நாடாமல் ஊராமால்” என்பது அவர் கருத்து (குறள்:397) அறிவுடையார் நான்கு திசைகளிலும் செல்லாத நாடில்லை. அந்த நாடுகள் வேறு நாடுகள் அல்ல. அவை அவருக்குச் சொந்தமான நாடுகளே என்று முன்றுறையரையனாரும் சொல்லியுள்ளார்.

“ஆற்றவம் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு

வேற்று நாடு ஆகா் தமவே ஆம்” (பழமொழி 4) என்பது அவா் பாடிய பாட்டு.

இப்படி உலகத்தவரைத் தம்மவராகத் தமிழா் கருதுவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. மாந்தன் தோன்றிய இடம் குமரிக்கண்டமே. அங்கே தோன்றியவன் தமிழன் என்று பாவாணா் ஆய்ந்துரைத்தாா். குமரிக்கண்டம் கடலில் முழுகிய போது தப்பிப் பிழைத்த தமிழா்கள் உலகின் பல பகுதிகளில் குடியேறினாா்கள் என்று இசை மேதை ஆபிரகாம் பண்டிதா் கருணாமிா்தசாகரம் என்ற தன் இசைக்கலைக்களஞ்சியத்தில் தெரிவித்துள்ளாா். இது முதற் காரணம்.

தமிழாின் பரந்த மனப்பான்மை, மனித நேய உணா்வு, விருந்தோம்பும் பண்பு ஆகிய இம்மூன்று தன்மைகளும் இரண்டாம் காரணம். இன்று ஏறத்தாழ எண்பது நாடுகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் தமிழா் வாழ்வது மூன்றாவது காரணம்.

இவற்றின் காரணமானவே தமிழாின் சிந்தனை, ஊா்ச் சிந்தனையாக இல்லாமல் நாட்டு சிந்தனையாக இல்லாமல் உலகச் சிந்தனையாக உள்ளது. அது அவா்களின் நூல்களிலும் காலம் காலமாக வெளிப்பட்டு வந்துள்ளது. சான்றுக்கு ஒரு சில மட்டுமே கீழே தரப்படுகின்றன.

மலா் தலை உலகத்துமரபு (தொல்: பொருள் : புறத் 18)

வானின்று உலகம் வழங்கி வருதலான் (திருக்குறள்: 11)

நீா் இன்றியமையா உலகம் (நற்றிணை 1-6)

நனந்தலை உலகம் (குறுந்தொகை 6-3)

உயா்நிலை உலகத்து (ஐங்குறு 442)

இவ்வுலகத்து அறந்திகிரிக்கு வழியடையாகும்

(பதிற்றுப்பத்து 22 – 4)

இவ்வுலகம் தந்து அடிப்படுத்தல் (பாிபாடல் 4 – 23)

திங்கள் புத்தேள் திாிதரும் உலகத்து (புறம் 27 -14)

உலகம் செயற்பால செய்யாவிடினும் (நாலடி 97 – 1)

உயா்ந்த உலகம் புகும் (நான்மணிக்கடிகை 30 – 5)

உலகம் எனப்படுவாா் (திாிகடுகம் 34 – 4)

உலகினுள் இல் (பழமொழி 161)

வேந்ததனாம் இவ்வுலகம் விட்டு (ஏலாதி 33 – 1)

ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம் என்ற தொடரை முதுமொழிக் காஞ்சி நூல் முழுவதும் முதலடியாக வைத்தது "மூவா முதலா உகலம்" என்று சீவகசிந்தாமணி சொன்னது. "உலகு அளித்தலான்" என்று சிலம்பு செப்பியது. நம்மிடையே வாழ்ந்த பாவேந்தரும் உலகப்பன் பாட்டு என்ற பாடல் பாடியுள்ளார். நூலைத் தொடங்கிய போதே, உலகம் பற்றிய நினைப்புடன் உலகம் என்ற சொல்லுடன் பல படைப்புகள் தமிழகத்தில் தோன்றியுள்ளன. 'உலகம் உவப்ப' என்று திருமுருகாற்றுப்படை தொடங்குகிறது. 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்று திருக்குறளின் முதற் பாடலில் வருகிறது. 'மூவமை உலகு' என்பது ஐங்குறுநூற்றின் முதற்பாட்டில் வருந்தொடர் ஆகும். 'உலகம் திரியா' என்று மணிமேகலை தொடக்கம் சொல்கிறது. 'உலகம் யாவையும்' என்று கம்பர்தன் இராமாணயத்தைத் தொடங்குகின்றார். 'உலகெல்லாம் உணர்ந்து' என்று சேக்கிழார் பெரியபுராணத்தின் முதல் பாடலில் உலகத்தை முன் நிறுத்துகின்றார். 'உலகத்தீரே உலகத்தீரே' என்று இடைக்காலத்துக் கபிலர் கபிலரகவலைத் தொடங்கினார். மலர்தலை உலகின் என்று பவணந்தி முனிவர் நன்னூலில் தொடக்கம் செய்தார். மலர்தலை உலகத்து 'என்று நாற்கவிராச நம்பி' அகப்பொருள் நூலை ஆரம்பித்தார். புலவர் குழந்தையின் இராவண காவியமும் உலகம் என்பதை நுலின் முதல் சொல்லாகப் பெற்றிருக்கிறது.

தமிழரின் உலக உணர்வுக்கு மேலும் பல சான்றுகள் உள்ளன. உலகின் பழைமை நாகரிகமான சுமேரிய நாகரிகம் தழிழருடையது. (அங்கு இருந்த நகரம் 'ஊர்' என்ற தமிழ்ப் பெயர் பெற்றிருந்தது). அடுத்து வந்த எகிப்திய நாகரிகமும் தழிழருடையதே. அந்நாட்டவர் பண்டு (பாண்டிய) நாட்டிலிருந்து அங்கே குடியேறியவர்கள் என்று வரலாற்று ஆராய்ச்சி கூறுகிறது. தென் அமெரிக்க நாட்டு மாயா நாகரிகமும் தமிழினத் தொடர்புடையது.

தமிழிசை வடபுலம் சென்றது. அங்கு வந்த 'பிதாகரஸ்' என்ற கிரேக்க அறிஞர் அங்கிருந்த இசை பற்றி அறிந்தார். அதன் அடிப்படையில் இசை முறையை உருவாக்கினார். அதுவே இன்றுள்ள மேலை இசைக்கு மூலமாகும் என்று சொல்லப்படுகிறது. தமிழ் எண்களை அரேபியர்கள் அறிந்தார்கள்.பின் அவை உலக முழுவதும் பரவின. அதாவது தமிழ் எண்கள் இன்று உலகம் முழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. மேற்

சொல்லப்பட்ட உண்மைகள் ஆராய்ச்சி உலகத்தில் மட்டுமே முடங்கிக் கிடக்கின்றன.

உலகம் முழுதும் பரவி வாழ்ந்த வாழ்கின்ற தமிழருக்குத்தனி நாடு ஒன்றில்லை. உலகத் தமிழர்கள் ஒருங்கிணைந்த உணர்வுடன் இல்லை. அவர்களை ஒன்றாக இணைக்கும் சாதனமும் இல்லை. உலகத் தமிழருக்கென்று ஒரு வங்கியோ, ஒரு பல்கலைக்கழகமோ இன்னும் உருவாக இல்லை. தாய்த் தமிழகம் இத்துறைகளில் வழி காட்டத் தவறி விட்டது. உலக நாடுகள் பலவற்றில் தமிழனம் சீர் இழந்து சிறப்பு அழிந்து உள்ளது. இது பற்றியும் வேர்த் தமிழகம் எண்ணிக் பார்க்கவில்லை. மொரீசியஸ், ரீயூனியன் போன்ற நாடுகளில் தமிழர்கள் வாழ்கின்றார்கள். ஆனால் அங்கே தமிழ் வாழவில்லை. இப்படிப்பட்ட நிலைமையைச் சீர்ப்படுத்த மூலத்தமிழ் சரியாக முனையவில்லை. உலகத் தமிழர்கள், தாய் தமிழகத்தின் உதவியை எதிர்பார்க்கின்றார்கள். இனியாவது கலை, பண்பாடு, கல்வி, பொருளாதாரம் முதலிய பல துறைகளிலும் தமிழகம் உதவிக்குக் கை நீட்ட வேண்டும்.

உலகத தமிழர் அனைவரும் தனி ஒருமைப் பாட்டுணர்வுடன் இனியாவது வாழவேண்டும். இந்த இனிய சூழலை உருவாக்க வேண்டியது அனைவரின் கடமையாகும்.

**முனைவர் மலையமான்.**

## 2. பொதுநலம்

தானுண்டு தன் மனைவி மக்களுண்டு என்று எப்போதும் சுயநலச் சிந்தனையுடன், சிலர் வாழ்கிறார்கள்.

பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் சிறிதுமின்றி, கிடைப்பதை அப்படியே சேர்த்து வைத்து அழகு பார்க்கும் ஆசாமிகளாக, சிலர் இருக்கிறார்கள்.

அவரிடம் உதவிகேட்டால், 'தனக்கு மிஞ்சினால் தானே தருமம்' என்று தத்துவம் பேசுவார்கள்.

'ஏனப்பா இப்படி சுயநலக் காரனாக வாழ்கிறாய்?..... என்று அவர்களிடம் கேட்டுப்பாருங்கள் 'சுய நலத்தில் இருந்துதானே பொது நலம் பிறக்கிறது!' என்று, கைவசம் தயாராக இந்த பதிலை வைத்திருப்பார்கள்.

இந்த வாய் வார்த்தைக்காரர்களின் எண்ணம் எப்போதும் சுயநலத்தில்தான் மூழ்கிக்கிடக்கும்.

நீங்கள், மனிதப்பிறவியின் நோக்கமே மற்றவரின் நிலையறிந்து உதவிபுரிந்து வாழ்வதுதான் என்பதைப் புரிந்து கொண்டு, பரந்த மனத்துடன் வாழ வேண்டும் அப்போது தான் மனிதனாக மதிக்கப்படுவீர்கள்.

சொந்த பந்தங்கள் எல்லாம் துன்பத்தில கிடக்க, தான் மட்டும் இன்பத்தில் மூழ்கி இருப்பது நியாயம் ஆகுமா? ஏழை எளியவர்கள் வறுமையைக் கண்டும் பாராமுகம் கொண்டுத் திரிபவர்கள் எல்லாம் மனிதர்கள் தானா?

"சொந்தச் சகோதரர்கள்"
துன்பத்தில் சாதல் கண்டும்
சிந்தை இரங்காராடி! –கிளியே
செம்மை மறந்தாரடி!"

இது பாரதியின் நெஞ்சக் குமுறலில் உதித்த உணர்ச்சி மிகுந்த பாட்டாகும்.

காக்கை இனம் கூட, கரைந்து, ஒன்று கூடி இரை உண்ணுகிறது. இருப்பதைப் பகுத்துப் பலரும் பயனுற வாழ்வதே மிகச்சிறந்த வாழ்க்கை அன்றோ?

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை"

என்பது வள்ளுவரின் திருவாக்கு.

ஏழைகள் படும் வேதனையை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நடக்கும் மனிதர்கள் நிறைந்த பூமியில், சாதாரண ஒரு பயிரின் வாட்டத்தைக் கண்டு கூட, பொறுக்க முடியாமல் தவித்த, கருணையாளர், வள்ளலார் போல் மனித இனம் வாழ்வது எப்போது?

அவரின் பாடல்வரிகளைக் கவனியுங்கள்
"வாடிய பயிரைக்
கண்டபோதெல்லாம்
வாடினேன்"

அடடா! இது அல்லவோ கருணையின் வெளிப்பாடு.

மனிதர்கள் சுயநலச் சிந்தனையில் இருந்து விடுபட்டு,பொதுநல சிந்தனைமிக்க கண்ணோட்டம் பெற வேண்டும்.

பொதுநல கண்ணோட்டம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு கதையுண்டு, கேளுங்கள்.

அரசன் ஒருவன் ஒரு சிறிய கிராமம் ஒன்றின் வழியாக குதிரையில் சென்று கொண்டிருந்தான்.

வழியில், வயதானக் கிழவர் ஒருவர், தன் தோட்டத்தில் சில மரக்கன்றுகளை நட்டுக் கொண்டிருந்தார்.

அதை கவனித்த அரசன், குதிரையை விட்டுக் கீழிறங்கி, ஆச்சரியத்துடன் அந்தக் கிழவரை நோக்கி.

“பெரியவரே! நீங்களோ பழுத்த பழமாக இருக்கிறீர். இந்தத் தள்ளாத வயதில் நீங்கள் ஏன் இந்த மரக்கன்றுகளை நடுகிறீர்கள்!... அதுவம் இந்த நிலையில், நீங்கள் நடுகின்ற இந்த மரக்கன்றுகள் வளர்ந்து அது தரும்பயனை நீங்கள் அனுபவிக்க உங்கள் வயதுதான் இடம் தருமா? என்று கேட்டான்.

தள்ளாடியவாறே எழுந்து நின்று மன்னரை வணங்கி அந்தக் கிழவர் மொழிந்தார்.

“அரசே! என் முன்னோர்கள் நான் பயன்பெறவே, இந்தத் தோட்டத்தில் உள்ள மரங்களை நட்டுச் சென்றார்கள். அதேபோல எனக்குப் பின்னால் வரும் மக்கள் பயனை அனுபவிக்க நான் ஏதேனும் செய்ய வேண்டும் அல்லவா? அதற்காகத்தான் இந்த மரக்கன்றுகளை நடுகிறேன்.

இதைக் கேட்ட மன்னன் மகிழ்ச்சியும் வியப்பும் கொண்டு, அந்தக் கிழவரைக் கட்டித் தழுவி கொண்டான்.

பொதுநல நோக்கு என்பது இப்படித்தான் இருக்க வேண்டும்.

**கருமலைப்பழம் நீ**

## அலகு – 5 சிறுகதை

## 1. செவ்வாழை

செங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப் பிள்ளை போல் வளர்ந்து வந்தான். இருட்டுகிற நேரம் வீடு திரும்பினாலும் கூட, வயலிலேஅவன் பட்ட கஷ்டத்தைக் கூடப் பொருட் படுத்தாமல் கொல்லைப் புறம் சென்று செவ்வாழைக் கன்றைப் பார்த்துவிட்டு, தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப் பட்டு இருக்கிறதா என்று கவனித்து விட்டுத் தான் தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்து வந்தான். கன்று வளர வளர அவன் அந்தச் செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும் போதும், கல் மண்ணைக் கிளறிவிடும் போதும் அவன் கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியைக்கண்டு(கரியனிடம்)முதல் பையனிடம் காட்டியதைவிட அதிகமான அன்பும் அக்கறையும் காட்டுகிறாரே என்று ஆச்சரியம், சற்று பொறாமை கூட ஏற்பட்டது குப்பிக்கு,

"குப்பி! ஏதாச்சும் மாடுகீடு வந்து வாழையை மிதிச்ச விடப் போகுது ஜாக்கிரதையாகக் கவனிச்சுக்கோ. அருமையான கன்று –ஆமோம், செவ்வாழைன்னா சாமானயமில்லே. குலை எம்மாம் பெரிசா இருக்கும் தெரியுமோ? பழம், வீச்சு வீச்சாவும் இருக்கும். உருண்டையாகவும் இருக்கும். ரொம்ப ருசி – பழத்தைக் கண்ணாலே பார்த்தாக்கூடப் போதும், பசியாறிப் போகும்" என்று குப்பியிடம் பெருமையாப் பேசுவான் செங்கோடன்.

அப்பா சொல்வதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப்பார்கள். அதுமட்டுமா, பக்கத்துக் குடிசை, எதிர்க்குடிசைகளிலே உள்ள குழந்தைகளிடமெல்லாம் இதே பெருமையைத் தான் பேசிக் கொள்வார்கள். உழவர் வீட்டுப் பிள்ளைகள் வேறே எதைப் பற்றிப் பேசிக் கொள்ள முடியும். அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப் பற்றியா, அம்மாவின் வைரத்தோடு பற்றியா, அண்ணன் வாங்கி வந்த ரேடியோவைப் பற்றியா, எதைப் பற்றிப் பேச முடியும்? செவ்வாழைக் கன்று தான் அவர்களுக்கு மோட்டார், ரேடியோ, வைரமாலை சகலமும்!

மூத்தபயல் கரியன் செவ்வாழைக் குரலை தள்ளியதும் ஒரு சீப்புப் பழம் எனக்குத்தான் என்று சொல்லுவான்.

"ஒண்ணு கூட எனக்குத் தரமாட்டாயா – நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன். கவனமிருக்கட்டும்" – என்று எதிர்க்குடிசை எல்லப்பன் கூறுவான்.

கரியனின் தங்கை காமாட்சியோ, கண்ணைச் சிமிட்டிக் கொண்டே, உனக்கு ஒரு சீப்புன்னா எனக்கு இரண்டு தெரியுமா? அம்மாவைக் கேட்டு ஒரு சீப்பு, அப்பாவைக் கேட்டு ஒரு சீப்பு" என்று குறும்பாகப் பேசுவாள்.

மூன்றாவது பையன் முத்து, "சீப்புக் கணக்குப் போட்டுவிட்டு ஏமாந்து போகாதீங்க – ஆமா – பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்துடுவாங்களோ, யாரு கண்டாங்க" என்றுசொல்லுவான். வெறும் வேடிக்கையாக அல்ல. திருடியாவது மற்றவர்களைவிட அதிகப்படியான பழங்களைத் தின்றே தீர்த்து விடுவது என்று தீர்மானித்தே விட்டான்.

செங்கோடனின் செல்லப்பிள்ளையாக வளர்ந்து வந்தது செவ்வாழை. உழைப்பு அதிகம். வயலில் பண்ணை மானேஜரின் ஆர்ப்பாட்டம் அதிகம் இவ்வளையையும் சகித்துக் கொள்வான் - செவ்வாழையைக் கண்டதும் சகலமும் மறந்து போகும். குழந்தைகள் அழுதால் செவ்வாழையைக் காட்டித்தான் சமாதானப்படுத்துவான். துடத்தனம் செய்கிற குழந்தையை

மிரட்டவும் செவ்வாழையைத் தான் கவனப்படுத்துவான்! குழந்தைகள் பிரியமாகச் சாப்பிடுவர்கள் செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோடனுக்கு. பண்ணை வீட்டுப் பிள்ளைகள் ஆப்பிள், திராட்சை தின்ன முடிகிறது. கரியனும் முத்துவம் எப்படி விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெற முடியும்? செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணந்தான் செங்கோடனை அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்லமாக வளர்க்கும்படி செய்யது. உழவன் செங்கோடனிடம் எவ்வளவு பாடுபட்டாலும் குழந்தைகளுக்குப் பழமும் பட்சணமும் வாங்கித் தரக்கூடிய பணம் எப்படிச் சேர முடியும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்பவே உதவும் - குப்பியின் பாடு குடும்பத்தின் பசியைப் போக்க கொஞ்சம் உதவும். இப்படி பிழைப்பு! உழைப்பின் பெரும் பகுதி வயலிலே செலவாகிறது. அதன் பலனில் மிகப் பெரும் பகுதியோ பண்ணைக்குச் சேர்ந்து விடுகிறது. இந்தச் செவ்வாழை ஒன்று தான் அவன் சொந்தமாக – மொத்தமாக பலன் பெறுவதற்கு உதவக்கூடிய உழைப்பு! இதிலே பங்கு பெற பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம் போக மிச்சமிருப்பதிலே, அலுத்துப் படுக்க வேண்டிய நேரத்திலே பாடுபட்டு, கண்ணைப் போல வளர்த்து வரும் செவ்வாழை! இதன் முழுப்பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான் பட்ட பாட்டுக்கு உரிய பலனைத் தானே பெற முடிகிறதே என்ற சந்தோசம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனதிலே தெளிவாகத் தோன்றிய கருத்துக்கள் அல்ல. புகைப்படலம் போல அந்த எண்ணம் தோன்றும். மறையும். செவ்வாழையைப் பார்க்கும் போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்தற்குக் காரணம் இந்த எண்ணம் தான்.

கன்று வளர்ந்தது கள்ளங் கபடமின்றி: செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது விளையாட்டு இடமே செவ்வாழை இருந்த இடந்தான்! மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும் ஏற்படும் பிரேமை போல அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம் பாசம் ஏற்பட்டு விட்டது.

இன்னும் ஒரு மாசத்திலே குலை தள்ளுமாப்பா? கரியன் கேட்பான் ஆவலுடன் செங்கோடனை.

“இரண்டு மாசமாகுமடா கண்ணு” என்று செங்கோடன் பதிலளிப்பான்.

செவ்வாழை குலை தள்ளிற்று, செங்கோடனின் நடையிலேயே ஒரு புதுமுறுக்கு ஏற்பட்டு விட்டது நிமிாந்து பாா்ப்பான் குலையைப் பெருமையுடன்.

பண்ணை பரந்தாம முதலியாா் தமது மருமகப் பெண் முத்து விஜயாவின் பொன்னிற மேனியை அழகுபடுத்திய வைரமாலையைக் கூட அவ்வளவு பெருமையுடன் பாா்த்திருக்க மாட்டாா்! செங்கோடனின் கண்களுக்கு அந்தச் செவ்வாழைக் குலை, முத்துவிஜயாவின் வைரமாலையை விட விலை மதிப்புள்ளதாகத் தோன்றிற்று. குலை முற்ற முற்ற செங்கோடனின் குழந்தைகளின் ஆவலும், சச்சரவும் பங்குத் தகராறும் அப்பாவிடமோ, ஆத்தாவிடமோ அப்பீல் செய்வதும் ஓங்கி வளரலாயிற்று. எப்போது பழமாகும்? என்று கேட்பாள் பெண். எத்தனை நாளைக்கு மரத்திலேயே இருப்பது என்று கேட்பான் பையன். செங்கோடன், பக்குவமறிந்து குலையை வெட்டி பதமாகப் பழுக்க வைத்து பிள்ளைகளுக்குத் தர வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப் பலனை நாம் பெறப் போகிறோம் இடையேதரகா் இல்லை. முக்காலே மூன்று வீதம் பாகத்தை பறித்துக் கொள்ளும் முதலாளி இல்லை உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணையாருடையது. அவா் எடுத்துக் கொண்டது போக மீதம் தானே தமக்கு என்று வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ண வேண்டும் அது தானே முறை! ஆனால் அந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும் உடைமையும் செங்கோடனுக்கே சொந்தம்!.

இரண்டு நாளையில் குலையை வெட்டிவிடத் தீா்மானித்தான் பிள்ளைகள் துள்ளின சந்தோசத்தால். மற்ற உழவா் வீட்டுப் பிள்ளைகளிடம் சேதி பறந்தது பழம் தர வேண்டும் என்று சொல்லி அவலோ கடலையோ கிழங்கோ மாம்பிஞ்சோ எதை எதையோ அச்சாரம் கொடுத்தனா் பல குழந்தைகள் கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம். இதிலே ஏற்படுகிற மகிழ்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப் போலவே வயலிலும் நாம் பாடுபடுவது நமக்கு முழுப் பயன் அளிப்பதாக இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும். செவ்வாழைக்காக உழைத்தது நூற்றுக்கு ஒரு பாகம் கூட இராது. ஆனால் உழைப்பு நம்முடையாதாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால் பலனை அவா் அனுபவிக்கிறாா். பெரும்பகுதி. இதோ இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம்

உழைத்து வளர்ந்தது. எனவே பலன் நமக்குக் கிடைக்கின்றது. இதுபோல, நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால், எவ்வளவு இன்பமாக இருக்கும். அப்படி ஒரு காலம் வருமா? உழைப்பவனுக்குத் தான் நிலம் சொந்தம் - பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக்கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா! என்றெல்லாம் கூட இலேசாகச் செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இது போன்ற சித்தாந்தங்களைக் கிளறி விட்டது அவன் மனதில். குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலாயிற்று.

செங்கோடன் செவ்வாழைக் குலையைக் கண்டு களித்திருந்த சமயம், பண்ணை பரந்தாமர் தமது மருமகப் பெண் முத்துவிஜயாவின் பிறந்த நாள் விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொள்வதற்காக ஐயரிடம் சொல்லிவிட்டார். கணக்கப்பிள்ளையைக் கூப்பிட்டு பட்டியல் தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப்ப பற்றி குறிப்பு எழுதும் போது பழம் தேவை என்று தோன்றாமலிருக்குமா? இரண்டு சீப்பு வாழைப்பழம் என்றார் பண்ணையார்.

“ஏனுங்க பழம் - கடையிலே நல்ல பழமே இல்லை. பச்சை நாடாத்தான் இருக்கு” என்று இழுத்தான் சுந்தரம், கணக்கபிள்ளை.

“சரிடா, அதிலே தான் இரண்டு சீப்பு வாங்கேன், வேறே நல்ல பழம் எங்கே இருக்கு! என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள் சுந்தரம், நம்ம செங்கோடன் கொல்லையிலே தரமா ஒரு செவ்வாழைக் குலை இருக்குதுங்க அதைக் கொண்டுகிட்டு வரலாம்” என்றான் சரி என்றார் பண்ணையார்.

செங்கோடனின் செவ்வாழைக் குலை! அதனுடைய இன்பக் கனவு! உழைப்பின் விளைவு! குழந்தைகளின் குதூகலம்!!

அதற்கு மரண ஓலை தயாரித்துவிட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்து, செங்கோடனின் குடும்பம் பூராவும் பூரித்தது. அந்தக் குலையை! அதற்குக் கொலைகாரனானான் சுந்தரம். மகிழ்ச்சி,பெருமை, நம்பிக்கை இவைகளைத் தந்து வந்த அந்த செவ்வாழைக் குலைக்கு வந்தது ஆபத்து.

தெருவிலே சுந்தரமும் செங்கோடனும் பேசும் போது குழந்தைகள், செவ்வாழையைப் பற்றியதாக இருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றிற்று – நாக்கு குழறிற்று வார்த்தைகள் குபுகுபுவென்று கிளம்பி, தொண்டையில் சிக்கிக் கொண்டன.

மாட்டுப் பெண்ணுக்கு பிறந்த நாள் பூஜை என்று காரணம் காட்டினான் சுந்தரம், என்ன செய்வான் செங்கோடன்! என்ன சொல்வான்! அவன் உள்ளத்திலே வாழையோடு சேர்ந்து வளர்ந்த ஆசை – அவன் குழந்தைகளின் நாக்கில் நீர் ஊறச் செய்த ஆசை இன்று, நாளை என்று நாள் பார்த்துக் கொண்டிருந்த ஆவல் எனும் எதைத் தான் சொல்ல முடியும்? கேட்பவர் பண்ணை பரந்தாமர்! எவ்வளவு அல்பனடா, வாழைக்குலையை அவர் வாய் திறந்து உன்னை ஒரு பொருட்டாக, மதித்துக் கேட்டனுப்பினால் முடியாது என்று சொல்லிவிட்டாயே! அவருடைய உப்பைத் தின்று பிழைக்கிறவனுக்கு இவ்வளவு நன்றி கெட்டதனமா? கேவலம் ஒரு வாழைக்குலை! அவருடைய அந்தஸ்துக்கு இது ஒரு பிரமாதமா! என்று ஊர் ஏசுகிறது போல் அவன் கண்களுக்குத் தெரிகிறது.

அப்பா! ஆசை காட்டி மோசம் செய்யாதே! நான் கூடத்தான் தண்ணீர் பாய்ச்சினேன் - மாடு மிதித்து விடாதபடி பாதுகாத்தேன். செவ்வாழை ரொம்ப ருசியாக இருக்கும் - கல்கண்டு போல இருக்கும் என்று நீதானே என்னிடம் சொன்னாய். அப்பா! தங்கச்சிக்குக்கூட “உசிர்” அந்தப்ப பழத்திடம் மரத்தை அண்ணாந்து பார்க்கும் போதே நாக்கிலே நீர் ஊறும். எங்களுக்குத் தருவதாகச் சொல்லிவிட்டு இப்போது ஏமாற்றுகிறாயே. நாங்கள் ஏனப்பா, உன்னைக் கடையிலே காசு போட்டுத் திராட்சை கமலாவா வாங்கித் தரச் சொன்னோம். நம்ம கொல்லையிலே நாம் வளர்த்ததல்லவா! என்று அழுகுரலுடன் கேட்கும் குழந்தைகளும், குழந்தைகளைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும் அவன் மனக்கண்களுக்குத் தெரிந்தனர். எதிரே நின்றவரோ, பண்ணைக் கணக்கபிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான்- அப்பா குலையை வெட்டப் போறாரு செவ்வாழைக்குலை” என்று ஆனந்த கூச்சலிட்டு கொண்டு குழந்தைகள் கூத்தாடின. செங்கோடனின் கண்களிலே நீர்த்துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான் - உள்ளே கொண்டு வந்தான். அரிவாளைக் கீழே போட்டான் - “குலையைக் கீழே வை அப்பா, தொட்டு பார்க்கலாம் என்று குதித்தன குழந்தைகள்”. கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன். “கண்ணு! இந்தக் குலை நம்ம ஆண்டைக்கு வேணுமாம். கொண்டு போகிறேன். அழாதிங்க - இன்னும் ஒரு மாசத்திலே பக்கத்தது கண்ணு மரமாகிக் குலை தள்ளும், அது உங்களுக்குக் கட்டாயமாகக் கொடுத்துவிடறேன் என்று கூறிக் கொண்டே வீட்டை வீட்டுக் கிளம்பினான். குழந்தையின் அழுகுரல் மனதைப் பிளப்பதற்குள்.

செங்கோடன் குடிசை அன்று பிணம் விழுந்த இடம் போலாயிற்று. இரவு நெடுநேரத்திற்குப் பிறகு தான் செங்கோடனுக்குத் துணிவு பிறந்தது வீட்டுக்கு வர! அழுது அலுத்துத் தூங்கிவிட்ட குழந்தைகளைப் பார்த்தான். அவன் கண்களிலே குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்பிற்று. துடைத்துக் கொண்டு படுத்துப் புரண்டான் - அவன் மனதிலே ஆயிரம் எண்ணங்கள். செவ்வாழையை, செல்லப்பிள்ளை போல் வளர்த்து என்ன பலன்! அவருக்கு அது ஒரு பிரமாதமல்ல - ஆயிரம் குலைகளையும் அவர் நினைத்த மாத்திரத்தில் வாங்க முடியும்! ஆனால் செங்கோடனுக்கு? அந்த ஒரு குலையைக் காண அவன் எவ்வளவு! அக்கறை எத்துனை! எல்லாம் ஒரு நொடியில் அழிந்தன!

நாலு நாட்களுக்குப் பிறகு, வெள்ளித் தட்டிலே ஒரு சீப்பு செவ்வாழைப் பழத்தை வைத்துக் கொண்டு அன்னநடை நடந்து அழகு முத்துவிஜயா, அம்பிகை ஆலயத்துக்குச் சென்றார்.

நாலு நாட்கள் சமாதானம் சொல்லியும் குழந்தைகளின் குமுறல் ஓயவில்லை. கரியன் ஒரே பிடிவாதம் செய்தான். ஒரு பழம் வேண்டுமென்று, குப்பி பழங்கலயத்திலிருந்து ஒரு காலணாவை எடுத்துக் கொடுத்தனுப்பினாள். - பழம் வாங்கிக் கொள்ளச் சொல்லி பறந்தோடினான் கரியன்.

கடையிலே செவ்வாழைச் சீப்பு அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தது. கணக்கப்பிள்ளை, பண்ணை வீட்டிலே இருந்து நாலு சீப்பு முதலிலேயே தீர்த்து விட்டான். அவன் விற்றான் கடைக்காரனுக்கு - அதன் எதிரே ஏக்கத்துடன் நின்றான் கரியன்! பழம் ஒரு அணாடா, பயலே காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமோ போடா என்று மிரட்டினான் கடைக்காரன். கரியன் அறிவானா பாவம்! தன் கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப்போது கடையில் கொலுவீற்றிருக்கிறது என்ற விந்தையை! பாபம்! எத்தனையோ நாள் அந்தச் சிறுவன் தண்ணீர் பாய்ச்சினான். பழம் கிடைக்கும் என்று! பழம் இருக்கிறது. கரியனுக்கு எட்டாத இடத்தில்! விசாரத்தோடு வீட்டிற்கு வந்தான். வறுத்த கடலையை வாங்கிக் கொரித்துக் கொண்டே. செங்கோடன் கொல்லைப்புறத்திறத்திலிருந்து வெளியே வந்தான்வாழைமரத்த துண்டுடன்.

“ஏம்பா! இதுவம் பண்ணை வீட்டுக்கா?” என்று கேட்டான் கரியன்.

“இல்லேடா கண்ணு! நம்ம பார்வதி பாட்டி செத்துக் போயிட்டா - அந்தத பாடையிலே கட்ட” என்றான் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே செவ்வாழையின் துண்டு!

பாடையைச் சுற்றி அழுகுரல்!

கரியனும் மற்ற குழந்தைகளும் பின்பக்கம்

கரியன் பெருமையாக பாடையைக் காட்டிச் சொன்னான் “எங்க வீட்டு செவ்வாழையடா” என்று.

“எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழை குலையைப் பண்ணை வீட்டுக்கு கொடுத்துவிட்டோம் - மரத்தை வெட்டி “பாடை”யிலே கட்டிவிட்டோம் என்றான் கரியன்.

பாவம்! சிறுவன் தானே! அவன் என்ன கண்டான் - செங்கோடனின் செவ்வாழை, தொழிலாளர் உலகிலே சர்வசாதாரணச் சம்பவம் என்தை

**சி. என். அண்ணாதுரை**

## 2. நான் இருக்கிறேன்

அந்தச் சத்திரத்தின் வாசற்கதவுகள் சாத்தி, பூட்டப்பட்டிருக்கும் பூட்டின் மீது ஒரு தலைமுறை காலத்துத் துரு ஏறி இருக்கிறது. கதவின் இடைவெளி வழியாகப் பார்த்தால் உள் சுவர்களைக் கிழித்துக் கொண்டு கம்பீரமாய் வளர்ந்துள்ள அரசஞ்செடிகளும் காடாய் மண்டிக் கிடக்கும் எருக்கம் புதர்களும் தெரியும். சத்திரத்துக்கு எதிரே அதாவது சாலையின் மறுபுறத்தில் நான்கு புறமும் படித்துறையுள்ள ஆழமில்லாத குளம், குளத்திற்கு அப்பாலும், குளத்தைச் சுற்றிலும் செழிப்பான நஞ்சை நிலப்பகுதி வரப்பினூடே நடந்து ஏறினால், சற்றுத் தூரத்தில் ரயில்வே லைன் மேட்டுப் பகுதி. ரயிலவே லைனுக்கு மறுபுறம். இந்தப் பக்கம் செழித்து தலையாட்டிக் கொண்டிருக்கும் பயிர்களை வளர்த்ததன் பெருமை என்னுடையது தான், என்று அலையடித்துச் சிலு சிலுக்கும் ஏரி நீர்ப்பரப்பு கண்ணுக்கெட்டிய தூரம் பரந்து கிடக்கிறது.

அதற்கப்புறம் ஒன்றுமில்லை. வெறும் தண்ணீர் தான். தண்ணீர்ப்பரப்பின் கடைக் கோடியில் வானம் தான். தண்ணீரும் வானமும் தொட்டுக் கொண்டிருக்கின்ற இடத்தில் நிலவின் பெருவட்டம் மங்கிய ஒளியை ஏரி நீரில் கரைத்து மிதந்து கொண்டிருக்கிறது. நிலவு மேலே ஏற ஏற அதன் உருவம் குறுகிச் சிறுத்தது, ஒளிபெருகிப் பிரகாசித்தது. ஒரு கோடியில் எழுந்து, ரயில்வே லைன் மேட்டின் மேலேறிய நிலவு வீசிய வெளிச்சம், மறுகோடியில் சத்திரத்துத் திண்ணையில் உட்கார்ந்து உணவருந்திக் கொண்டிருந்த அந்த வியாதிக்காரப் பிச்சைக்காரனின் புத்தம்

புதிய தகரக் குவளையின் மீது பட்டுப் பளபளக்க, அதன் பிரதிபிம்பம் அவன் முகத்தில் விழுந்தது.

திண்ணையில் அவனைத் தவிர யாரும் இல்லை. அவன் அந்தக் தனிமையிலும், தகரக் குவளையில் ஊறிக் கிடந்த ரசத்து வண்டல் சோற்றிலும் லயித்துத் தன்னை மறந்த மகிழ்ச்சியுடன் பாடிக் கொண்டே ஒவ்வொரு கவளமாய்ச் சாப்பிட்டான். அவன் பார்வை நிமிர்ந்து நிலவில் பதிந்திருந்து. வாய்நிறையச் சோற்றுடன் அவன் பாடுவது தெளிவாய் ஒலிக்கவில்லை. கேட்கத்தான் அங்கு வேறு யாரிருக்கிறார்கள்.

தகரக் குவளையை வழித்து நக்கிச் சுற்றிலும் இறைந்து கிடந்த பருக்கைகளை ஒவ்வொன்றாய்ப் பொறுக்கி விரலோடு சேர்த்து உறிஞ்சிச் சாப்பிட்டானதும், தனது விரல்கள் குறைபட்ட இரண்டு கைகளாலும் தகரச் குவளையை இடுக்கி எடுத்துக் கொண்டு சாலையின் குறுக்காய், குளத்தை நோக்கி நடந்தான். கால் விரல்களுக்குப் பிடிப்பு இல்லாததால் குதிகால்களை அழுத்த ஊன்றித் தாங்கிக் தாங்கித்தான் அவனால் நடக்க முடியும். குளத்தின் மேல்படியில் காலிலிருந்த கான்வாஸ் நனையாமல் நின்று கொண்டு, தகரக் குவளையை அலம்பி, ஒரு குவளைத் தண்ணீரைக் குடித்தான். தண்ணீரை மடக்மடக்கென்று குடிக்கும் போது அவசரத்தில் குவளைக்கும் வாய்க்குமிடையே இரண்டு பக்கத்திலும் தண்ணீர் வழிந்து அவன் மேலிருந்த கோட்டின் காலரை நனைக்கவே அவசர அவசரமாகத் தண்ணீரைத் தட்டிக் கொண்டே கோட்டின் மார்புப் பையிலிருந்த பீடியையும் நெருப்புப் பெட்டியையும் எடுத்து வேறு பைக்கு மாற்றிக் கொண்டான். மேலேறி வந்த பிறகு தகரக் குவளையைக் கீழே வைத்து விட்டு, நின்று ஒரு பீடியைப் பற்றவைத்துக் கொண்டான். புகையோடு சேர்த்துத் திருப்தியுடன் ஏப்பம் விட்டவாறு அவன் முனகிக் கொண்டான்.

“நல்லாத்தான் இருக்கு…” என்று வாய்விட்டு முனகிக் கொள்ளும் போதே மனசில் என்ன நல்லாயிருக்கு? என்ற கேள்வியும் பிறந்தது.

“எல்லாம் தான்,தோ… இந்த நெலா, இந்தக் குளம்.. அடிக்கிற காத்து, குடிக்கிற தண்ணி… பசி, சோறு, தூக்கம் - எல்லாம்தான் வாழ்க்கை ரொம்ப நல்லா இருக்கு - பீடிச்சொகம் ஒண்ணு போதுமே!” என்று நெருப்பு கனியக் கனியப் புகையை வாய் நிறைய இழுத்து ஊதினான். சிறிது நேரம் நின்று ஏதோ யோசனைக்குப் பின் சத்திரத்துத் திண்ணைக்கு வந்து ஒரு மூலையில் தகரக் குவளையைக் கவிழ்த்து

வைத்து விட்டு, சுவரோரமாகக் கிடந்த கந்தல் துணியால் தரையைத் தட்டிவிட்டு உட்கார்ந்தான்.

“உலகம் எவ்வளவு அழகாயிருக்கு. இதைப் பார்க்கிற எம்மனசு சந்தோசப்படுது. ஆமா எல்லாப் பொருளும் பார்த்தவங்க மனசை சந்தோசபட்ட வைக்கும் போது, நான்…நான்? என்னைப் பார்த்தவடனே ஒவ்வொருத்தர் முகத்திலேயும் ஏற்படுகிற மாற்றம் இருக்கே, வியாதியாலே மரத்துப் போன என் உடம்புக்குத் தெரியாத வேதனை, பாவம் மனசுக்குத் தெரியுது. அன்னக்கி ஒரு நாளு, ஒரு வீட்டுக்கு முன்னாடி போயி, அம்மா தாயே பசிக்குதுன்னு நின்னப்ப, சாப்பிட்டு எச்சில் இலை கொண்டுவந்து வெளியே போட்ட ஒரு பொண்ணு என்னைப் பார்த்துட்டு வாந்திவர்ரமாதிரி குமட்டிக் கிட்டு உள்ளே ஓடினப்புறம், ஒரு ஆளு வந்து எட்டிப் பார்த்துட்டு சொன்னானே – “அம்மா வெளியே ஒரு தரித்திரம் வந்து நிக்குது, ஏதாவது போட்டு அனுப்பு. இவனெல்லாம் ஏன் தான் உசிரை வெச்சிட்டு இருக்கானோ?இந்தத் தீராத நோயோடேன்னு,

“அந்த வார்த்தையைக் கேட்டவுடனே அங்கே நிக்க முடியாமத் திரும்பினப்போ, இந்தாப்பா பரதேசின்னு கூப்பிட்ட அந்தக் குரல் இருக்கே, அதிலே இருந்த ஆறுதல் தான் உலகத்திலே வாழணும்னு ஆசை குடுத்திச்சி… ராமலிங்கசாமி மாதிரி காதோரத்திலே முக்காட்டுத் துணியைச் செருகிக்கிட்டு கையிலே சோத்தோட எதிரே நின்னபடி, என் பையன் கொஞ்சம் வாய்த்துடுக்கு.. சாகறதும் இருக்கிறதும் நம்ம கையிலா இருக்குன்னு சொல்லிகிட்டே கொவளையில் சோத்தைப் போட்டாங்க. நான் அந்த அம்மா மொகத்தையே பார்த்துக்கிட்டு நின்னேன். தன் மகனைப் பார்த்து, நீ சாகக் கூடாதான்னு யாரோ கேட்டுட்ட மாதிரி அவங்க கண்ணிலே தண்ணி கொட்டிக்கிட்டே இருந்தது…”

அன்றைக்கு பிறகு அவன் பகலில் பிச்சைக்குப் போவதில்லை. இருட்டியபிறகு யார் கண்ணிலும் படாமல் தலையில் முக்காடிட்டுக் கொண்டுதான் போவான். மூன்று வேளைக்கும் முதல் நள்ளிரவு ஒரு வேளை எடுத்த பிச்சைதான். சில நாட்களிலும் அதுவே அதிகமாகி அடுத்த நாளைக்கும் இருந்துவிடுவது உண்டு.

தூணில் சாய்ந்து உட்கார்ந்திருந்த பிச்சைக்காரன் நிறைவாக இருந்த வயிற்றைத் தடவி விட்டுக் கொண்டான். “சாப்பாடு கொஞ்சம் அதிகம் தான்“ என்று மறுபடியும் ஒரு ஏப்பம் விட்டவாறு முருகா என்று எழுந்தான்.

தரையில் விரித்த கந்தலை எடுத்துத் தலையில் முண்டாசாகக் கட்டினான். மூலையில் இருந்த தடியையும் கையிலே எடுத்துக் கொண்டு ஏரிக் கரையை நோக்கி நடந்தான்.

“ம் உடம்பிலே வியாதி இருந்தா என்னா, உசிரு இருக்கிறது நல்லாத்தான் இருக்கு. நாக்குக்கு ருசியா திங்கற சொகம்: கண்ணுக்குக் குளிர்ச்சியா பாக்கற சொகம். காதுக்கு எதமா கேக்குற சொகம். வியாதி இருந்தால் இதெல்லாம் கெட்டுப்பூடுதா?”

ஏரிக்கரையின் ஓரமாக ரயில்வே லைன் மேட்டுச் சரிவில் தடிக்கம்பை ஊன்றியவாறு உட்கார்ந்திருந்த பிச்சைக்காரன் பீடிப்புகையைக் காற்றில் ஊதிவிட்டான்.

“அப்பாடா! சாப்பிட்ட உடனே வயித்திலே ஒரு வலி! திங்கறதுலே ஒண்ணும் சொகமில்லே: ஆனா தின்னாதான் சொகம். ஒடம்பிலே சேத்துக்கறதா சொகம்? உடம்பிலேருந்து எல்லாத்தையும் போக்கிக்கறதிலே தான் சொகம். உடம்பையே போக்கிக்கிட்டா?... சொகந்தான்! ஆனா, உடம்பிலே இருக்கிற சொரணையே போயிட்டா, சொகம் ஏது?

இப்பொழுது அவன் முழங்காலளவு தண்ணீரில் நின்று கொண்டு வானத்தை அண்ணாந்து பார்த்தான். நிலவும் நட்சத்திரங்களும் அவன் கண்களுக்கும் அழகாகத் தான் தெரிந்தன.

“ம் தோ அதான் சப்தரிஸி மண்டலம். அந்த நாலு நட்சத்திரம் சதுரமா இருக்கு. அதுக்கு ஓரமா வாலு மாதிரி மூணு நீட்டிக்கிட்டு இருக்கே. அந்த மூணுல நடுவாலே இருக்குதே. அதுக்குத் தள்ளி மங்கலா… அதான் அருந்ததி நட்சத்திரம்… சரிதான். நமக்கு ஆயுசு கெட்டி! அருந்ததி தெரியுதே… அம்மாஞ்சுளுவா எல்லாருக்கும் தெரியுமா அது? லேசா எழுதி கலைச்சிட்ட மாதிரி… புள்ளி மானத்திலே இருக்கா, கண்ணுல இருக்கா?ன்னு கண்ணைக் கசக்கிட்டு எங்கியுமில்லேன்னு சொல்லிடுவாங்க பலபேரு. அருந்ததியைப் பார்த்தவனுக்கு ஆறுமாதசத்துக்க சாவு இல்லேம்பாங்க…”

நிலவொளியில் பளபளத்துக் கொண்டிருக்கும் ஏரி நீரில் புரண்டு எழுந்து குளுமை பெற்றுவரும் தென்றல் காற்று அந்த வியாதிக்காரனின் உடலையும் தழுவத்தான் செய்தது. நீரின் அலைகள், சின்னஞ்சிறு கால்கள் சலங்கை அணிந்து சதிராய் நடந்து வருவது போல கரையில் மோதித் தளதளக்கும் இனிய நாதத்தை அவன் செவிகளும் கேட்டன.

கரையோரத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த காட்டுப் பூக்களின் நெடிமிக்க போதை மணம் அவனது நாசியையும் துளைக்கத்தான் செய்தது... அவன் வாழ ஆசைப்படுவதில் என்ன தவறு?

வெகு நேரத்திற்குப் பிறகு தண்ணீரிலிருந்து கரையேறி வந்து, அங்கு கழற்றிப் போடப்பட்டிருந்த கான்வாஸ்ஸை எடுத்து குனிந்து நின்று காலில் அணிந்து கொண்டான். அப்படியே அவன் தலை நிமிரும் போது எதிரே.

நீண்டு செல்லும் இருப்புப் பாதையில் வளைந்து திரும்பும் அந்தக் கண்ணுக்கெட்டிய எல்லையில் வெளிச்சம் தெரிந்தது. ஒரு துண்டு வெளிச்சம் தான் அந்த ஒளிக்கீற்றின் அசைவால் தரையில் செல்லும் இருப்புப் பாதையிலும், வானில் செல்லும் தந்திக் கம்பிகளிலும் ஒரு ஜொலிப்புத் துண்டம், விட்டு விட்டுத் தாவிச் செல்லுவது போலிருந்தது. தூரத்தில் ரயில் வருகின்ற ஓசை லேசாகக் கேட்டது.

“அடேயப்பா! மெயிலு வரானோ? மணி பன்னெண்டா ஆயிடுச்சு! என்ற தண்டவாளத்தைக் கடப்பதற்காகக் கைத்தடியைச் சரிவில் ஊன்றித் தட்டுத் தடுமாறி ரயில்வே லைன் மேட்டின் மீது ஏறும் போது, தூரத்தில்...

நீண்டு செல்லும் இருப்புப் பாதையின் வளைந்து திரும்பும் கண்ணுக்கெட்டிய எல்லையில் இரண்டடி உயரத்திற்கு, வெள்ளையாய் அசைகின்ற உருவம்,ஏதாவது மிருகமா?அல்லது...

கால்களை மண்டியிட்டு தலையில் ஊர்ந்து வந்த அந்த மனித உருவம், ரயில்வேலைன் மீது ஏறியதும் எழுந்து நின்றது. ஒரு முறை பார்த்து, தன் பின்னால் பிச்சைகாரன் வரும் திசையைப் பார்க்கத் திரும்பிய போது அதற்குள் நிற்க முடியாமல் கால்கள் நடுங்க, மெல்லக் கைகளைத் தரையில் ஊன்றித் தண்டவாளத்தின் மீது உட்கார்ந்து கொண்டது. பிறகு உறுதியுடன் இரண்டு தண்டவாளங்களுக்கும் குறுக்காக விறைத்து நீட்டிப்படுத்துக் கொண்டது.

“அடச்சே, மனுசப்பயதாண்டோய்! உசிரை, வெறுத்துவிட்டான். போல – ஐயய்யோ! உங்களுக்கு ஏண்டா புத்தி இப்படி போவுது? வெளிச்சம் வருதே! என்று பதறியவாறு, விரல்களில்லாத பாதங்களுக்குப் பாதுகாப்பாய் இருந்த கான்வாஸ் தேயத்தேய இழுத்தவாறு தாவித் தாவி ஓடிவந்த பிச்சைக்காரனின் செவிகளில் தூரத்து ரயில் சத்தம் பேரோசையாகக் கேட்டது.

ரயிலின் ஓசை சமீபித்து விட்டது. பிச்சைக்காரன் ஓடி வந்த வேகத்தில், கண்களை இறுக மூடித் தண்டவாளத்தின் குறுக்காக விரைந்து நீட்டிக் கிடந்தவனின் விலாவுக்கடியில் கைத்தடியைக் கொடுத்து,மயானத்தில் பிணத்தைப் புரட்டுவது போல் நெம்பித் தள்ளினான். அவனைத் தள்ளிய வேகத்தில், வியாதிககாரன் இரண்டு உள்ளங்கைகளாலும் பற்றிப் பிடித்திருந்த தைத்தடி எகிறி விழுந்தது. தண்டவாளத்திலிருந்து உருண்டு எழுந்து அந்த இளைஞன் ஒன்றும் புரியாமல் எதிரிலிருப்பவனை வெறித்து விழித்தான். 'மறுபடியும் தன்னைத் தள்ளிவிட்டு அவன் ரயிலின் முன்னேபோய் விழுந்து விடுவானோ என்ற பயத்துடன் தனது கைகள் இரண்டையும் அகல விரித்துக் கொண்டு அவன் மீது பாய்வது போல் நின்று, "வேணாம் ஐயா, வேணாம்! உசிரு போனா வராது" என்று கெஞ்சினான் வியாதிக்காரன். அவன் முன்னே இரண்டு கால்களும் வெடவெடக்க உடலே நடுங்க நின்றிருந்தான் அந்தஇளைஞன்.

அப்பொழுது "ஹோ வென்ற பேரிரைச்சலோடு வந்த மெயில் வண்டி, அந்த இருவரின் மீதும் தன் நிழலை ஏற்றி இழுத்தவாறு கட கடந்து ஓடியது. ரயிலின் பேரோசை அருகே அதிர்ந்து நகரும் வரை மௌனமாய் நின்றிருந்த, இருவரும் ரயில் அவர்களைக் கடந்து போனபின் அதன் பின்புறத்தைப் பார்த்தனர். செக்கச் சிவந்த ஒற்றை விளக்கு ஓடி ஓடித் தூரத்தில் மறைந்தது. நின்றிருந்த இளைஞன் கால்கள் நிலைக்காமல் உட்கார்ந்து கொண்டான். வியாதிக்காரன் கையிலிருந்த எகிறிப் போன கைத்தடியைத் தேடி எடுத்துக் கொண்டு வந்தான். "யோவ்! உன்னைச் சொல்லிக் குத்தமில்லை ஐயா இந்த எடத்து ராசி அப்படி! ஆமா, இந்த எடத்துக்கு ஒரு காவு வேணுமின்னு இருக்கு. ஒண்ணு ரெண்டுன்னு உன்னோட மூணு ஆச்சு. நாளைக்குப் பொளுது விடியட்டும். ரெண்டு எலுமிச்சம் பழத்தையாவது வாங்கி வெக்கனும். முந்தாநாளு அப்படித்தான் - ஏரிக்கரையிலே யாரோ ஒருஅம்மாவும் ஐயாவம் கொளந்தையை விட்டுவிட்டு கட்டுச்சோத்தை அவுத்து வெச்சிச் சாப்பிட்டுக்கிட்டு இருந்தாங்க. அதுக்கென்னா தெரியும் பச்சைப்புள்ளை! நடந்து நடந்து வந்து தண்டவாளத்திலே ஏறிட்டுது. இந்த எடம் தான் ரயிலு வார நேரம், அப்புறம், நான் பார்த்துட்டேன். வேற யாரையுங்காணோம். சரித்தான் ஆபத்துக்குப் பாவமில்லேன்னு தொட்டுத் தூக்கிட்டேன்..." என்று சொல்லிவிட்டு ஒரு விநாடி மௌனமாகி நின்றான். பிறகு எதையோ நினைத்துப் பெருமூச்சுடன்,

"ம்…. இருக்காதா… பெத்தவங்களுக்குதான் தெரியும் புள்ளை அருமை"! என்று தன் நினைவுக்கு அவனே சமாதானம் சொல்லிக்கொண்டு தொடர்ந்தான். "எதுக்குச் சொல்ல வந்தேன்னா, இந்த எடத்து ராசி அப்படி. இன்னக்கிக் காத்தாலேகூட ஒரு எருமை மாடு.. ஆபத்துன்னு வந்தா மனுசனுக்கே புத்தி மாறிப்பூடுது. எருமை என்னா பன்னும்? கூட்ஸ் வண்டி வந்துட்டான். இஞ்சினுக்காரன் ஊதறான்…ஊதறான்.. இது என்னடான்னா, லைனைவுட்டு நவுறாம, நேரா ஓடிக்கினே இருக்குது. அவன் வந்த வேகத்திலே பிரேக் போட்டாப் புடிக்கிதா, என்னா எளவு? ரயிலும் ஓடியாருது, எருமையும் ஓடுது நானு ஒரு பக்கத்திலே ஓடி, கல்லுங்களை எடுத்து அடிச்சிக்கினே இருக்கேன். அப்புறம், சும்மா ஒரு மயிரிளையிலே தப்பிச்சிதுன்னு வெச்சிக்கியேன்.." என்று அந்த இடத்தின் ராசியை விவரித்தான் வியாதிக்காரன்.

அந்த இளைஞன் தலையைக் குனித்து மௌனமாய் உட்கார்ந்திருந்தான். வியாதிக்காரன் ஒரு பீடியை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான். "நா" ஒருத்தன் இந்தப் பக்கந்தானே சுத்திக்கிட்டிருக்கேன். இப்ப என்னடான்னா, ஏதாவது ஆடு கீடு வந்து நிக்குதோன்னு ஓடியாந்தேன்… நல்ல வேளை ஒரு மனுசனைச் சாவுலேருந்து தடுத்தாச்சி.. ம் நாம்பளா தடுக்கிறோம்? ஒனக்கு இன்னம் ஆயுசு இருக்கு என்னமோ, தடுக்கணும்னு இருக்கு, தடுத்தாச்சி.. இல்லாட்டி., (மனுஸன்) தடுத்தா வர்ர சாவு நின்னுடப்போவுது" என்று வாயில் புகையும் பீடியுடன் தோளில் கிடந்த துண்டை எடுத்துத் தலைப்பாகையாகச் சுற்றிக் கொண்டான். பிறகு, மண்ணில் தலைகுனிந்தவாறு காலை மடக்கிப்போட்டு உட்கார்ந்திருந்த அந்த இளைஞனை மௌனமாக உற்றுப் பார்த்தான். அவன் அழகாக இருந்தான் நல்ல இளைஞனை மௌனமாக உற்றுப் பார்த்தான். அவன் அழகாக இருந்தான் நல்ல நிறம் தலைமயிர் நிலா வெளிச்சத்தில் கருகருவெனப் பளபளத்து இருந்தது வெள்ளை நிற எட்டுமுழ வேட்டி உடுத்திருந்தான். அவன் 'தன்னைப் போல் பரம ஏழையோ, பிச்சைக்காரனோ, வியாதிக்காரனோ அல்ல" வென்று தோன்றியது. 'வறுமையோ, பட்டினியின் கொடுமையோ அந்த இளைஞனிடம் தெரியவில்லை. பின் எதற்காகத் தற்கொலை செய்து கொள்ள வந்தான்? என்று தெரிந்துகொள்ளத் துடித்தது வியாதிக்காரனுக்கு.

“சாத்தான், எந்திரிச்சி வாய்யா! தோ.. அங்கே சத்தரத்துத் திண்ணையிலே போய்க் குந்துவோம்... இந்தச் சத்தரம் இருக்கே...” என்று பேசிக்கொண்டே நடந்து திரும்பிப் பார்த்த பிச்சைக்காரன், அவன் இன்னும் எழுந்திருக்காமல் தூரத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். “என்னாய்யா, குந்திக்கினே இருக்கியே? இனிமே அடுத்த ரயிலு காத்தாலே ஆறு மணிக்கு வடக்கே போற பார்சலுதான் வா போவோம். ஒலகத்துலே மனுசன்னு பொறந்துட்டா கஸ்டமும் இருக்கும். சொகமும் இருக்கும் கஸ்டத்துக்குப் பயந்து செத்துப்பூட்டா, சொகத்தை அனுபவிக்கிறது யாரு? கஸ்டத்தைப் பார்த்துச் சிரிக்கணுமய்யா, ஏன்னா, கஸ்டம் வருதுன்னா பின்னாடிச் சொகம் காத்துக்கிட்டு இருக்குதுன்னு அர்த்தம்... ம், எளுந்திரு, போகலாம்...” என்று உற்சாகமாகப் பேசும் பிச்சைக்காரனை நிமிர்ந்து பார்த்துக் கலங்குகின்ற கண்களோடு முகத்தில் பரிதாபகரமான புன்சிரிப்போடு அந்த இளைஞன் எழுந்திருப்பதற்கு முன்னால் உதவிக்குக்கை நீட்டினான்.

தெய்வமே.. இவன் கையைப் புடிச்சு நான் தூக்கறதாவது? என்று விலக்கிக் கொண்டான், பிச்சைக்காரன். அந்த இளைஞன் தன் முயற்சியால் கைகளை ஊன்றி ஒருவாறு எழுந்து நின்றான். பிறகு நிதானித்து, காலைப் பதனமாக ஊன்றி மறுகாலை உயர்த்தும் போது தடுமாறி விழ இருந்தவன், பிச்சைக்காரனின் தோள்களைப் பிடித்துக் கொண்டு நின்றான். அவன் பிடித்த வேகத்தில் நிலைகுலைந்த பிச்சைக்காரன் சமாளித்தவாறு, அப்பொழுதுதான் அந்த இளைஞனின் கால்களைப் பார்த்தான். அவை பார்ப்பதற்கு ஒழுங்காக இருப்பன போன்று தோன்றின. என்றாலும் முழங்காலில், தொடைகள் சேர்கின்ற இடம் முழுதும் - முழங்கால் மூட்டுகள் உறுதியற்று நடுங்கிக் கொண்டிருந்தன. முழுங்காலுக்குக் கீழே நான்கு புறமும் மடங்கும் தன்மையுடன் கால்கள் தொளதொளத்துச் சூம்பிக் கிடந்தன.

சற்று நேரத்திற்கு முன் தூரத்துப் பார்வைக்கு இரண்டடி உருவமாய்க் குறுகித் தெரிந்த அந்த உருவம் நினைவுக்கு வந்தது. பிச்சைக்காரனுக்கு அந்த இளைஞன் நடக்க முடியாமல் மண்டியிட்டுத் தவழந்து வந்திருக்கிறான் என்பதை யூகித்து, “இந்தாய்யா! இந்தக் கம்பை வச்சிக்கிட்டு நடக்கிறியா? என்று கைத்தடியைக் கொடுத்தான்.

“ஊஹூம் முடியாது இப்படியே வரேன்.. நீ நடந்தா நானும் வருவேன்….” என்று அவன் தோள்களை இறுகப் பற்றியவாறு கூறினான் நொண்டி.

வியாதிக்காரன் லேசாகச் சிரித்தான். ‘கம்பு இல்லாம நானும் நடக்க முடியாது… இருந்தாலும் சமாளிச்சிக்கிடலாம்னுதான் குடுத்தேன். கையிலே கம்பு இருந்தா உன்னைத் தூக்கிக்கிட்டு கூட நடப்பேன்.. வா போவோம்” என்று கைத்தடியைப் பூமியில் உறுதியாய் ஊன்றித் தாங்கித் தாங்கி நடந்த வியாதிக்காரன் தோளில் தொங்குவதைப் போல் பிடித்துக் கொண்டு ஊனக் கால்களைத் தத்தித் தத்தி இழுத்தவாறு நகர்ந்தான் நொண்டி.

“ஐயா”

“ம்”

“ரொம்ப பாரமா இருக்கேனா? உம் உம்.. பார்த்து”

அதெல்லாம் ஒண்ணுமில்லே.. பயப்படாம வா…”

“இப்படி எல்லாருக்கும் பாரமா இருக்கப் பிடிக்காமத்தான் பிடிக்காமத்தான்…” என்று விம்மினான் நொண்டி.

“… உசிரையே விட்டுடலாம்னு பாத்தியா? ஏய்யா எப்பப் பார்த்தாலும் உன்னைப் பத்தியே உனக்கு நெனப்பு?...”

“என்னாலே எல்லாருக்கும் கஷ்டம் தான்…”

அவர்கள் இருவரும் தட்டுத் தடுமாறிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

நொண்டியும் வியாதிக்காரனும் நிலா வெளிச்சம் இறங்கிக் கொண்டிருக்கும்.திண்ணையில் படுத்திருந்தனர். வியாதிக்காரன் பாதிபடுத்தும் பாதி படுக்காமலும் தூணில் சாய்ந்து கால்களை நீட்டிக் கொண்டு பீடி புகைத்துக் கொண்டிருந்தான்.

“பீடி குடிக்கிறியா, ஐயா?

“வேண்டாம் பழக்கமில்லை…” என்று குப்புறப் படுத்திருந்த நொண்டி பதில் சொன்னான் திடீரென்று குப்புறக் கிடந்த முகத்தைத் திருப்பி வியாதிக்காரனைக் கேட்டான் நொண்டி “கஷ்டத்திற்கு அப்புறம் தான் சொகம்னு சொன்னியே.. எனக்கு இனிமே ஏது சொகம்? சொகமே வராதுன்னு தெரிஞ்சும் எதுக்கு நான் இருகக்கணும்?

“சொகமே வராதுன்னு முடிவு சொல்லறதுக்கு நீ யாரு? கஸ்டம் வரப் போவுதுன்னு நீயா முன் கூட்டியே சொன்னே? அது திடீர்னு வந்தமாதிரி

இது வராதா!.. அதெல்லாம் அவன் பார்த்துச் சொல்லணும் என்று வானத்தை நோக்கிப் புகையை ஊதினான் பிச்சைக்காரன்.

வியாதிக்காரனுக்கே தான் சொன்ன பதில் நொண்டியின் மனச் சமாதானத்துக்குத்தான் என்று தெரிந்தது. “சாகப் படாது ஐயா.. அதான் ஒரு நாளைக்கு எல்லாருமே சாகப்போறமே?.. அதுவரைக்கும் இருந்துட்டுதான் சாவமே..” என்று சமாதானம் கூறினான். “அது சரி நீ பாட்டுக்குச் சாகறத்துக்கு வந்துட்டியே.. உனக்கு தாயி, தகப்பன், குடும்பம்னு ஒண்ணுமில்லையா? என்னை மாதிரி அநாதைதானா?” என்றான் வியாதிக்காரன்.

“அம்மா…” என்ற பெருமூச்செறிந்தாவாறு எழுந்து உட்கார்ந்து நொண்டி, சில விநாடிகள் மௌனமாய்த் தலைகுனிந்திருந்துவிட்டு, விம்மி விம்மி அழஆரம்பித்தான்.

“வருத்தப்படாதே ஐயா” என்று ஆறுதல் கூறினான் பிச்சைக்காரன் முகத்தை துடைத்துக் கொண்டு சொன்னான் இளைஞன்.

“அதோ தெரியுது பாரு” என்று ரயில்வே லைனுக்கு நேரே வரிசையாகத் தெரியும் சில வீடுகளின் கொல்லைப்புறத்தைக் காட்டி, “அங்கேதான் எனக்கு வீடு அம்மா இருக்காங்க, தம்பி இருக்கான். தம்பிக்கிக் கலியாணமாகிக் கொழந்தைகள் கூட இருக்கு. என்னாலே தான் யாருக்கும் உதவியுமில்லை. சந்தோஸமுமில்லே. நான் வயித்திலே ஜனித்ததிலிருந்து எங்க அம்மா என்னைச் சுமந்துகிட்டே இருக்காங்க. அம்மாவுக்கு ஒரு நம்பிக்கை – எனக்குக் காலு வந்துடும்னு. எப்பப் பார்த்தாலும் தம்பிக்கிட்டே அந்த டாக்டரைப் பார்க்கணும் இந்த டாக்டரைப் பார்க்கணும்னு பணத்தை வாங்கிக்கிட்டு டாக்டர்களைப் பார்த்ததுதான் மிச்சம். அவன் என்ன பண்ணுவான்?.. வரவரத் தம்பியும் குடும்பஸ்தனாக மாறிப் புள்ளைகளும் பெண்டாட்டியுமா ஆனப்புறமும் நான் ஒரு சொமையா இருக்கிறதா? எனக்காக அம்மாவும் தம்பியும் தினம் சண்டை போடறாங்க. தம்பி கோவத்திலே என்னை ‘நொண்டி’ ன்னு சொல்லிட்டான். அம்மா, ‘ஓ’ ன்னு அழுதுட்டாங்க” என்று நொண்டி சொல்லும்போது வியாதிக்காரனின் மனசில், ராமலிங்கசாமி மாதிரி கதோரத்திலே முக்காட்டுத் துணியைச் சொருகிக் கொண்டு ‘பரதேசி’ ன்னு கூப்பிடும் அந்தக் குரலும் முகமும் தோன்றின. நீட்டிய கால்களின் முழந்தாள் மூட்டுகளைப் பிசைந்து கொண்டே சொன்னான் நொண்டி, “ நேத்து ஏதோ ஒரு நாட்டு வைத்தியர்

இந்த மாதரிக் குறையெல்லாம் தீத்து வைக்கிறார்னு யாரோ சொன்னாங்க – அம்மா கையிலே இருந்த காசை முந்தானையிலே முடிஞ்சுண்டு 'வாடா'ன்னு உசிரை வாங்கி என்னை அழைச்சிண்டு போறப்ப நான் என்ன பண்ணுவேன். சொல்லு சரின்னு அம்மா தோள்லே தொத்திண்டு போனேன். அந்த வைத்தியன் இருக்கிற இடம் நாலு மைல் இருக்கு… பஸ்ஸிலேதான் போகணும்…போனோம்.. அம்மா ஆசையிலே, வழக்கம் போல இல்லாம ஒரே தடவையிலேயே மண்ணு விழுந்துட்டுது… என் காலைப் பாத்துட்டு "முடியாது" ன்னுட்டான் அவன். இவன் ஒண்ணும் நல்ல வைத்தியன் இல்லே.. ஊரை ஏமாத்தறவன்'னு ஒரே நிமிஸத்திலே, அவன் பல நாளா சூட்டிண்டிருந்த புகழ் மாலையை எல்லாம் வெடுக்குனு பிடுங்கிண்டு 'வாடா போகலாம்'னு என்னை அழைச்சிண்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்துட்டாங்க அம்மா… பஸ்ஸிலே ஒரே கூட்டம்…."

ஒரு நிமிஸம் பேச்சை நிறுத்திக் கண்கலங்க எங்கோ பார்த்தவாறு வெறித்த விழிகளுடன் நெஞ்சில் பெருகி, தொண்டையில் அடைத்த துயரை விழுங்கினான் நொண்டி. அவன் வாழ்வின் மீது கொண்ட வெறுப்புக்கெல்லாம் எந்த ஒரு நிகழ்ச்சி காரணமாய் அமைந்து அவனைச் சாவின் பீடத்துக்குக் கொண்டு வந்து தள்ளியதோ – அந்த நிகழ்ச்சி மனசில தெரிந்தது. அதை மனசால் பார்த்துக் கொண்டே வியாதிக்காரனிடம் விவரித்தான் நொண்டி.

அந்தக் காட்சி…

வெள்ளைப் புடவையுடுத்தி முக்காடிட்ட அந்த வயோதிகத் தாயின் தோளைப் பற்றி, தன்னுடலின் முழுப் பாரத்தையும் அவள் மேலே சுமத்திக் கொண்டு வரும் மகனிடம், "கட்டாலே போறவன்: யாராரோ சொன்னாளேன்னு நம்பி வந்தேன். இவன் ஒண்ணும் வைத்தியம் இல்லே. பில்லி சூனியம் வைக்கிறவன். நீ கவலைப்படாதேடா கண்ணா! நான் உன்னை அடுத்த மாசம் வேலூர் மிஸன் ஆஸ்பத்திரிக்கி அழைச்சிண்டு போயி…" என்று அவள் ஏதோ சொல்ல வரும் போது அவள் தோளில் நெற்றியைத் தேய்த்துக் கொள்வது போல் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே சொன்னான் மகன்.

"எனக்குக் காலில்லையே'ங்கள கவலைகூட இல்லேம்மா: நீ எனக்காகப் படற சிரமத்தைப் பார்த்தாத்தான் ரொம்பக் கஸ்டமா

இருக்கும்மா". என்று விம்முகின்ற குரலோடு அவள் தோளில் நெற்றியைத் தேய்த்துக் கொண்டே இருக்கும் போது, பஸ் வந்தது,

"கண்ணா கெட்டியாப் பிடிச்சுக்கோ… பாத்து…. இதோ, இப்பிடி உக்காந்துக்கோ" என்று மகனைச் சுமந்து இழுத்தவாறு பஸ்ஸின் அவள் ஏறுவதற்குள், முன்பக்கத்தில் டிக்கட் கொடுத்துக் கொண்டிருந்த கண்டக்டர், "ஆச்சா? எவ்வளவு நாழி?" என்று அவசரப்படுத்தினான். ஒருவாறு சிரமத்திற்குப் பின் பஸ்ஸில் ஏறியதும், எதிரில் இருந்த இருவர் உட்காரும் ஸீட்டில் மகனைப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு உட்கார்ந்தாள் அம்மா.

பஸ் போய்க்கொண்டிருக்கும் போது, அவனது தாய் சேலைத் தலைப்பிலிருந்த சில்லரையை எடுக்கும் போது, அவன் அகஸ்மாத்தாகத்

திரும்பும்போது அவர்கள் ஸீட்டுக்கு மேலே எழுதியிருந்த 'பெண்கள்' என்ற வாசகம் அவன் கண்களில் பட்டது. அப்பொழுது ஒரு ஸ்டாப்பில் பஸ் நின்றது. அழகிய இளம் பெண்ணொருத்தி பஸ்ஸில் ஏறினாள். அவளைப் பார்த்தவாறே அருகில் வந்தான் கண்டக்டர்.நொண்டி ஒரு வினாடி பெண்ணைப் பார்தான். அவளது இடத்தில் தான் உட்கார்ந்திருப்பதை உணரும் போது அவனது ஆண்மை உணர்ச்சி அவனுள் ரகசியமாக வதைப்பட்டுக் கொண்டிருக்கும் அதே சமயம், அதைக் கொல்வது போல் கண்டக்டரின் குரல் ஒலித்தது: "இந்தாய்யா ஆம்பளே! பெம்மனாட்டி நிக்கிறாங்க இல்லே?"

அந்த நொண்டி திடீரென்று கால்கள் வந்துவிட்டது போல எழுந்து நின்றான். அவன் எழுந்த வேகத்தில் அந்தப் பெண் அந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டாள். எழுந்து நின்ற நொண்டியின் கால்கள் நடுங்கின.

"ஐயா!.. ஐயா! என்ற தாயின் பரிதாபமான குரல் கண்டக்டரையும் அந்தப் பெண்ணையும் பஸ்ஸிலுள்ள அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. இன்னொருவர் சொல்லித் தன் காதால் கேட்கப் பெறாத அந்த வார்த்தையை அவளே சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம்…"ஐயா!அவன் நொண்டி ஐயா! நிக்க முடியாதையா…" என்று சொல்லிக் கண்களில் வழிந்த கண்ணீருடன் எழுந்து தன் இடத்தைக் காட்டி, "கண்ணா, நீ இப்படி உக்காந்துக்கோடா" என்று சொல்லும்போது தடுமாறி விழ இருந்த மகன், தாயின் தோளைப் பிடித்துக் கொண்டு சொன்னான். 'இல்லேம்மா நான் நிப்பேன்".

“உன்னாலே முடியாது கண்ணா” என்று அந்தப் பெண்ணின் பக்கத்தில் மகனை உட்கார வைத்து அந்தத் தாய் நிற்கும்போது, அந்தப் பெண் எழுந்து அவன் தாயிடம் மன்னிப்புக் கேட்பது போல், “நீங்க உட்காருங்க அம்மா” என்று வற்புறுத்திக் கெஞ்சினாள். கண்டக்டரின் முகம் அழுவது போல் மாறிவிட்டது. “ஸார், மன்னிச்சுக்குங்க, எனக்கு முதல்லே தெரியல்லை ஸார்…” என்று நொண்டியிடம் குனிந்து சொன்னான். நொண்டி யாருக்கும் ஒன்றும் பதில் சொல்லாமல், யார் முகத்தையும் பார்க்காமல், பக்கத்தில் அமர்ந்திருந்த தாயின் பின்னால் ஒரு குழந்தையைப் போல் முகம் புதைத்து, அழுகையை அடக்கி, நெற்றியை அவள் தோளில் தேய்த்துக் கொண்டே இருந்தான்.

பஸ் போய்க்கொண்டிருந்தது. பஸ்களிலிருந்த எல்லோரின் அநுதாபமும் அவன் நெஞ்சில் கனமேற்றி அவன் உயிரையே அரிப்பது போல்….

நொண்டி சொல்லிக் கொண்டிருந்ததை எல்லாம் மௌனமாயக் கேட்டவாறிருந்த வியாதிக்காரன் தன்னைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தான்.

‘இவனுக்கு இன்னும் வயசு இருக்கு, வாழ்க்கை இருக்கு இவனுக்கு ஒரு கஸ்டம்னா வருத்தப்படறதுக்கு, உதவி செய்யறதுக்கு உறவுக்காரங்க இருக்காங்க, இவன் வாளணும்னு ஆசைப்படறதுக்கு அன்பான தாய் இருக்கா… இவன் நொண்டின்னு தெரிஞ்சு அன்பு காட்ட, பரிதாபப்பட, பிரியம் காட்ட உலகமே இருக்கு.. இவன் எதுக்குசாவணம்? என்று ஆரம்பித்த மனம் தன்னைப் பற்றி எண்ணும் போது…

“எனக்கு யார் இருக்கா? எனக்கு ஒரு கஸ்டம்னா, வருத்தப்படறதுக்கு, உதவி செய்யறதுக்கு உறவு இருக்கா? உறவுங்கெல்லாம் உதறித்தள்ளி எத்தனையோ காலம் ஆயிடுச்சே? நான் வாளணும்னு ஆசைப்படற ஜீவன் என்னைத் தவிர இன்னொண்ணு உண்டா? எனக்கு அன்பு காட்ட, பரிதாபப்பட்ட, பிரியங்காட்ட யார் இருக்கா? உலகமே வெறுத்து முகம் சுளிச்சு என்னைப் பாக்குது என்றெல்லாம் எண்ணி மௌனமாய் உட்கார்ந்திருந்தான் வியாதிக்காரன். நொண்டியின் இமைகளைத் தூக்கம் அழுத்த, அவன் கொட்டாவி விட்டான். அந்த சப்தம் கேட்டு வியாதிக்காரன் நொண்டியைப் பார்த்தான். ‘இந்தாய்யா, நீ சாகப்படாது.. சொல்லிட்டேன்,ஒனக்குக் காலு இல்லேங்கிற நெனப்பினாலேதான் நீ கஸ்டப்படறே, மத்தவங்களையும் கஸ்டப்படுத்தறே”.

“நான் தான் சொல்றேனே, எனக்குக் காலில்லாம மத்தவங்களுக்கு நான் பாராமா இருக்கேனே! எங்கம்மா வைத்தியனுக்குன்னு தம்பியைப் பணம் கேக்கறப்போ அவங்க ரெண்டு பேருக்கும் என்னாலே எவ்வளவு சண்டை! எவ்வளவு வருத்தம்!” என்று நொண்டி சொல்ல, குறுக்கிட்ட வியாதிக்காரன், “ஆமாய்யா, நீ சதாநேரமும் உங்கம்மா தோளைப் புடிச்சுத் தொங்கிட்டே இருந்தா அப்படித்தான் சண்டை வரும். காலு இல்லாட்டிப்போனா என்னய்யா? கையாலே இந்த உலகத்தையே வளைக்கலாமே! வாளறதுக்குக் காலும் கையும் வேணாமய்யா, நல்ல மனசு வேணும். அறிவு வேணும், மனுசனோட அறிவு யானையைக் காட்டியும் சிங்கத்தைக் காட்டியும் வலுவானது. இல்லே’ங்கிறதுக்காகச் செத்து இருந்தா மனுச சாதியே பூண்டத்துப் போயிருக்கும். காலு இல்லாட்டி அது இல்லாத கொறையை மாத்திக்கிட்டு எப்படி இருக்கிறதுன்னு யோசிக்க ஆரம்பிச்சேன்னா காலு இருக்கிறவங்களைக் காட்டியும் நீ வேகமா ஓடிடமாட்டியா?

“மனுசனுக்கு ரெக்கை இருந்திருந்தா அவனும் பறந்துகிட்டிருப்பான். ரெக்கை இல்லாததனாலதான் ‘விர்ரு விர்ரு’ன்னு இப்ப ஏரோப்ளேன்லே பறக்கறான். இன்னும் மானத்துலே எங்கெங்கியோ போயி என்னென்னத்தையோ புடிக்கிறான். இல்லேன்னு சாவறதா? உங்கம்மாவெ, ‘என் மகனுக்குக் காலு இல்லாட்டி என்ன, அவன் என்னென்னா காரியம் பண்றான்’னு நெனைக்க வெச்சிட்டியினா அவுங்க ஏன் உன் தம்பிக்கிட்டே போயி வம்புக்கு நிக்க போறாங்க? நீ என்னா என்னை மாதிரி தீராத நோயாளியா? நானே வாளறப்போ நீ சாகப்போறேங்கறியே?..” என்று சொல்லும்போது வியாதிக்காரனின் தொண்டை அடைத்தது. அவனது பேச்சால் வியாதிக்காரனின் நெஞ்சிலிருந்து, ‘வாழவேண்டுமென்ற ஆசை, வாழ முடியும் என்ற நம்பிக்கை” நொண்டியின் இதயத்தில் தொற்ற ஆரம்பித்தது. நொண்டி புதியதோர் நம்பிக்கையுடன் தலை நிமிர்ந்து வியாதிக்காரனைப் பார்த்தான். வியாதிக்காரன் தொடர்ந்தான்.

“நீ என்னமோ சொல்றியே… பஸ்ஸிலே உன்னை எந்திரிக்கச் சொன்னான். அப்புறம் உக்காரச் சொன்னான்னு.. அதுக்காக உன் மனசு கஸ்டப்பட்டது. நாயந்தான். தோ, என்னைப்பாரு, என்னை அந்த பஸ்ஸிலே ஏறவுடுவானய்யா? நீ என்னைப் பகல்லே பார்த்தா இப்பிடி பக்கத்திலே உக்காந்து பேசக்கூட மாட்டே, தோ வெளிச்சத்திலே பாரு இந்தக் கையை” என்று தன் குறைப்பட்ட கைகளை மேலே இருந்த கோட்டை இழுத்து

விட்டுக் கொண்டு நிலா வெளிச்சத்தில் நீட்டி விம்மினான்: "இந்தக் கை கொஞ்ச நாளைக்கு முன்னே முளுசா இருந்தது. உனக்குக் காலு இல்லே – அவ்வளவு தான் எனக்கு இருக்கிறதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா இல்லாமப் போயிக்கிட்டே இருக்கு.. இந்தக் கையாலே முந்தாநாளு ஒரு கொளந்தையைத் தூக்கிட்டேன். கொளந்தையைத் தூக்கணம்கிற ஆசையினாலேயே தூக்கினேன்? சீ! அந்த ஆசை எனக்கு வரலாமா? தண்டவாளத்திலே வந்து நிக்கிதே, ரயிலு வார நேரமாச்சேன்னு பதறித்தூக்கிட்டேன். நான் வியாதிக்காரன்தான். என் உடம்பிலே சொரனை அத்தேபோயிடுச்சி. ஆனாலும் ஒரு கொளந்தையை தூக்கிறோம்கிற நெனைப்பிலேயே என் மனம் சிலுத்துப் போச்சு.. ஆனா, ஆனா… அதுக்காக அந்தப் பெத்தவங்க என்னை அடிக்க வந்துட்டாங்க தெரியுமாய்யா?... மனுசனாப் பொறந்தும், மனுசனுக்குள்ள எந்தச் சொகத்தையும், எந்த உரிமையையும் அநுபவிக்க முடியாம நான் வாளறேனே.. ஒரு பிசாசு மாதிரி தனியா குந்திக்கிட்டு வாளறதா நெனைச்சி என்னையே ஏமாத்திக்கிறேனே" என்று சொல்லும் போது கொஞ்சம் கொஞ்சமாக விம்ம ஆரம்பித்து விக்கிவிக்கி அழுதான் வியாதிக்காரன்.

சற்று நேரத்திற்குப்பின் கண்களைத் துடைத்துகொண்டு ஒரு வரண்ட சிரிப்புடன் சொன்னான்.

"ஆமா, பெத்தவங்களுக்குத் தெரியும் புள்ளை அருமை… சாவைக் காட்டியும் கொடியது இல்லையா, இந்தநோயி? அப்புறம் விசயத்தைச் சொன்னப்புறம் ஒருமாதிரி சமாதானம் ஆனாங்க.. நீயா தூக்கறது? "ன்னு கேட்டிச்சி.. அந்த அம்மா, 'நீங்க சொல்றது நாயந்தான். தெரியாம செஞ்சிட்டே'ன்னு மன்னிப்பு கேட்டுகிட்டு வந்தேன். ஏன்னா, இது பொல்லாத நோயி, மனுசனுக்கு வரக்கூடாது' ஆரம்ப காலம்னா தீத்துடலாம். இது ரொம்ப முத்தின கேஸ்! இனிமே குறையாது பரவும் மத்தவங்க ஜாக்கிரதையாத்தான் இருக்கணும். ஒரு தாய்க்குத் தன் கொளந்தை செத்தாலும் பரவாயில்லே, இந்த நோய் வரப்பொறுக்கமாட்டா" என்று அவன் தன்னையுணர்ந்து தனக்குள் முனகுவதுபோல் பேசினான்.

சில நிமிஸ மௌனத்துக்குப் பிறகு நொண்டி இரண்டாவது முறை கொட்டாவி விட்டான்.

"தூக்கம் வருதா? படுத்துக்க, ஐயா! தூங்கறது ரொம்பச் சொகம். செத்தாத் தூங்கமுடியாது. கேட்டுக்க, பொளுது விடிஞ்சி பெத்த

மகராசிக்குப் புள்ளையாய் போய்ச் சேரு! உனக்கு நான் கடைசியாகச் சொல்லுறது இதுதான்: காலு இல்லேன்னு நெனச்சி நீ யாருக்கும் பாரமா இருக்காதே. இப்ப யாரோட துணையுமில்லாம எப்படி சாகவந்தியோ அந்த மாதிரி வாளப்போ. அதுலே ஒண்ணும் வெக்கப்பட வேணாம். உன்னையே பாத்து உங்கம்மா மகிழ்ந்து போவாங்க பாரு…" என்று, அணைந்திருந்த கடைசிப் பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான் வியாதிக்காரன். தூக்கம் வராமல், கீழே கிடந்த துண்டுப் பீடிகளைப் பொறுக்கிப் பற்றவைத்துக் கொண்டு தூணில் சாய்ந்து வானத்தை வெறித்தவாறு உட்காந்திருந்தான்.

"அதோ, ரொம்ப தூரம் தள்ளி வந்திடுச்சே சப்தரிஸிமண்டலம்.. நாலு நட்சத்திரச் சதுரத்துக்கு ஓரமா, வாலு மாதிரி இருக்கற மூணுக்கு நடுவாலே, ஓரத்திலே, ஆமாமா, அருந்ததி… அருந்ததியைப் பார்த்தவனுக்கு ஆறு மாசத்துக்குச் சாவில்லே! அடி செருப்பாலே! இன்னும் ஆயுசு அதிகம் வேணுமா என் கட்டைக்கி!" என்று விரக்தியும் வேதனையும் குழைய முனகிக்கொண்டே வியாதிக்காரன், கையிலிருந்து பீடியைத் தரையில் நசுக்கித் தேய்த்தான். அவன் பார்வை சப்தரிஸி மண்டலத்தை வெறித்தது.

விடிந்த ஆறு மணிக்கு வடக்கே போகும் பார்சல் வண்டியின் அவலமான கூக்குரல் கேட்டு, சத்திரத்துக்கு திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்த நொண்டி கண் விழித்தான்

அவனருகே வியாதிக்காரனின் கறை படிந்த கந்தலும், பளபளப்பான புதிய தகரக்குவளையும் தனியாகக் கிடந்தன. அங்கே ஈக்கள் மொய்த்தன.

தூரத்தில் நீண்டு செல்லும் இருப்புப் பாதையின் வளைந்து திரும்பம் எல்லையில் புகை கக்கி அழுதவாறு பார்சல் வண்டி நின்றிருந்தது! அங்கு மனிதர்கள் மொய்த்துக் கொண்டிருந்தனர்.

இங்கே சுத்திக்கினு இருப்பானே அந்த பெருவியாதிக்காரன் ரயிலு முன்னாடி போயி விளுந்துவிட்டான்…!

'அவன் எனக்கு வாழக் கற்றுக் கொடுத்தான் நான் அவனுக்குச் சாகக் கற்றுக்கொடுத்தேன். அவன் என்னைச் சந்திக்காமல் இருந்திருந்தால்?' நொண்டியின் கண்கள் கலங்கின.

அந்த இடத்தின் ராசியோ? தன்னையே காவு தந்து இன்னொரு விபத்து ஏற்படாமல் தடுக்க முயற்சியோ? அவன் மேனியிலிருந்ததா பயங்கர தொத்து வியாதி? இல்லை. என் மனசில் தோன்றியதே தற்கொலை செய்து

கொள்ள வேண்டும் என்ற எண்ணம் - அந்த 'வாழ்க்கையின் வெறுப்பு'த்தான் பயங்கர வியாதி அதற்கு அவன் பலியாகிவிட்டான்.

திடீரென்று ரெயில்வே லைனுக்கு அப்பால் வரிசையாகத் தெரியும் வீடுகளின் கொல்லைப்புறக் கதவுகளைத் திறந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோரின் நடுவே இருந்து "ஐயோ! கண்ணா? என்ற அலறல் ரயில்வே லைனுக்கு அப்பால் வெகு தூரத்திலிருந்து நொண்டியின் வயிற்றைக் கலக்கியது.

"அம்மா! நான் இருக்கிறேன்… அம்மா!" கோஸித்தவாறு வேகமாய்த் தவழந்தோடினான் அவள் மகன்.

"மகனே!.. மகனே!... என்று ரயில்வே லைன் மேட்டின் மீது விழுந்து புரண்டு கொண்டிருந்த அவன் தாய் 'நான் இருக்கேன்' என்ற குரல் கேட்டு அவனைப்பார்த்து ஒன்றும் புரியாமல் அடி வயிற்றை பிடித்துக்கொண்டு கண்ணீருடன் சிரித்தாள். பிறகு "யார் பெத்த மகனோ!" என்று ரயில் சக்கரத்தைப் பார்த்து அழுதாள்.

அவள் அருகே வந்த மகன் அவள் தோளில் முகம் புதைந்து நெற்றியைத் தேய்த்து அழுதுகொண்டே சொன்னான், "அம்மா! நான் இருக்கேம்மா… அது உன் மகனில்லே.. அது அந்த மனுஸன் அவன் செத்திருக்க கூடாது அம்மா.. ஆ!..." என்று பெருங்குரலில் கதறி அழுதான் நொண்டி.

**ஜெயகாந்தன்.**

## மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

## திருநெல்வேலி – 12

## பகுதி – 1- பொதுத் தமிழ்ப் பயிலாத அனைத்து இளநிலைப்பட்டப் படிப்பு தாய் மொழித்தமிழ் மாணவர்களுக்கு உரிய துறைசாரா விருப்பப் பாடத்திட்டம் (Non major Elective)

**(45th SCAA meeting held on 09.02.2017)**

## நான்காம் பருவம்

## வளர் தமிழ் - தாள் - 2

### பாடத்திட்டக் கால வரையறை

| | | |
|---|---|---|
| வாரம் | : | 2 மணி |
| மதிப்பீடுகள் | : | 2 |
| மதிப்பெண் பகுப்பு முறை | : | 75 +25 = 100 |
| தேர்ச்சி மதிப்பெண் | : | 40 |
| அகமதிப்பீடு | : | 25 மதிப்பெண்கள் |
| தேர்வு | : | 20 மதிப்பெண்கள் |
| பயிற்சிக் கட்டுரை | : | 5 மதிப்பெண்கள் |
| புறத்தேர்வு | : | 75 மதிப்பெண்கள் |
| கால அளவு | : | 3 மணி |
| புறத்தேர்வில் | : | 30 மதிப்பெண்கள் பெறல் வேண்டும் |

# செய்யுள் பகுதி

## 1. பரம் பொருள் வாழ்த்து

ஆத்தி சூடி யிளம்பிறை யணிந்து
மோனத் திருக்கு முழுவெண் மேனியான்
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை யெனப்பல மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே! அதனியல் ஒளியுறு மறிவாம்,
அதனிலை கண்டார் அல்லலலை அகற்றினார்
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்.

(புதிய ஆத்திசூடி பாரதியார்)

## 2. தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந்திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழத்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

**மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை**

## 3. புத்தரும் ஏழைச் சிறுவனும்

(அரண்மனையிலிருந்து வெளிப்பட்டுச் சென்ற புத்தர் வழி நடந்த களைப்பால் சோர்ந்து கிடந்தார். அவரைக் கண்ட ஓர் இடைச் சிறுவன்,தான் தாழ்ந்த குலத்தினனாதல் பற்றி, தன் கலயத்தில் பால்

கநற்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினான். பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாராட்டலாகாது என்று புத்தர் அவனுக்குப் போதித்த வரலாறு இதனுள் கூறப்படுகிறது).

## புத்தர் மயங்கி வீழ்தல்

புண்ணிய மூர்த்தி புத்தமா முனிவன்
உண்மையை உணர்ந்துஇவ் வுலகினில் என்றும்
அழியா இன்பம் அடையும் அவாவினால்
மன்னர் வாழ்வையும் மறுத்தவ னாகித்
தந்தையை மறந்து தனயனைத் துறந்து
மங்கை யசோதரை மதிமுகம் நீத்து
நள்ளிர வதனில் நன்னகர் நீங்கி,
உண்ணும் உணவும் உறக்கமும் இன்றி
இரவும் பகலும் இடைவிடாது எங்கும்
நடந்து மெலிந்து நலிவுற்று ஒருநாள்
வேனில் வெயிலில் வெந்தெரி கானலில்
கைகால் தளர்ந்து கண்களும் மூடி
மூச்சும் அடங்கி முகமும் வெளிறி
உயிரும் உடம்பில் ஊச லாட
விஞ்சிய மயக்கால் வீழ்ந்து கிடந்தனன்.

## சிறுவன் காணுதல்

ஆடுகள் மேய்த்து வரும் - ஒருவன்
ஆயர் குலச்சிறுவன்,
வாடிக் கிடந்தவனைச் - செல்லும்
வழியின் மீதுகண்டான்.

## அவன் செயல்

வையகம் வாழ்ந்திடவே – பிறந்த
மாதவச் செல்வன் முகம்
வெய்யிலில் வெந்திடாமல் - தழைகள்
வெட்டி அருகில் நாட்டான்.
தெய்வ குலத்திவனை – எளியேன்

தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யாதெனவே – சிறிது
சிந்தை தயங்கிநின்றான்.

உள்ளந் தெளிந்துடனே – வெள்ளாடு
ஒன்றை அழைத்துவந்து,
வள்ளல் மயக்கொழிய – மடுவை
வாயில் கறந்துவிட்டான்

நட்ட தழைகளெல்லாம் - வளர்ந்து
நாற்புற மும்கவிந்து,
கட்டிய மாளிகைபோல் - வனத்தில்
காட்சி யளித்த அம்மா!

பூவொடு காய்கனியும் - தளிரும்
பொலிந்து நிரம்பியங்கே,
மேவு பலமணிகள் - இழைத்த
விதானமும் ஆன அம்மா!

ஐயனை இவ்வுலகம் - காணுதற்கு
அரியவோர் தெய்வமெனக்
கைகள் தொழுது நின்றான் - சிறுவன்
களங்க மிலாவுளத்தான்.

## புத்தர் எழுந்து பால் கேட்டல்

நிலத்திற் கிடந்த ஐயன் - மெல்ல
நிமிர்ந்து தலை தூக்கிக்
“கலத்தினி லேகொஞ்சம் - பாலைக்
கறந்து தருவாய்” என்றான்

### சிறுவன் மறுத்தல்

“ஐயையோ! ஆகாது” என்றான் - சிறுவன்,
அண்ணலே! யானும்உனைக்
கையினால் தீண்டவொண்ணா - இடையன் ஓர்
காட்டு மனிதன்” என்றான்.

### புத்தர் அறிவுறுத்தல்

உலகம் புகழ்பெரியோன் - இந்த
உரையினைக் கேட்டு அந்நாள்
அலகில் கருணையினால் - சொன்ன
அமுத மொழி இதுவாம்:
“இடர் வரும்போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர் போல் - மாந்தர்
உறவு கொள்வர், அப்பா!

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்,
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவ துண்டோ, அப்பா?

எவர் உடம்பினிலும் - சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர்விழி நீர்க்கும் - உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா!

நெற்றியில் நீறும் - மார்பில்
நீண்ட பூணூலும்
பெற்றுஇவ் உலகுதனில் - எவரும்
பிறந்த துண்டோ அப்பா!

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டும், அப்பா!

நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்."

## சிறுவன் பால் தருதல்

"நிலத்துயர் ஞானி - இவை
நிகழ்த்தி, என் தம்பி
கலத்தினிலே, கொஞ்சம் - பாலைக்
கறந்து தா" என்றான்.

ஆயர் சிறுவனும் - கலத்தில்
அளிக்க வாங்கியுண்டு,
தாயினும் இனியன் - கொண்ட
தளர்ச்சி நீங்கினனே.

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

-

## 4. ஓ என் சமகாலத் தோழர்களே

கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும்
கிழக்கு வானம் தூரமில்லை
முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்
பூமி ஒன்றும் பாரமில்லை
பாய்ந்து பரவும் இளைய நதிகளே
பள்ளம் நிரப்ப வாருங்கள்
காய்ந்து கிடக்கும் கழனிகள் எங்கும்
கதிர்கள் சுமந்து தாருங்கள்

முன்னோர் சொன்ன முதுமொழி எல்லாம்
முதுகில் சுமந்தால் போதாது
சொன்னோர் கருத்தை வாழக்கைப் படுத்தத்
துணிந்தால் துன்பம் வாராது

காட்டும் பொறுமை அடக்கம் என்னும்
கட்டுப் பாட்டைக் கடவாதீர்
கூட்டுப் புழுதான் பட்டுப் பூச்சியாய்க்
கோலம் கொள்ளும் மறவாதீர்

அறிவை மறந்த உணர்ச்சி என்பது
திரியை மறந்த தீயாகும்
எரியும் தீயை இழந்த திரிதான்
உணர்ச்சி தொலைந்த அறிவாகும்

பழையவை எல்லாம் பழைமை அல்ல
பண்பும் அன்பும் பழையவைதாம்
இளையவர் கூட்டம் ஏந்தி நடக்க
இனமும் மொழியும் புதியவைதாம்

அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகாலன்தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்
ஏவும் திசையில் அம்பைப் போல
இருந்த இனத்தை மாற்றுங்கள்
ஏவு கணையிலும் தமிழை எழுதி
எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.

- வைரமுத்து

**5. கற்றுக் கொள்**

உலகமே ஒரு பாடசாலை!
உனக்கு கற்றுக் கொள்வதே
ஒரே வேலை!

கோடாலி கொண்டு வருபவனே
பூக்கொட்டும் மரத்திடம்
மனிதநேசம் கற்றுக் கொள்!

பனித்துளியை வெண்முத்தாய்
பரிணாமப்படுத்தும் சிப்பியிடம்
காத்திருத்தலைக் கற்றுக் கொள்!

தலைகுனிந்து ஒளிவீசும்
தெருவோர மின்கம்பத்திடம்
பணிவைக் கற்றுக் கொள்!

பருந்தை எதிர்த்தடிக்கும்
பாசமுள்ள தாய்க்கோழியிடம்
துணிவைக் கற்றுக் கொள்!

தற்கொலைப் பாறை மேல்
தவழ்ந்து போகும் எறும்பிடம்
வாழ்வதைக் கற்றுக் கொள்!
கிள்ளக் கிள்ள துளிர்க்கும்
கீரைச் செடியிடம்
வளர்ச்சியைக் கற்றுக் கொள்!

வெள்ளம் வடிந்தபிறகு

நிமிர முயலும் புல்லிடம்
தன்மானத்தைக் கற்றுக் கொள்!
இருபுறமும் பயணிக்கும்
ஒருவகை மண்புழுவிடம் கூட
இயக்கத்தைக் கற்றுக் கொள்!

தீப்பந்தத்தை தாழ்த்தினாலும்
மேல்நோக்கி எரியும் நெருப்பிடம்
சுயமரியாதையைக் கற்றுக் கொள்!

குனிந்தபிறகு எழுத உதவும்
ஒருஜான் உயர பேனாவிடம்
அடக்கத்தைக் கற்றுக் கொள்!

தன்கூட்டத்தை தான்கட்டும்
பறவைக் குழுவிடம்
தன் நிறைவைக் கற்றுக் கொள்!

கேள்விக் குறி நிமிர்ந்தால்
ஆச்சர்யக் குறியாகும் - இதில்
வெற்றியைக் கற்றுக் கொள்!
சிறகடித்து தந்திமரத்தில்
சிக்கிக்கொள்ளும் பட்டத்திடம்
கவனத்தைக் கற்றுக் கொள்!
நாலாயிரம் டன் கப்பலையும்
நிறுத்திவிடும் நங்கூரத்திடம்
ஆற்றலைக் கற்றுக் கொள்!
கால்களால் தேன்குடிக்கும்
வண்ணத்துப் பூச்சியிடம்

தேடலைக் கற்றுக் கொள்!

சுட்டால் குழலாகும்
சுகமான மூங்கிலிடம்
தியாகத்தைக் கற்றுக் கொள்!

தன்னை மிதிக்கும் ரயிலுக்கு
தடமாகும் தண்டவாளத்திடம்
தாங்கிக் கொள்வதைக்
கற்றுக் கொள்!
விரிந்து விரிந்து விழுதுகளை
விதைக்கின்ற ஆலமரத்திடம்
கூட்டுக் குடும்பத்தைக்
கற்றுக்கொள்!

துளித்துளியாய் நகர்ந்து
தூரம் கடக்கும் நத்தையிடம்
சுமைதூக்குவதைக்
கற்றுக் கொள்!
பகல்முழுக்க குருடாகி
இரவில் உழைக்கும் வவ்வாலிடம்
அனுசரிப்பைக் கற்றுக் கொள்!
எக்குத் தகடுகளையும்
துளைத்தெடுக்கும் கறையானிடம்
ஊடுருவலைக் கற்றுக்கொள்!
மோதிய வேகத்தில்
வேகமாய் திரும்பும் பந்திடம்
எதிர்ப்பு சக்தியைக் கற்றுக்கொள்!
மாசத்திற்கு மாசம்

தோல்கழற்றும் நாகத்திடம்
புதுமை புகுதலைக் கற்றுக் கொள்!

கழிவுநீர் வேர்குடித்து
இனியநீர் தரும் தென்னையிடம்
சேவையைக் கற்றுக்கொள்!

உதிர்ந்து போய்க் கிடந்தாலும்
ஓசை எழுப்பும் சருகுகளிடம்
ஓய்வின்மையைக் கற்றுக் கொள்!

கடப்பாறைக்கும் நெகிழாத
கற்பாறைக்குள் புகும் வேர்களிடம்
முழுமுயற்சியைக் கற்றுக்கொள்!

சுகமான மெல்லிசை தர
சுட்டுத் துறையிடப்டும் மூங்கிலிடம்
பொறுத்திருப்பதைக் கற்றுக்கொள்!
அவமானப்படும்
போதெல்லாம்
அதில் உண்டாகும்
காயங்களிடம்
அதிவேகத்தைக்
கற்றுக்கொள்!

பூகம்பம் நடந்த
மறுநாளும்
மொட்டவிழ்க்கும்
மலர்ச்செடியிடம்

இயக்கத்தைக்
கற்றுக்கொள்!

சாலைகளைக்
கடந்து போகும்
பார்வையற்றவரின்
ஊன்றுகோலிடம்
லட்சியத்தைக்
கற்றுக்கொள்!

உலகத்தையே
ஆண்டவனையும்
உள்வாங்கும்
சமாதியிடம்
சமாதானத்தைக்
கற்றுக்கொள்!

- பா. விஜய்

# அலகு - 2 இலக்கணம்

**சொல்:**

ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்றோ, பொருள் தருவது சொல் எனப்படும். பதம், மொழி, கிளவி என்பனவும் சொல் என்னும் பொருள் தரும் சொற்களேயாகும்.

**எ.கா:**

போ,கண், மரம்

சொல்லானது பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

## பெயர்ச்சொல்

ஒன்றன் பெயரை உணர்த்தும் சொல் பெயர்ச்சொல ஆகும். பொருள், இடம், காலம், சினை (உறுப்பு) குணம் (பண்பு), தொழில் என்னும் ஆறின் அடிப்படையில் பெயர்ச்சொற்கள் தோன்றும் அதனால் பெயர்ச்சொல் ஆறுவகைப்படும்.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்பவற்றைப் பொருளாதி ஆறு என்னும், பொருள் முதலாறு என்றும் கூறுவர். (ஆதி – முதல்)

**எ.கா:**

| | | |
|---|---|---|
| பொருட்பெயர் | : | மனிதன், பசு, மயில், புத்தகம் |
| இடப்பெயர் | : | தஞ்சை, சென்னை, திண்டிவனம், நெல்லை |
| காலப்பெயர் | : | மணி, நாள், மாதம், ஆண்டு |
| சினைப்பெயர் | : | கை, கால், தலை, கண் |
| பண்புப் பெயர் | : | நீளம், வெண்மை, இனிமை, வட்டம் |
| தொழிற் பெயர் | : | படித்தல், எழுதுதல்,<br>உண்ணல், உறங்குதல். |

**வினைச்சொல்:**

புலவர் பாடினார் - இத்தொடரில் உள்ள பாடினாள் என்னும் சொல் புலவரின் செயலைக் குறிப்பிடுகிறது. இதனை வினைச்சொல் என்பர். பாடினார் என்னும் சொல் வினையின் முடிவைக் குறிப்பிடுவதால் இது வினைமுற்று எனப்படும். இ∴து இறந்தகாலம் காட்டுகிறது.

இவ்வாறு ஒரு பொருள் செய்த தொழிலைக் குறித்து வந்த முற்றுப்பெற்ற சொல் வினைமுற்று எனப்படும். இது திணை, பால், எண், இடம் ஆகியவற்றுடன் காலத்தையும் காட்டும்.

உடன்பாடு, எதிர்மறை வினைமுற்று
சான்றோர் நல்லன செய்வர்
அறிவிலார் நல்லன செய்யார்.

இரண்டு தொடர்களிலும் ஈற்றில் வினைமுற்றுச் சொற்கள் அமைந்துள்ளன. செய்வர் என்னும் வினைமுற்று செயல் நிகழ்வதையும் செய்யார் என்னும் சொல் செயல் நிகழாமையையும் குறிப்பிடுகின்றன. செயல் நிகழ்வதைக் காட்டும் வினைமுற்று உடன்பாட்டு வினைமுற்று எனப்படும். செயல் நிகழாமையைக் குறிப்பது எதிர்மறை வினைமுற்று எனப்படும்.

பனிமலர் மாலை தொடுத்தாள் - உடன்பாடு வினைமுற்று
கனிமொழி மலர் பறித்திலள் - எதிர்மறை வினைமுற்று

**ஏவல் வினைமுற்று**

நீ ஆடுவாய்
நீர் பாடுவீர்

மேற்கண்ட தொடர்களில் உள்ள “ஆடுவாய்” என்பது மன் நின்றான். ஒருவனுக்குக் கட்டளையிடுவதாகவும் பாடுவீா் என்பது முன் நின்றார் பலருக்குக் கட்டளையிடுவதாகவும் வந்துள்ளன.

இவ்வாறு முன்னிலையிடத்தில் உள்ளாரை ஒரு செயலைச் செய்யுமாறு கட்டளையிடும் (ஏவி நிற்கும்) வினைமுற்று ஏவல் வினைமுற்று எனப்படும்.

ஏவல் வினைமுற்று முன்னிலையில் மட்டும் வரும், எதிர்காலம் காட்டும். ஒருமை, பன்மைகளில் தனித்தனியாக வரும்.

நீ நட
நீ போ - விகுதி பெறாத ஏவல் ஒருமை வினைமுற்றுகள்
நீ படி
நீ உண்ணாய்
நீ செல்லுதி - விகுதி பெற்ற ஏவல் ஒருமை வினைமுற்றுகள்
நீர் வாழும்
நீர் வாரீர் - விகுதி பெற்ற ஏவல் பன்மை வினைமுற்றுகள்
நீர் வம்மின்
நீங்கள் படியுங்கள்

**வியங்கோள் வினைமுற்று:**

நல்லார் வாழ்க - வாழ்த்துதல்

தீயார் அழிக - வைதல்
நலம் அருள்க - வேண்டுதல்
நல்லன செய்க - விதித்தல்

இவற்றுள் வாழ்க, அழிக, அருள்க, செய்க, எனும் வினைமுற்றுகள் முறையே வாழ்த்துதல், வைதல், வேண்டுதல், விதித்தல் பொருளில் வந்துள்ளன. இவை நான்கும், மரியாதை ஏவல்களே. இவ்வகை ஏவல் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று என வழங்குவர். (வியம் - ஏவல்)

உண்க - க
உண்ணிய - இய
உண்ணியர் - இயர்
வாழி - இ
வாழல் - அல்

வியங்கோள் வினைமுற்று மேற்கண்டவாறு விகுதிகள் பெற்றுவரும். இது ஐம்பால், மூவிடம்,ஈரெண் ஆகியவற்றிற்குப் பொதுவாக வரும்.

நான் - வாழ்க
அது - வாழ்க
அவர்கள் - வாழ்க
நீ - வாழ்க

**ஏவல், வியங்கோள் வேறுபாடு:**

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| கட்டளைப் பொருளில் மட்டும் வரும் | வாழ்த்துதல், வைதல், வேண்டுதல், விதித்தல், என்னும் நான்கு பொருள்களில் வரும். |
| முன்னிலையில் மட்டும் வரும் | இருதிணை, ஐம்பால், மூவிடத்தும் அமையும். |
| ஒருமை பன்மை பாகுபாடு உண்டு | ஒருமை, பன்மை பாகுபாடில்லை. |

**வல்லினம் மிகும் இடங்கள்:**

1. அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

   அந்த + தோட்டம் = அந்தத்தோட்டம்

இந்த + கிணறு = இந்தக்கிணறு

எந்த + தொழில் = எந்தத்தொழில்

அப்படி + செய்தான் = அப்படிச்செய்தான்

இப்படி + கூறினான் = இப்படிக்கூறினான்

எப்படி + பார்ப்பாய் = எப்படிப்பார்ப்பாய்?

2. இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகும்.

பொருளை+ தேடினான் = பொருளைத்தேடினான்

புத்தகத்தை + படித்தான் = புத்தகத்தைப்படித்தான்

ஊருக்கு+ சென்றான் = ஊருக்குச்சென்றான்

தோழனுக்கு+ கொடு = தோழனுக்குக்கொடு

3. ஆய், போய் என்னும் உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

படிப்பதாய் + சொன்னான் = படிப்பதாய்ச்சொன்னான்

போய் + சேர்ந்தான் = போய்ச்சேர்ந்தான்

4. சால, தவ என்னும் உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

சால+ பேசினானர் = சாலப்பேசினான்

தவ+ சிறிது = தவச்சிறிது

5. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகளின் பின் வல்லினம் மிகும்.

தண்ணீர் +பானை = தண்ணீர்ப் பானை,

மரம் +பலகை = மரப்பலகை

சட்டை +துணி = சட்டைத்துணி

விழி+புனல் = விழிப்புனல்

6. ஓரெழுத்துச் சொற்கள் சிலவற்றின் பின் வல்லினம் மிகும்.

தை+ பாவை = தைப்பாவை

தீ+ சுடர் = தீச்சுடர்

7. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.

ஓடா + புலி = ஓடாப்புலி

வளையா+ செங்கோல் = வளையாச்செங்கோல்

8. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்

பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

எட்டு + தொகை = எட்டுத்தொகை

9. முற்றியலுகரச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

திரு+ குறள் = திருக்குறள்

பொது+சொத்து = பொதுச்சொத்து

10. உயிரீற்றுச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

மழை+ காலம் = மழைக்காலம்

பனி+ துளி = பனித்துளி

**வல்லினம் மிகா இடங்கள்**

1. வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

விரி+ சுடர் = விரிசுடர்

பாய் + புலி = பாய்புலி

2. உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.

காய் + கனி = காய்கனி

தாய் + தந்தை = தாய்தந்தை

3. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகாது.

தமிழ் + கற்றார் = தமிழ்கற்றார்

கதை+ சொன்னார் = கதைசொன்னார்

4. வியங்கோள் வினைமுற்றுக்குப் பின் வல்லினம் மிகாது.

கற்க + கசடற = கற்ககசடற

வாழ்க + தமிழ் = வாழ்கதமிழ்

5. விளித்தொடரில் வலிமிகாது

கண்ணா + பாடு = கண்ணாபாடு

அண்ணா + கேள் = அண்ணாகேள்

6. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் வல்லினம் மிகாது.

அத்தனை + பழங்கள் = அத்தனைபழங்கள்

இத்தனை + பைகள் = இத்தனைபைகள்

எத்தனை + காய்கள் = எத்தனை காய்கள்

7. இரட்டைக்கிளவியிலும் அடுக்குத் தொடரிலும் வல்லினம் மிகாது.

கல+ கல = கலகல

பாம்பு + பாம்பு = பாம்பு பாம்பு

8. அவை, இவை என்னும் சுட்டுச் சொற்களின் பின் வல்லினம் மிகாது.

அவை+ சென்றன = அவைசென்றன

இவை+ செய்தன = இவைசெய்தன

9. அது, இது என்னும் சுட்டுகளின் பின் வல்லினம் மிகாது.

அது+ பறந்தது = அதுபறந்தது

இது+ கடித்தது = இதுகடித்தது

10. எது, யாது என்னும் வினாச்சொற்களின் பின் வல்லினம் மிகாது.

எது+ பறந்தது = எது பறந்தது?

யாது+ தந்தார் = யாது தந்தார்?

## அலகு– 3 இலக்கிய வரலாறு

## அற இலக்கியங்கள்

### 1. பதினென்கீழ்கணக்கில் நீதிநூல்கள்:

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் “களப்பிரர்” என்பார் பாண்டி நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்யலாயினர். அந்நியர் ஆட்சியில் தமிழ்மொழி, கலை, இலக்கியம், நாகரிகம் முதலானவற்றின் வளர்ச்சி தடைப்பட்டது. மூன்றாம் நூற்றாண்டுக்கும் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்துக்கும் இடைப்பட்ட காலத்தை இருண்டகாலம் என அழைத்தனர். எனவே தமிழ் மொழியில் இலக்கியங்கள் தோன்றுவதற்கு இடம் இல்லாமல் போய்விட்டது.

“இந்த இருண்டகாலத்திலும் தமிழ் மொழியிற் சில நூல்கள் தோன்றின. கி.பி. 370-ல் வச்சிரநந்தி என்ற சமண முனிவர் திராவிடச்சங்கம் என்ற ஒன்றை நிறுவித் தமிழ் மக்கள் பண்டைய அற ஒழுக்கங்களைப் போற்றி, அவை வழியே வாழ்க்கை நடத்தச் சிறு சிறு நீதி நூல்களை எழுதி வெளியிடலாயினர். அவ்வாறு தோன்றிய நூல்களே பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனப்படும். இவை அன்றிச் சிலப்பதிகாரம்,

மணிமேகலை போன்ற நூல்களும் இக்காலத்தே தோன்றின. இப்பதினெண்கீழ்கணக்கு நூல்கள் எந்த நூற்றாண்டில் தோன்றியிருத்தல் கூடும் என வரலாற்றாசிரியர், கல்வெட்டுத் துறை அறிஞர் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் கூறியுள்ளார். இக் காரணங்களால் இந்நூல்களைச் சங்கம் மருவிய நூல்கள் எனக் கூறலாம்.

இந்நூல்களில் சங்க காலத்து வாழ்ந்த வள்ளல்களின் வரலாற்றுகள் கூறப்பட்டுள்ளன. சங்க காலத்தே வழக்கில் இல்லாத வெண்பா யாப்பு இந்நூல்களில் மிகுதியாக உள்ளன. உரையாசிரியர்களும், இந்நூலாசிரியர்களைப் பிற்காலச் சான்றோர்கள். என்றே தம் உரைகளில் குறிப்பிடுகின்றனர்.

பன்னிருபாட்டியல் என்னும் நூல் கீழ்க்கணக்கிற்குக் கூறும் இலக்கணம் நோக்கத்தக்கது.

அடி நிமிர் பில்லாச் செய்யுள் தொகுதி
அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட உரைப்பதும் கீழ்க்கணக்காகும்.

இத்தொகுதியில் நாலடியார் முதல் கைநிநிலை ஈறாகப் பதினெட்டு நூல்கள் உள்ளன. இவற்றுள் முப்பால் எனப்படும் திருக்குறள் மட்டும் காலத்தால் முற்பட்டது என்பது நினைவிற்கொள்ள வேண்டுவதாகும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் இவை என்பதை பின்வரும் வெண்பா விளக்குகின்றது.

“நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியொ டேலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க்கணக்கு”

இவற்றுள் பதினொரு நூல்கள் அறநூல்கள் ஆறு நூல்கள் அகம் பற்றிய நூல்கள். ஒன்று புறம் பற்றிய நூலாகும். இக்கட்டுரையில் அறம் பற்றிய நூல்கள் பற்றிய செய்திகளைக் காண்போம்.

**திருக்குறள்:** இ∴து உலகில் உள்ள நீதி நூல்களில் எல்லாம் ஒப்பற்ற நூலாக விளங்குவது. இந்நூலைப் போற்றாத புலவர்களே இல்லை. மேனாட்டறிஞர் பலர் இந்நூலை தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்துள்ளனர். இத்தகைய அரிய நூலை இயற்றியவர் திருவள்ளுவர். தமிழ்நாடு செய்த தவப் பயனாய்த் தோன்றியவர்.

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளையும் 133 அதிகாரங்களையும் ஒவ்வோர் அதிகாரத்துக்கும் பத்துப் பத்துப் பாடல்கள் வீதம் 1330 பாடல்களையும் கொண்டது. அறத்துப்பாலில் இல்லறம், துறவறம் இவற்றின் இயல்புகளும், பொருட்பாலில் அரசன், அமைச்சன், ஒற்றன், குடிமக்கள் ஆகியோர் இயல்புகளும், காமத்துப்பாலில் களவு, கற்பு, ஒழுக்கங்களின் இயல்புகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

மனத்துக்கண் சிறிதும் குற்றம் இல்லாதிருத்தலே அறம் என அறத்தின் இயல்பு கூறப்பட்டுள்ளது. அறனற்ற செயல்களை எக்காரணம் கொண்டும் செய்தல் கூடாது. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல் வேண்டும் என்பன அவர் கூறும் கருத்துக்களிற்சில.

காமத்துப்பாலில் கூறப்படும் கருத்துக்கள் சொல்லோவியங்கள். முதன்முதலாகப் பரத்தமைத் தொழிலைக் கண்டித்தவர் திருவள்ளுவரே! பரத்தையரை இருமனப்பெண்டிர் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கேற்ற பல நெறிமுறைகளை எடுத்துக் கூறும் வாழ்க்கை விளக்கமாய் அமைந்துள்ளது.

**நாலடியார்:** இந்நூல் திருக்குறளோடு ஒத்த சிறப்புடையது. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி. நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி. பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில் என வழங்கும் பழமொழிகள் இந்நூலின் சிறப்பை இனிது விளக்குவனவாம். நான்கு அடிகளால் அமைந்த வெண்பாக்கள் நானூறு கொண்டுள்ள நூலாதலின் இதற்கு நாலடி நானூறு என்ற பெயரும் உண்டு. எல்லா நீதிநூல்களிலும் திருக்குறள் ஒழிந்த பிற நூல்களில் உள்ள பாடல்கள் நான்கு அடிகளால் அமைந்த வெண்பாக்களே! ஆயினும் நாலடியார் என்பது இந்நூலையே குறிப்பதும் இந்நூலின் பெருமையை உணர்த்தப் போதிய சான்றாகும். இந்நூல் சமண முனிவர்களால் இயற்றப்பெற்றது. இந்நூலும் திருக்குறள் போன்றே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

இந்நூலுள் கூறப்படும் சில கருத்துக்களைக் காண்போம். கல்வியின் சிறப்பைக் குறித்து, கல்வி கரை இல, கற்பவர் நாள் சில, மெல்ல நினைக்கின் பிணிபல, எனவே, நீரை நீக்கியபின் பாலை மட்டும் உண்ணும் அன்னம் போல ஆராய்ந்து அமைவுடையனவற்றையே கற்றல் வேண்டும் எனக் கூறுவது சிறந்த ஒன்றாகும். நட்பின் சிறப்புப் பற்றிக் கூறுகையில்,

யானைை அனையாரது நட்பை நீக்கி, நாய் அனையார் நட்பைக் கொளல் வேண்டும் என்று கூறி அதற்குரிய காரணத்தையும் கூறுகின்றார். யானை நன்கு அறிந்திருந்தும் தன்னை உணவு கொடுத்து வளர்த்த பாகனையே கொல்லும். ஆனால் நாயோ தன்னை வளர்த்தவன் தன் மீது வேலினை எறிந்து, அவ்வேல் தன் உடம்பிலே இருந்து வருந்தினாலும் வாலைக் குழைத்துக் கொண்டு அன்பை வெளிப்படுத்தும் என்கின்றார். இரவலனைப் பற்றி கூறும் கருத்து நகைச்சுவை நிறைந்ததாகும். நீர் நுழைய முடியாது இடத்தில் நெய் நுழையும். நெய் நுழைய முடியாத இடத்தே புகை நுழையும். அப்புகையும் நுழைய முடியாத இடத்தே இரவலன்தான் நுழைய முடியும் என்பதே அப்பாடற் கருத்து.

பெரியார் சிறியார் கேண்மை பற்றிக் கூறும் பாடல், திருக்குறட்பாடலோடு ஒத்திருத்தலைக் காணலாம். இது போன்று பல பாடல்கள் உள்ளன.

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்
வானூர் மதியம் போல் வைகலும் தேயுமே
தானே சிறியர் தொடர்பு!
இது நாலடியார்ப் பாடல்.

“நிறை நீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு” இது திருக்குறள்.

**நான்மணிக்கடிகை:**

இந்நூல் 101 வெண்பாக்களை உடையது. ஒவ்வொரு பாடலிலும் நான்கு நான்கு கருத்துக்கள் உள்ளமையால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்நூலை இயற்றியவர் விளம்பிநாகனார் என்பவர். ஒரு பாடலில் எக்குடியிலும் உயர்ந்தவர்கள் பிறக்கலாம் என்ற கருத்தை அழகுறக் கூறியுள்ளார். அப்பாடல்,

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்: மான்வயிற்றில்

ஒள்ளரி தாரம் பிறக்கும், பெருங்கடலுள்

பல்விலைய முத்தம் பிறக்கும், அறிவார்யார்

நல்லார் பிறக்கும் குடி

என்பது

செல்வம் சுருங்கிய காலத்தில் தான் உண்மைச் சுற்றத்தினரை உணர்ந்து கொள்ள முடியும். என்பதை, சாணையில் இட்டுத் தேய்த்தால்தான் மணிகளின் ஒளியை உணரமுடியும். புடம் இட்டால் தான் பொன்னின் ஒளி வெளிப்படும். சேணத்தில் இருந்து செலுத்தினால் தான் குதிரையின் திறம் வெளிப்படும். அது போலச் செல்வம் சுருங்கி வறுமையுற்ற காலத்தேதான் உண்மைச் சுற்றத்தாரின் இயல்பு புலப்படும் என்கிறார். இதில் வந்துள்ள மூன்று உவமைகளும் மூன்று மணிகளாகும். வேறொரு பாடலில் வெகுளி கொள்வதன் தீமையை – வெகுளியை அறவே கைவிடுவதால் ஏற்படும் நன்மையை அழகுற எடுத்துக் காட்டுகிறார். அப்பாடல்

இன்னாமை வேண்டின் இரவொழுக, இந்நிலத்து

மன்னுதல் வேண்டின் இசைநடுக தன்னொடு

செல்வது வேண்டின் அறம்செய்க வெல்வது

வேண்டின் வெகுளி விடல்.

என்பது.

**இன்னா நாற்பது :**

இந்நூல் கடவுள் வாழ்த்து உள்பட நாற்பத்தொரு வெண்பாக்களை உடையது. இந்நூலாசிரியர் கபிலர் என்பவர். இவர் சங்க காலக் கபிலரினின்றும் வேறுபட்டவர். இந்நூலில் இன்னாதன இவை என 164 பொருள்களைக் கூறுகின்றார். சான்றாக ஒரு பாடல் காண்போம்.

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா

நெடுநீர் புணை இன்றி நீந்துதல் இன்னா

கடுமொழி யாளர் தொடர்பின்னா! இன்னா

தடுமாறி வாழ்தல் உயிர்க்கு

மேலும் பந்தம் இலாத மனையின் வனப்பு இன்னா! தந்தை இலாத புதல்வன் அழகின்னா, அறிவறியா மக்கட்பெறல் இன்னா என்பன போன்ற பல நீதிகள் கூறப்பட்டுள்ளன.

**இனியவை நாற்பது :**

இந்நூலிலும் இன்னா நாற்பது போன்றே நாற்பத்தொரு பாடல்கள் உள்ளன. இந்நூலாசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் என்பவர். இன்னா என அந்நூலுட் கூறப்பட்டவனற்றிற்கு மாறுபாட்டு இனியன இவையென இந்நூலுட் கூறப்பட்டுள்ளன. ஒரு பாடலைக் காண்போம்.

கற்றார் முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே

மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே

எத்துணைய ஆயினும் இரவாது தான்ஈதல்

எத்துணையும் ஆற்ற இனிது

மேலும் மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிதே: அறம் புரிந்து அல்லவை நீக்கல் இனிதே: பிச்சைபுக் காயினும் கற்றல் மிக இனிதே" எனக் கூறப்படுவன என்றும் மனத்தை விட்டு நீங்காதன.

**திரிகடுகம் :**

சுக்கு, மிளகு, திப்பிலி எனப்படும் மூன்று பொருள்களும் சேர்த்துச் செய்யப் பெற்ற மருந்து திரிகடுகம் எனப்படும். இது மக்கள் உடல் நோய் போக்குவது போல இந்நூல் பாடல்கள் ஒவ்வொன்றிலும் கூறப்படும் முன்மூன்று கருத்துக்களும் மக்கள் உள்நோயைப் போக்குவன. எனவே இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்நூலில் 101 பாடல்கள் உள்ளன. ஆசிரியர் ஒரு பாடலில் "திரிகடுகம்" என்ற சொல்லையே எடுத்தாண்டுள்ளார்.

"அருந்ததிக் கற்பினார் தோளும் திருந்திய

தொல்குடியின் மாண்டோர் தொடர்ச்சியும் - சொல்லின்

அரில் அகற்றும் கேள்வியார் நட்பும் இம்மூன்றும்

திரிகடுகம் போலும் மருந்து"

அடுத்து ஒரு பாடலில் "நாட்டில் மழை, பெய்யாமைக்குரிய காரணங்களாக, குடிமக்களைப் பலவகைக் கொடுமைகளுக்கு உள்ளாக்கிப் பொருள் பெறும்

மன்னனும், பொய் பேசும் மக்களும், கணவன் சொல்லை மதியாது தான் விரும்பிய இடம் செல்லும் பெண்ணும் ஆகிய மூவரும் இருத்தலே” எனக்கூறல் அறியத்தக்கது.

**பழமொழி:**

ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒவ்வொரு பழமொழி கொண்ட நானூறு பாடல்களைக் கொண்டது இந்நூல். மூன்றுரைஅரையனார், என்பவர் இந்நூலாசிரியர். இப்பெயரைக் கொண்டு நோக்கின் இவர் அரசமரபினர் எனத் தெரியவருகிறது. இந்நூலும் திருக்குறள், நாலடியாரைப் போன்ற சிறப்புடையது. இந்நூலின் கண் அரிய வரலாற்றுச் செய்திகள் காணப்படுகின்றன.

குலத்தொழில் கல்லாமலே ஒருபகுதி அமையும் என்பது பழமொழி. இதனை விளக்கப் பழமொழி ஆசிரியர் கரிகாற் பெருவளத்தானது வரலாற்றை எடுத்துக் காட்டுகிறார். இளைஞனாகிய கரிகாற் பெருவளத்தான் தன்னிடம் முறை கேட்க வந்த முதியவர்கள் இருவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அவர்கள் அறியாத நிலையில் நரைமுடித்து முறை செய்தான். அதனைக் கருத்திற் கொண்டு,

உரைமுடிவு காணான இளமையோன் என்ற

நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்துச்

சொல்வான் முறை செய்தான் சோழன் குலவிச்சை

கல்லாமற் பாகம் படும்

எனப்பாடினார். இந்நூலில் உலகின் வழங்கும், “பாம்பறியும் பாம்பின் கால்” “நிறைகுடம் நீர் தளும்பாது” “தவளை தன் வாயாற் கெடும்” என்ற பழமொழிகளோடு அரிய பழமொழிகள் பலவும் காணப்படுகின்றன.

**ஆசாரக் கோவை:**

இந்நூல் பல்வேறு வகைப்பட்ட வெண்பா யாப்புக்களை உடைய 101 பாடல்களைக் கொண்டு விளங்குவதாம். இந்நூல் மக்கள் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்க முறைகளைத் (ஆசாரங்களை) தொகுத்துக் கூறுகின்றது. இந்நூலின் ஆசிரியர் பெருவாயில் முள்ளியார் என்பவர், இந்நூல் முதற்பாடலில் ஆசார நெறிகள் இவை என்பது கூறப்பட்டுள்ளது.

“நன்றி அறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு

இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு

ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை

நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்

சொல்லிய ஆசார வித்து”

என்பதே அப்பாடல். ஒரு பாடலில் தம் வாழ்க்கையில் ஒழுக்கம் தவறாதவர்கள்; பிறப்பு, நீண்டநாள் வாழ்க்கை, செல்வம், வனப்பு, நில உரிமை, உயர்புகழ், கல்வி, நோயின்மை ஆகிய நலன்கள் பலவற்றையும் பெறுபவர் எனக் கூறப்பட்டுள்ளது.

**சிறுபஞ்சமூலம்:**

கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தன் வேர்களைக் கொண்டு செய்யப்படும் மருந்து உடல் நோயைப் போக்குவது போல இந்நூலின் கண் உள்ள ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள ஐந்து ஐந்து கருத்துக்கள் உள்ளநோயினைப் போக்கி உரம் ஊட்ட வல்லன. இந்நூல் கடவுள் வாழ்த்து நீங்கலாக 96 பாடல்கள் உள்ளன. இந்நூலாசிரியர் காரியாசான் என்பவர். ஒரு பாடலில் நகைத்தற்கு உரியன இவை என்பன கூறப்பட்டுள்ளது. அப்பாடல்

“நாண் இலான் சால்பும் நடைஇலான் நன்னோன்பும்

ஊண் இலான் செய்யும் உதாரமும் - ஏண்இலான்

சேவகமும் செந்தமிழ் தேற்றான் கவிசெயலும்

நாவகமே நாடின் நகை” என்பது

**முதுமொழிக் காஞ்சி:**

இந்நூல் காஞ்சித்திணையைச் சேர்ந்ததாகும். புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூல் காஞ்சித்துறைக்கு இலக்கணமாக.

“பலர்புகழ் புலவர் பன்னின தெரியும்

உலகியற் பொருள்முடிவு உணரக் கூறின்று”

எனக் கூறுகின்றது. இந்நூல் பத்து அதிகாரங்களையும், ஒவ்வோர் அதிகாரத்துக்குப் பத்து பாடலாக நூறு பாடல்களையும் உடையது.

இந்நூலாசிரியர் மதுரை கூடலூர்க்கிழார் என்பவர். நூலில் பல நல்ல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. கல்வியினும் ஒழுக்கமே சிறப்புடையது என்பதை.

ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை

என்ற தாழிசை நன்கு விளங்குகின்றது.

**ஏலாதி:**

ஏலம் இலவங்கம், நாககேசரம், சுக்கு, மிளகு, திப்பிலி எனும் ஆறு பொருளும் குறித்த அளவில் சேர்ந்துச் செய்யப்பெற்ற மருந்திற்கு ஏலாதி என்று பெயர். இந்நூலின் கண் உள்ள ஒவ்வொரு பாடலிலும் ஆறு கருத்துக்கள் உள்ளன. இந்நூலாசியர் கணிமேதாவியார்.

எவ்வெவர்க்கு உதவ வேண்டும் என்றும், அவ்வாறு உதவுகின்றவர் அடையும் பேறு என்ன என்றும் ஒரு பாடல் கூறுகின்றது. அப்பாடல்,

புலையாளர் புண்பட்டார் கண்கெட்டார் போக்கில் நிலையாளர் நீர்மை இழந்தார் - கலையாளர்க்கு
ஊண்கொடுத்து ஊற்றாய் உதவினார் மன்னராய்க்
காண்கொடுத்து வாழ்வார் கலந்து”

என்பது

ஈண்டுக கூறப்பெற்ற பதினொரு நூல்களும் பதினெண்கீழ்க்கணக்கின் கண் உள்ள நீதி நூல்களாகும். இவற்றுள் கூறப்பட்ட நீதிகள் எல்லார்க்கும் எக்காலத்துக்கும் ஏற்றவையாம். இந்நூல்கள் எல்லாம் சங்க இலக்கியங்களிற் காணப்படும் அறங்களை – நீதிகளை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டனவே ஆகும்.

# புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்

**முன்னுரை**

சங்க காலத்தில் கவிஞர்கள் அகவற்பா, கலிப்பா, பரிபாடல் ஆகிய யாப்பு வகைகளில் ஒன்றில் தம் கவிதைகளைப் புனைந்தனர். திருவள்ளுவர் காலத்தில், வெண்பா யாப்பு சிறந்து விளங்கிற்று. பின்னர்த் திருத்தக்க தேவர், கம்பர், சேக்கிழார் காலங்களில் விருத்தப்பா செல்வாக்குப் பெற்றது.

இன்றும் மரபு வழிக் கவி புனையும் கவிஞர்கள் மேற்கூறிய அகவல், விருத்தம், வெண்பா, போன்ற செய்யுள் வகைகளில் ஒன்றைப் பின்பற்றியே

தம் பாக்களைப் பாடி வருகின்றனர். எனினும், தற்காலக் கவிஞர்களில் பலர் மரபு வழிக் கவிதையோடு எந்த யாப்பிற்கும் இயையாத, முற்றிலும், வடிவிலும் பொருளிலும் கூடப் புதிய பிறவியாகக் காட்சியளிக்கும் புதுக் கவிதைகளைப் பெருவழக்காக இதழ்களிலும், புத்தகங்களிலும் படைத்து வருகின்றனர்.

அத்தகைய புதிய கவிதைகளின் இயல்பையும், தோற்றத்தையும், அவற்றின் வளர்ச்சியில் பெருகிய பல வகைகளையும் காண்போம்.

**தோற்றம்:**

பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாகப் பிரான்சு நாட்டில் புரட்சிகரமான போக்கைக் கொண்ட ஒரு புதிய சமுதாயம் தோன்றிது. அச் சமூகத்தில் தோன்றிய சிக்கலான பல சிந்தனைகளைப் பாக்களாகப் பாடுவதற்கு முயன்ற பாதலேர், ரிம்போ, மல்லார்மே (Oeudelair, Ridmoaud, Mallar mee) போன்ற புரட்சிக் கவிகள் பழைய மரபுகளை அடியோடு விட்டு, யாப்பு விடுதலை பெற்ற புதிய கவிதைகளைப் பாட முற்பட்டனர். அப்பாடல்களின் பெயர்தான் Verse Libre. அவற்றை ஆங்கிலத்தில் Free Verse என்றனர்.

அப்புதிய கவிப்போக்கைப் பின்பற்றிச் சென்ற நூற்றாண்டில் அமெரிக்காவில் வாழ்ந்த ஆங்கிலக் கவிஞர் வால்ட் விட்மன் வசனத்தையே வெட்டிக்கட்டி வனப்பு மிக்க கவிதையாக்கினார்.

நம் நாட்டில் வாழ்ந்த வங்கக் கவிஞர் தாகூர், யாப்பு இலக்கணத்தோடு கவிபாடும் திறம் உடையவராயினும், தம் புகழ் பெற்ற கவிதைப் படைப்பாகிய கீதாஞ்சலியை இலக்கணம் மீறிய புதுமைக் கவிதையாகவே படைத்தார்.

கவிதையிலும் வசனத்திலும் பல ஆய்வுகளைச் செய்து பார்த்தவர் நம் பாரதியார். அவர் வங்கக் கவியின் கீதாஞ்சலியையும் வால்ட் விட்மனின் Leavesof grass என்ற நூலையும் படித்துக் களித்து, அதே போக்கில் “காட்சிகள்” என்ற இலக்கணம் மீறியி புதிய கவிதைப் படைப்பை உருவாக்கித் தமிழ் இலக்கிய வரலாற்றிலே முதன் முதலாகப் புதிய கவிதையின் தோற்றத்திற்கு வழி கோலினார். தமிழில் அமைந்த புதுக் கவிதைக்கு ஆரம்ப காலத் தந்தை நம் புதுமைக் கவிஞர் பாரதியாரே. அவர் பாடிய புதிய கவிதைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

வெம்மைத் தெய்வமே! ஞாயிறே! ஒளிக்குன்றே!

அமுதமாகிய உயிரின் உலகமாகிய உடலிலே

மீன்களாகத் தோன்றும் விழிகளின் நாயகமே!

பூமியாகிய பெண்ணின் தந்தையாகிய காதலே!

வலிமையின் ஊற்றே! ஒளிமழையே! உயிர்க்கடலே!(ஞாயிறு-புகழ்)

**வளர்ச்சி**

பாரதிக்குப் பிறகு புதுக் கவிதை படைப்பதில் ஆர்வம் காட்டியவர் ந.பிச்சமூர்த்தி அதே காலகட்டத்தில் இக் கவிதை முயற்சியில் ஈடுபட்ட எழுத்தாளர்கள் கு.ப. ராஜகோபாலன், புதுமைபித்தன் ஆகியோர் ஆவர். ‘மயன்’ என்ற பெயரிலே க.ந. சுப்ரமணியமும், நாணல் என்ற பெயரிலே, பேராசிரியர் சீனிவாசராகவனும் கவிதைகள் புனைந்தனர். புதுக் கவிதையைப் போற்றி வளர்த்த புகழ்பெற்ற பிற எழுத்தாளர்கள்; சி.சு.செல்லப்பா, எஸ். வைத்தீஸ்வரன், வல்லிக்கண்ணன், சிவசங்கரன், ஞானக் கூத்தன் போன்றோர் ஆவர்.

இலக்கணத் தூய்மையோடு கவிதை இயற்றவல்ல நா.காமராசன் சிற்பி, செந்தமிழ் மாறன், தமிழன்பன், அப்துல் ரகுமான், புவியரசு போன்றோரும் இப்புதுக் கவிதைகளை மிகுதியாகவே புனைந்துள்ளனர். இக்கவிதைத் துறையில் பெயர் பெற்ற பிற எழுத்தாளர்கள் மேத்தா, இன்குலாப், அபி போன்றோர் ஆவர். கலாமோகினி, கிராம ஊழியன், கணையாழி, கசடறதபற, எழுத்து, இலக்கியவட்டம், வானம்பாடி, ஞானரதம், தாமரை, தீபம் ஆகியவை இப்பாவாணர்களை ஆதரித்து எழுத வைத்த சில இதழ்கள் ஆகும். இன்றும் கல்கி, அலிபாபா, கலைமகள், விகடன், குமுதம்,ராணி, தேவி, போன்ற இதழ்களும் இக் கவிஞர்களின் படைப்பைப் பெரும் அளவில் வெளியிடுகின்றன.

**தோன்றக் காரணம்**

வயிற்றுப் பிழைப்பும் வாழ்க்கைப் போராட்டமுமே இன்றைய புதுமைக் காலமனிதனை அலைக்கழிக்கும் அன்றாட சிந்தனையாக இருப்பதால், இந்த இயந்திரயுகத்தில் மக்கள் மத்தியிலே ஒரே பரபரப்பு! பதற்றம்! வேகம்! விறுவிறுப்பு! கலையுள்ளம் இருந்தாலும், காவியங்களையோ, கவிதைகளையோ ஓரிடத்தில் ஓய்வாக உட்கார்ந்து படித்துச்சுவைக்க நேரமுமில்லை. அதற்குரிய கல்வித் திறமும் இல்லை. அதனால் இன்றையகால கட்டத்தில் கவிதை நடையை விட உரைநடையின் ஆதிக்கமே உச்சநிலையில் உள்ளது. இத்தகைய காலச் சூழலுக்கு ஏற்ப, கற்பனை வளம் படைத்த தற்காலக் கவிஞர்களும், பார்வைக்கு உரைநடை

போன்ற அதே நேரத்தில் உண்மையில் கவிப்பணப்பு வாய்ந்த புதுக் கவிதைகளைப் புனைவதில் முற்பட்டனர்.

புதுக்கவிதை புனையும் திறம்படைத்த கவிதைவின் இவ்வியல்பை கவிஞர் ஒருவர் வசன கவிதையாகவே வடித்துவிடுகிறார்.

எதுகையும் மோனையும்
வேண்டவே வேண்டாம்
சீரும் கீரும்
சுத்தச் சனியன்கள்
வெண்பாவும் கிண்பாவும்
விருத்தமும் திருத்தமும்
வேண்டாத தொல்லைகள்
என்கிறார்.

**புதுக்கவிதை மதிப்பீடு**

புதுக் கவிதை புனைவோர் இயற்கையின் எழிலைப் பாடுவதைவிட, வாழ்க்கை நிகழ்ச்சிகள் நம் இதயத்தில் ஏற்படுத்தும் உணர்வு 'நெகிழ்ச்சிகளையே, தம் கவிதைகளில் வடிக்க முயல்கிறார்கள். மனித இயற்கையின் மர்மங்கள், மாயங்கள், மானிடனின் மனத்தடுமாற்றங்கள், சலனங்கள், பாணக்கார வர்க்கத்தின் பகட்டு, ஆணவங்கள், பாட்டாளி வர்க்கத்தின் பாடுகள் பட்டினிக் கோலங்கள் ஆகியவற்றைக் கருத்துப் பொருளாகக் கொண்டு இக்கவிஞர்கள் தம் படைப்புகளை உருவாக்குகின்றனர்.

கம்பனின் கவிமொழியில் இவையும் "செவி நுகர் கனிகளே" என்றாலும், சிலர் வார்த்தைச் சேர்க்கைகளையே வனப்பு மிக்க கவிதைகளாகக் கருதுகின்றனர். ஆரவாரச் சொற்களை, அடுக்கடுக்காகக் கொட்டினால், கவிதைகள் உருவாகிவிடுவதாகக் கற்பனை செய்கின்றனர்.

தம் இச்சைகளையெல்லாம் பச்சையாகப் படைத்துக் கவிதைகளைக் குறைப் பிரவசமாக ஆக்கிவிடுகின்றனர். படிமங்களைப் (images) படைப்பதிலேயே கருத்தாக இருந்து புலனுக்கோ, புத்திக்கோ, புரியாக வண்ணம் சிலர் புதுக் கவிதைகளைப் புதிர்க் கவிதைகளாகப் புதிய ஓவியம் (modern art) போல வரைந்து விடுகின்றனர். இதனால் இலக்கிய உள்ளம் கொண்ட பலருக்குப் புதுக் கவிதை என்றாலே, எரிச்சல் ஏற்பட்டு விடுகின்றது. இக் கவிதைகளைக் 'கோவேறு கழுதைகள்' என்று கிண்டல்

செய்கின்றனர். மேனாட்டுக் கற்பனைகளும், பிற மொழி கலப்பும், இப் புதுக் கவிதைகளில் மிகுதியாக இருப்பதைக் குறை கூறுகின்றனர்.

**புதுக் கவிதைக்குச் சில சான்றுகள்**

சித்திர கவியாக அமைந்துள்ள ஒரு புதுக் கவிதை

கி
யூ
வி
லே
ஒரே கூட்டம்

கலைஞர் மு. கருணாநிதியின் கவிதைகளிலே உணர்ச்சி மிக்க சொல் ஓட்டமும், சொல் விளையாட்டும் இருக்கும் சொல் ஓட்டமான ஒரு புதுக் கவிதை.

எத்தனை ஆறு
இத்தரை மீது
பத்தரை மாற்று
முத்திரைப் பொன்னாயச்
சித்தி நெல்லைச்
சிரிக்கச் செய்தது பச்சைப்பட்டு
விரிக்கச் செய்தது வறுமைப்பேயை
எரிக்கச் செய்தது.

சொல் விளையாட்டிற்குச் சில எடுத்துக்காட்டுகள் சேலத்தில் நடந்த கவியரங்கத்தில் பாடுகின்றார்

ஓட்டுமா பழம் உறவு எனக் கேட்பீர்!
ஓட்டுமாம் பழஉறவு
ஓட்டு மாம்பழ உறவு, சேலத்தில் இயற்கை!.

எனக் கிருக்கும் எத்தனையோ வேலைக்கிடை - இதுதான் கவிதை

எனக் கிறுக்கும் எனை அழைத்து என்பால்
தனக் கிருக்கும் பேரன்பை வெளிப்படுத்தப் பெருந்
தவக் கிறுக்கர் அடிகளார் அழைத்திட்டார்

என்று குன்றக்குடி அடிகளாரை நோக்கிக் கூறுகின்றார்.

தமிழ்த்துறவி என்கின்றார் நும்மை
நான் ஏற்பதில்லை – எதைத் துறந்திடினும்

தமிழ்மட்டும் துறந்திடேன் எனச்சொல்லும் நீவிர்
தமிழ்த் துறவி அல்லவே அல்ல.

அறிஞர் அண்ணா இறந்த நிலையில், மிக உருக்கமாக பாடுகின்றார்.

காலையிலே மாலையிலே
கடும்பணி ஆற்றுகையில்
எப்பொழுதும் எந்நேரமும்
எப்பொருளிலும் அண்ணனே! நீ இருக்கின்றாய்
அம்மட்டோ!
எங்கள் பணி முடிந்து
என்றோ ஒரு நாள்
உன் மடியில் தூங்க வரும்போது
அண்ணனே! நீ
அங்கேயும் இருக்கின்றாய் - என்கின்றார்.

**புதுக் கவிதைகளிலே பளிச்சிடும் சில சொல் மின்னல்கள்:-**

| | | |
|---|---|---|
| ரிக்ஷா | - | போக்குவரத்தின் சவலைப் பிள்ளை |
| குழந்தைகள் | - | இல்லறப் பள்ளியறை வெளியிடும் ஆண்டு மலர்கள் |
| அனாதைகள் | - | ஊமையன் பாடியபாடல்கள் உயிர் நிழல் இல்லாக் கோடைகள் |
| கடல் | - | முத்துக்களின் பள்ளம்<br>கப்பலின் சமவெளி<br>நதிகளின் கல்லறை |
| மலர்கள் | - | வசந்த புத்ரிகள்!<br>எங்களுடைய பூமித்தாய் ஏந்தும்வர்ண ஜால தீபங்கள் எங்களைப் பாடவைக்கும் மௌனங்கள். |
| தியாகிகள் | - | வேலியைப் பாதுகாக்க மடிகின்ற பயிர்கள் |
| புத்தகம் | - | கருத்துகள் உறங்கும் காகிதப் படுக்கை<br>( நா. காமராசன் கவிதைகள்) |
| நிழல்கள் | - | மண்ணின் மச்சங்கள்<br>மரத்தின் எச்சங்கள்<br>வெய்யில் தாங்காமல் |

விரைந்து வரும் காலுக்குச்
சிறிது நேரச் செருப்புகள்!
சூரிய நெருப்பு
சுடுகின்ற நெருப்பு
ஒத்தடம் கொடுக்கும்
நிழல் ஒற்றர்கள்

(மு. மேத்தா)

புதுக்கவிதை வடிவில் அமைந்த ஒரு சொல்சித்திரம் உரிமைப் போராட்டத்தை அப்துல் ரகுமான் ஓர் ஓவியமாகவே வரைந்து காட்டுகின்றார்.

உடல் தூரிகைகள்
கண்ணீர், வியர்வை, ரத்த
வண்ணங்கள் தோய்ந்து
தியாகத் திரைச் சீலையில்
தீட்டிய சித்திரம்
இந்தச் சுதந்திரம் - என்கிறார்.

இது போன்று புதுக் கவிதையில் எண்ணற்ற சொல் சித்திரங்கள் உண்டு. நிலுவைப் பற்றி ஒரு நையாண்டிச் சித்திரம்.

விட்டெறிந்த இட்டலியா?
கட்டி வைத்த பழஞ்சோறா?
கொட்டி விட்ட கப்தயிரோ!
சுட்டு வைத்த அப்பந்தானோ!
என்ன இழவெ யானாலும்
எட்ட இருந்து சிமிட்டுவது கண்
கிட்ட வந்து எட்ட வில்லை
பாடுபட்ட பாட்டாளி
கொட்டாவி விடுகின்றேன்
ஆவ்…..
உறக்கம் வருது பசியை மறக்க.

ஒரு சிரிப்புச் சித்திரம்

தலையைச் சொறி
நாக்கைக் கடி
பல்லை இளி
முதுகை வளை

கையைக் கட்டு
காலைச் சேர்
        என்ன இது?
வயிற்றைக் கேள்!
சொல்லும் அது

சரிந்து கிடக்கும் இன்றைய சமுதாயத்தை இப் புத்திளம் கவிஞர்கள் நொந்து பார்க்கும் நோக்கு நம் நெஞ்ச இமைகளை நனைக்கிறது.

ஏழைகளே என் தெய்வம்! சேரிகளே என் சேவை!
அவர்களுக்குச் சுகம் கொடுக்கும் தலைவனுக்கு
நான் தொண்டன்! - என்கிறார்

அவர்கள் வாழும் வீட்டை வேதனையோடு வருணிக்கிறார்.

வெயிலடித்தால், மண்மேடு
மழை விழுந்தால், புதைசேறு
புயல் அடித்தால், காற்றாடி ஆகும்
கூரை வீடு!

மழை விழுந்தால் குளமாகும்
வெயிலடித்தால் குடை பிடிக்கும்
அழகான பழங் கூரை - என்கிறார்
கங்கை நதி பாய்ந்தாலும்
சமூகத்தில் மேடு பள்ளங்கள்
தகர்க்கப் படாதவரை எனது
தாய்நாடு ஒரு சகாராதான்!
இங்கே எத்தனை மனித ஜீவன்கள்
அவையெல்லாம் சகாராவைத்
தாண்டாத ஒட்டகங்கள் தாமே!

'நாங்கள் …. நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம் ஆடை வாங்குவதற்காக' - என்று நா. காமராசன் விலைமகளிர் வாழ்வை மிக உருக்கமாக உரைக்கிறார்.

அவரைப் போலவே, கவிஞர் மு. மேத்தா, மிகச் சோகமாகக் கண்ணீர்ப் பூக்கள் என்ற தம் நூலிலே நாட்டின் நலிந்த நிலையைத் 'தேசப் பிதாவுக்கு ஒரு தெருப் பாடல்களின் அஞ்சலி,' என்ற தலைப்பில் பாடுகின்றார்.

தேசப் படத்திலுள்ள கோடுகள்
விடுதலைக்குப் போராடிய
வீரத் தியாகிகளின்
விலா எலும்புக் கூடுகள்.
தேசம் போகிற போக்கைப் பாத்தால்
பிறந்த நாள் உடையே
எங்கள் தேசிய உடை
யாகிவிடும் போல் இருக்கிறது.

சேரிகளில் மட்டுமே நீ!
யாத்திரை செய்வாய்
என்பதைத் தெரிந்துகொண்டதால்
உன்னை நேசித்தவர்கள்
தேசத்தையே
சேரியாக மாற்றிவிட்டார்கள்.
எங்கள் வயிற்றைப் புறக்கணித்துவிட்டுக்
காம்புகளை நேசிக்கிறார்கள்.
எங்களுக்குத் தீவனம் கிடைக்காவிட்டாலும்
மேய்ப்பர்களுக்கு மட்டும்
எப்படியோ இனாம் கிடைத்துவிடுகிறது.
அணைக்கட்டுகளில்
திறக்கப்படும் தண்ணீர்
பள்ளங்களை மாற்றிவிட்டு
மேட்டை நோக்கியே
பாய்கிறது.

என்று மேத்தா உருக்கமாகப் பாடுகிறார்.

"சமுதாயப் பிரக்ஞையும் விஞ்ஞானப் பார்வையும் கொண்ட ஈரோடு தமிழன்பன்" போர்க்குண் வெறியோடு, பல எரிமலைக் கவிதைகளை இயற்றியுள்ளார். அவற்றில் சில தீப்பொறிகள்!

தெருக் குப்பைத் தொட்டிகள்
மாவடு உண்ணாமலே, மழலைகள் பெறுகின்றன.
பால்காரர்களோ, மாநகராட்சிக் குழாய்களின்
மடிக் காம்பைக் கறந்து தருகின்றார்கள். - என்கிறார்.

கவிஞர் இன்குலாப் பாடல்கள் அனைத்தும் புரட்சி வெடிகளே! மீரா, சிற்பி போன்றோர் நம் நெஞ்சில் நிற்கும் சிறந்த கவிஞர்கள் ஆவர்.

கவிஞர் கண்ணதாசனுக்குப் பின்னர், தமிழ்த்திரை உலகைத் தன் ஆளுகைக்குக் கொணர்ந்தவர் கவியரசு வைரமுத்து. மரபுக் கவிதைகளோடு மனம் கவர் திரை இசைப் பாடல்களையும் புனைவதில் வெற்றி கண்டவர் பண்பார்ந்த இக்கவிஞர். இவரை "சந்தனம் பூசிய கந்தக வரிகளுக்குச் சொந்தக்காரர்" எனச் சிலர் தீர்ப்பிடுகின்றனர். உள்ளத்தை அள்ளுகின்ற உரை வீச்சிற்கும் இவர் உரிமையாளர் ஆவர்.

இவரைப் போலவே திறம் மிக்க திரைப்படப் பாடல்களோடு செவியையும், சிந்தையையும் குளிர வைக்கும் முறையில், இராமாயணம், மகாபாரதம் ஆகிய காவிய நூல்களை வனப்பு மிக்க வசனப் படைப்புகளாக வடித்துத் தந்தவர் "வாலி" என்ற பெயருடைய பெருங்கவிஞர்.

இயல் தமிழுக்கு எழில் சேர்க்கும் இன்னொரு இனத்தினர் - கவியரங்கக் கவிஞர்கள்! அவர்களிலே, திரு. பொன்னடியான், கே.சி.எஸ். அருணாசலம், பொன்வளவன், பொன்முத்து ராமலிங்கம், ராதா பாரதி, அமுத பாரதி, இமயபாரதி, அரசு மணிமேகலை. தயானந்தன் பிரான்சிஸ் போன்றோர் சிலர் ஆவார்.

வளர்க தமிழ்! வளர்க! தமிழ்!

வளமுறுக! தமிழ் இனம்!

## 3. தமிழில் சிறுகதை இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

### முன்னுரை

ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் சிறுகதை தோன்றி வளரத் தொடங்கியது. முதலில் அமெரிக்காவில் எட்கர் ஆலன்போ என்பவர் சிறுகதைகள் பல எழுதி வெளியிட்டார். அவரைப் பின்பற்றி ஒஹென்றி என்பவரும் ஃபிரஞ்சு நாட்டில் மாப்பாசான் என்பவரும் உருசிய நாட்டில் செக்காவ் என்பவரும் சிறுகதைகளை எழுதினார்.

இச்சிறுகதைப் படைப்பு மேலைநாட்டின் உரைநடைக் கதைகள் போல் தமிழில் வெளிவரவேண்டும் என்ற பெருவிருப்புடன் பரமார்ந்த குருகதை (1845)யை எழுதிய பெருமையுடையவர் வீரமாமுனிவர்.

வ.கே.சு. ஐயர் என்பவரே முதன்முதலாகச் சிறுகதைக்கு உரிய வடிவத்தைப் போற்றிச் சிறந்த கலைப் படைப்புகளைத் தமிழுக்குத் தந்தவர். 'மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்' என்ற தலைப்பில் அவர்

எழுதிய சிறுகதை நூல் 1927-ல் வெளிவந்தது. ‘குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை’ என்னும் அவரது சிறுகதை நெஞ்சை உருக்கும் தன்மையுடையது.

**தமிழில் சிறுகதையின் வளர்ச்சி.**

வ.கே.சு. ஐயர் தமிழுக்கு அறிமுகப்படுத்திய சிறுகதைகளைப் போற்றி வளர்ந்த அறிஞர்கள் பலராவர். மணிக்கொடிக் காலத்தவர். இன்றும் அவ்விதழில் எழுதியவர்களை மணிக்கொடி எழுத்தாளர்கள் என அழைப்பர். புதுமைப்பித்தன், கு.ப.ரா., க.நா. சுப்பிரமணியன், ந. பிச்சமூர்த்தி, பி.எஸ். இராமையா, ந.சிதம்பர சுப்பிரமணியன், சி.சு. செல்லப்பா, எம்.வி. வெங்கட்ராமன், மௌனி என்போர் இக்குழுவில் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்களுள் முதலாவதாகக் சிறப்பிக்கத் தக்கவர் புதுமைப்பித்தன். இவரது இயற்பெயர் சொ. விருத்தாசலம். புதுமைப்பித்தன் என்னும் இவடைய பெயருக்கு ஏற்ப இவரது கதைகளில் புதுமைக்கருத்துகள் செறிந்துள்ளன. நகைச்சுவையும் நையாண்டியும் கிண்டலும் இவரது கதைகளில் இடம்பெறுகின்றன. ஏழை மக்கள்படும் இன்னல்களைக் கண்டு ஏங்கிக் கலங்கும் இரக்க நெஞ்சத்தையும் இவரது கதைகளில் காணலாம். உறவுகொள்வதற்கும் சமுதாயத்தோடு மோதிப் போராடுவதற்கும் இருவகையிலும் அவருக்குச் சிறுகதை உற்ற கருவியாக பயன்பட்டது என்பார் டாக்டர் மு.வரதராசனார். தம் வெறுப்பைக் காட்டிப் பிறரைத் தாக்குவதற்கு அவர் பயன்படுத்திய கருவிகளாகவும் சிறுகதைகள் பயன்பட்டன என்பதுவும் புதுமைப்பித்தனைப் பற்றிய மு.வ.வின் கூற்றாகும். இவர் எழுதிய ‘கல்யாணி’. ஆண்மை, கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், சாப விமோசனம், பொன்னகரம், மிஷின்யுகம் போன்றவை புகழை நிலைநிறுத்துவனவாகும்.

கு.ப.ரா. என்று அழைக்கப்படும் இராசகோபாலன் சிறுகதை உலகில் நிலையான இடம்பெற்றவர்களில் ஒருவராவர். குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் இன்ப, துன்பங்கள், சிக்கல் முதலியவற்றை இவர் தம் கதைகளில் படம் பிடித்துக் காட்டினார். ஆண் - பெண் உறவை எடுத்துக் கூறும் கதைகளிலும் பண்பாட்டு எல்லைக்குள் நின்று பாத்திரங்களின் மன நிலைகளையும் செயல்களையும் விளக்கும் இயல்புடையவர் இவர். இவரது சிறுகதைகள் பாலுணர்வு பெற்று மாபசான் சாயலைக் காட்டி நிற்கும் திரை என்ற சிறுகதை மணமான தன் தங்கைக்குப் பணிவிடை புரிந்து மகிழ்வெய்தும் ஒரு விதவையைப் பற்றிய கதையாகும். சிறுகதையின்

இலக்கணங்கள் யாவும் அடங்கியது இவரது விடியுமா? என்ற சிறுகதையாகும். கனகாம்பரம், புனர்ஜன்மம், காணாமலே காதல் என்பன இவரது சிறுகதைத் தொகுதிகள்.

சிறுகதை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதிலும் வெற்றி கண்டவர் கல்கி. இவரது இயற்பெயர் ரா.கிருஷ்ணமூர்த்தி. கேதாரியின் தாயார் என்ற சிறுகதையின் மூடநம்பிக்கைகளை எதிர்க்கிறார். பிராமணக் குடும்பத்துக் கொடிய பழக்க வழக்கங்களைச் சாடி இவர் சிறுகதைகள் எழுதியுள்ளார். சாதி வேற்றுமையில் நம்பிக்கையில்லாதவர் இவர். இவரது திருடன் மகன் திருடன், வீணை பவானி, கணையாழியின் கனவு, திருவழுந்தூர் சிவக்கொழுந்து முதலிய சிறுகதைகள் கற்பவரைக் கவர்வன. இவரைத் தமிழ்நாட்டு வால்டர் ஸ்காட்டு எனப் பாராட்டுவர்.

பி.எஸ். இராமையா, மணிக்கொடி என்ற பத்திரிக்கையின் ஆசிரியராகப் பணியாற்றியவர். முந்நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியவர். நட்சத்திரக் குழந்தைகள் என்ற சிறுகதை புகழ்பெற்றது.

மௌனி, சிறுகதை எழுதுவதில் தனித்தன்மையுடையவர். ஒருமுறை படிப்பதால் உணாந்துகொள்ளத் தக்கதல்ல அவருடைய சிறுகதைகள் என்பது மு.வ.வின் கூற்றாகும். அழியாச்சுடர், மணக் கோலம், சாவில் பிறந்த சிருஷ்டி முதலிய சிறுகதைகள் இவரது ஆழ்ந்த உணர்வைப் புலப்படுத்துவன.

தி. ஜானகிராமன் எழுதிய அவலும் உமியும் எனும் சிறுகதை அவருக்குப் புகழைத் தந்தது. இளைஞர்களின் பகடி வதையால் (ஈவ்டீசிங்) மனம் குமுறும் ஒரு பெண்ணின் பாத்திரத்தை சிவப்பு ரிக்ஷா என்னும் சிறுகதையில் இவர் விளக்குகிறார்.

லா. சா. ராமாமிர்தம் தமக்கெனத் தனிச்சிந்தனை உடையவர். இவரது ஜனனி என்ற கதை சிறப்புடையது. இவரது பாராட்டத்தக்க சிறுகதைத் தொகுதி ‘இதழ்கள்’.

சிசு. செல்லப்பா படைத்தன சிலவே என்றாலும் தனித்தன்மை படைத்தவை. ஸரஸாவின் பொம்மை என்ற இவரது சிறுகதைத் தொகுப்பு சிறப்பானது.

சுந்தர ராமசாமியின் ‘அக்கரைச் சீமையில்’ என்னும் சிறுகதைத் தொகுப்பு அவருக்குப் புகழைத் தேடித் தந்ததாகும்.

கு. அழகிரிசாமி கவர்ச்சியின் நடையில் சிறுகதைகள் எழுதியவர். விந்தன் எழுதிய கதைகள் சமுதாய ஊழல்களைச் சித்திரிப்பன.

நையாண்டி செய்து குத்திக்காட்டி எழுதும் சிறுகதை ஆசிரியர் வல்லிக்கண்ணன் ஆண்சிங்கம், கவிதை வாழ்வ, தத்துவ தரிசனம் முதலிய சிறுகதைகள் வல்லிக் கண்ணனுக்குப் புகழ் தந்தவை என்று மு.வ. சுட்டுகிறார்.

ரகுநாதன் என்பவரின் சிறுகதைகள் புரட்சிக் கருத்துகள் உடையவை. அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள், சமுதாயச் சீர்கேடுகளை விளக்கும் முறையில் அமைந்தவை. 'செவ்வாழை, சொர்க்கத்தில் நரகம், பேய் ஓடிப்போச்சு முதலிய சிறுகதைகள் அண்ணாவின் தனித்தன்மையைப் புலப்படுத்துவன.

கலைஞர் மு.கருணாநிதியின் சிறுகதைகளும் சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தும் இயல்பினை உடையவை.

அகிலன் ஆரவாரமற்ற ஆனால், அழுத்தமான படைப்புகளைத் தந்த சிறுகதை எழுத்தாளர். அவர்தம் நிலவினிலே சிறுகதைத் தொகுதி படிக்கப் படிக்கப் பண்பும் உணர்வும் ஊட்டுவன. ஒரு குறிக்கோளுடன் எழுதும் போக்கை அவரிடத்தும் மு.வரதராசனாரிடமும் காணலாம்.

ஜெயகாந்தன், சிறுகதைகளும் புதினங்களும் எழுதிப் புகழ்பெற்றவர். இவர் சிறுகதையுலகில் தமக்கெனத் தனியிடம் பெற்று விளங்குகிறார். யதார்த்தவாதத்துடன் எழுதப்படும் இவரது கதைகளின் சாதாரண ஏழை எளிய மக்களையும் குப்பத்துவாசிகளையும் கதைத் தலைவர்களாக்கி இவர் படைத்த கதைகள் சிறப்பானவை. யாருக்காக அழுதாள்?, ஒரு பிடிச்சோறு இனிப்பும் கரிப்பும் என்ற அவரது கதைகள் ஒவ்வொன்றுமே சிறந்தவை.

பவள மல்லிகை, மிட்டாய்காரன் முதலான சிறுகதைகள் பலவற்றைத் தந்தவர். - கி.வா.ஜகந்நாதன். இவர் எழுதும் கதைகளில் பழைய மரபுகள் புதிய ஒளிவீசி விளங்கும் என்பார் மு.வ.

முத்து தங்க ஐயப்பன். வ. தேனப்பன் போன்றோர் எழுதிய சிறுகதைகள் சிந்திப்பதற்கு உரியனவாகவும் சமுதாயத்துக்குப் பாடங்களாகவும் அமைகின்றன.

இன்று எண்ணற்றவர்கள் சிறுகதை எழுதுகின்றனர். தமிழகத்து இதழ்கள் சிறுகதை எழுதுபவர்களை ஊக்குவிக்கின்றன.

**மகளிரின் பங்கு**

ஆண் எழுத்தாளர்களைப் போலவே தமிழகத்தின் பெண் எழுத்தாளர்களும் சிறுதை வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளனர். பெண் சிறுகதை எழுத்தாளர்களில் அநுத்தமா, லட்சுமி, ராஜம் கிருஷ்ணன், சரோஜா ராமமூர்த்தி, கோமகள் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். சூடாமணியும், வசுமதி ராமசாமியும் சிறுகதை, புதினம் என்ற இருதுறைகளிலும் வல்லவர்கள்.

**முடிவுரை**

தமிழ்நாட்டில் இன்று சிறுகதைக்கு வரவேற்பு அதிகம். இன்னும் இராஜாஜி, விந்தன், தி.ஜா.,டி.கே.சீனிவாசன், ரா.கி.ரங்கராஜன், ஆர். சூடாமணி, பூவை எஸ்.ஆறுமுகம், பூமணி, கி.ராஜநாராயணன், பா.செயப்பிரகாசம், கு.அழகிரிசாமி, நீலபத்மனாபன், வண்ணநிலவன், வண்ணதாசன், சு.சமுத்திரம், பாலகுமாரன், தேனி=சீடையான், கல்கிதாசன், பொ.அழகு கிருஷ்ணன், யுவன்சந்திரசேனர், பெருமாள் முருகன், சுப்ரபாரதி மணியன், கண்மணி குணசேகரன், யூமா வாசுகி, ஜீ.முருகன், சோலை சுந்தரப்பெருமாள், சி.எம்.முத்து, தஞ்சை ப்ரகாஷ், அழகியசிங்கர் சாருநிவேதிதா, க.சீ.சிவக்குமார் போன்ற பலரும் பட்டியலுக்குள் நுழைந்துகொண்டே உள்ளனர். சிறுகதைகள் வாழ்க்கையை திசைமாற்றும் வலிமை படைத்தவை. எனவே பெருகிவரும் சிறுகதைகளுள் நல்லனவற்றைச் சங்கம் வைத்துப் போற்ற வேண்டியது தமிழர்தம் கடமையாகும்.

# தமிழ்ப் புதின இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

**முன்னுரை**

நாவல் என்ற சொல் இத்தாலியில் இருந்து டெகாமெரன் எழுதிய பொக்காசியோ என்பவரே புதினத்தின் தந்தையாகப் போற்றப்படுகிறார். ஆங்கிலத்தில் பமெல்லா முதற்புதினம் என்பர். ராபின்சன் குருசோ எழுதிய டேனியல் டீபோ், டாம் ஜோன்ஸ் வரலாறு எழுதிய ஹென்றி பீல்டிங் ஆகியோரும் முதற் புதினம் எழுதியவர் என்ற பெருமைக்குப் போட்டி இடுகின்றனர். வங்கமொழியில் பங்கிம் சந்திரசட்டர்ஜியின் துர்கேச நந்தினி

(1865) இந்தியாவின் முதற் புதினமாக அமைகிறது. தமிழில் முதற் புதினத்தைத் தந்தவர் வேதநாயகம் பிள்ளை.

**தமிழில் புதின வளர்ச்சி நிலை**

முதலாம் தொகுதியினர் வேதநாயகம் பிள்ளை. குருசாமி சர்மா, ராஜமையர்,மாதவையா, நடேச சாஸ்திரி ஆகிய ஐவரும் - ஐம்பெரும் தூண்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் சமூகச் சீர்திருத்தம் - பெண்மை போற்றல் போன்றவற்றையே கதைப் பொருளாகக் கொண்டு கதை எழுதினார்கள். இவை அந்தக் காலத்தின் தேவையாகும்.

இவர்களை அடுத்து (1910-1940) கல்கி வருகிற வரையில் மர்மம் துப்பறிதல் போன்ற பொழுதுபோக்குக் கதைகள் புறப்பட்டன. அவை போதாதென்று மொழிபெயர்ப்புப் புதினங்கள் பெருவெள்ளம்போல் வந்தன. வடுவூரார், ஆரணியார், ரங்கராஜு, ராமானுஜலு, கோதைநாயகி என்ற ஐவரும் எழுதிக் குவித்தனர். மக்களும் விரும்பிப் படித்தனர்.

கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி புதினம் என்ற வாயிலை அகலத் திறந்து வைத்தார். அவர் தரமான புதினங்கள் பலவற்றைப் படைத்தார். அண்ணா, மு.வ.,அகிலன், நா. பார்த்தசாரதி, தி.ஜா.,ராஜ்லஷ்மி, ஜெயகாந்தன் போன்றோர் பொலிவுற்றனர். இனிப் புதின ஆசிரியர்கள் மூலம் இதன் வளத்தைக் காணலாம்.

**வேதநாயகம் பிள்ளை:** பிரதாப முதலியார் சரித்திரம் என்ற இவரது புதினம் தமிழின் முதற் புதினமாகும். நீதி பாதி நகைச்சுவை பாதி என்ற இரண்டும் நிரம்பியது. இவர் எழுதிய இன்னொரு புதினம், சுகுணா சுகுந்தரி.

**ராஜம் ஐயர்** : இவர் எழுதிய புதினம் "கமலாம்பாள் சரித்திரம்" இது புதின வடிவத்தில் முதன்மை பெறுகிறது. சமூக உணர்வூட்டும் சிறப்பினது. விவேக சிந்தாமணி இதழில் தொடர்கதையாக வெளிவந்தது. அவ்வாறு வந்த முதற்புதினமும் இதுதான்.

**அ. மாதவையா : இவர் எழுதிய புதினம், பத்மாவதி சரித்திரம்**

பிரதாப முதயார் சரித்திரம், சமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் - இம்மூன்றும் தமிழின் முதல் மூன்று புதினங்கள் என்று போற்றப்படுகின்றன.

**புதினங்களின் வகைகள்**

தமிழிற் புதினங்களைக் கருத்து அடிப்படையில் குடும்பப் புதினங்கள், சமூகப்புதினங்கள், வரலாற்றுப் புதினங்கள், துப்பறியும் கொள்கை அடிப்படைப் புதினங்கள், நாட்டுப் பற்று உணர்த்தும் புதினங்கள் எனப் பல வகையாகப் பிரிக்கலாம்.

குடும்பப் புதினங்கள் வை.மு. கோதைநாயகி அம்மாளின் ஜகன்மோகினி சிறப்புடைய புதினம். ராஜம்கிருஷ்ணன், அநுத்தமா, லட்சுமி, ராஜம்கிருஷ்ணன், ராமமூர்த்தி, சூடாமணி, பி.எம். கண்ணன், சுதா சுப்பிரமணியனம் முதலியோர் குறிப்பிடத் தகுந்தவர்.

வரலாற்றுப் புதினங்களுக்கு ஒரு சிறப்பை உருவாக்கியவர் கல்கி என்ற புனைபெயர் கொண்ட ரா.கிருஷ்ணமூர்த்தி. இவரது முதல் வரலாற்றுப் புதினம் பார்த்திபன் கனவு. மகேந்திரவர்ம பல்லவனின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன், அலையோசை போன்றன குறிப்பிடத் தக்கவை.

சாண்டில்யன் மலைவாசல், கன்னிமாடம், மன்னன்மகள், யவன ராணி, கடற்புறா; கோவி. மணிசேகரனின் மயிலிறகு, அரு இராமநாதனின் வீரபாண்டியன் மனைவி, நா. பார்த்தசாரதியின் பாண்டிமா தேவி, செகசிற்பியனின் பத்தினிக்கோட்டம், நாயகி நற்சோணை, விக்கிரமனின் நதிபுரத்து நாயகி, அகிலனின் வேங்கையின் மைந்தன், கயல்விழி, வெற்றித் திருநகர் எண்ணத்தக்கவை.

**சமூகப் புதினங்கள் :**

சமுதாயத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து எழுதப்படும் புதினங்கள் சமூகப் புதினங்களாகும். மு.வ. எழுதிய கள்ளோ காவியமோ, அல்லி, அகல்விளக்கு, கயமை, நெஞ்சில் ஒரு முள் ஆகியன குறிப்பிடத்தக்கன.

தேவன் என்னும் புனைபெயருடைய மகாதேவன், எட்டுச் சமுதாயப் புதினங்களை எழுதினார். துப்பறியும் சாம்பு, ஒருநாள், பொய்த்தேவு பாராட்டப் படுகின்றன. சி.சு. செல்லப்பாவின் வாடி வாசல், ரகுநாதனின் பஞ்சும் பசியும், சிதம்பர சுப்பிரமணியனின் இதய தாகம், ரா.கி. ரங்கராஜனின் இது சொர்க்கம், கு.ராஜவேலுவின் மகிழம்பூ முதலியவை நினைவில் நிற்பன.

விடுதலைப் போராட்டத்தையும் காந்திய நெறியையும் கருவாகக் கொண்டவை கல்கியின் மகுடபதி, தியாக பூமி, அலையோசை, அகிலனின் நெஞ்சின் அலைகள், சிதம்பர சுப்பிரமணியத்தின் மண்ணில் தெரியுது வானம் ஆகியவற்றைச் சொல்லலாம்.

அகிலனின் பாவைவிளக்கு, புதுவெள்ளம், நா.பார்த்தசாரதியின் குறிஞ்சிமலர், பிறந்த மண், பட்டுப்பூச்சி, ஆத்மாவின் ராகங்கள் முதலியவை புதின உலகில் தனிப்பெரும் சொத்துக்களாகத் திகழ்கின்றன.

**குறிக்கோள் விளக்கப் புதினங்கள்:**

குறிப்பிட்ட கொள்கைகளை விளக்குவதற்காகப் புதினம் எழுதியோரும் உண்டு. அறிஞர் அண்ணா, இரங்கோன் ராதா, பார்வதி பி.ஏ.முதயலிய புதினங்களை எழுதியுள்ளார். பார்த்தசாரதியின் புதினங்களில் தமிழ்ப்பண்பாடு உணர்த்தப் படுவதை உணரலாம். ஜெயகாந்தன் புதினங்களில் நடப்பியலை உணர்த்தும் குறிக்கோள் இடம் பெறுவதை அறியலாம். மறைமலையடிகள் எழுதிய குற்றவாளி, கோகிலாம்பாள் கடிதங்கள் என்னும் புதினங்கள் தனித்தமிழ் உணர்வும் இறைப்பற்றும் உணர்த்தப்படக் காணலாம்.

மொழிபெயர்ப்புப் புதினங்கள்: காண்டேகரின் மராட்டியப் புதினங்களைக் கா.ஸ்ரீ.ஸ்ரீயும்; தாகூரின் வங்கமொழி புதினங்களைத் த.நா.குமாரசாமியும் ரங்கநாயகியும் மொழி பெயர்த்துள்ளனர். கன்னட மொழிப்புதினங்களை டாக்டர்.சித்தலிங்கய்யா மொழி பெயர்த்துத் தமிழுக்குச் சிறப்புச் செய்தனர். ரகுநாதன், நா.தர்மராஜன், ரா.விழிநாதன் ஆகியோரின் பணி இத்துறையில் குறிப்பிடத்தகுந்தது. சிறப்புடைய மலையாளப் புதினங்களும் தமிழாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

**முன்னுரை:**

இன்றைய சமுதாய நடவடிக்கைகளை அடிப்படையாக வைத்துப் பலரும் புதினம் படைக்கின்றனர். ஆதவன், டி.செல்வராஜ், விட்டல்ராவ், நாஞ்சில் நாடன், பெருமாள் முருகன், பவாண்ணன், வண்ணநிலவன், உமா மகேஸ்வரி, சுப்ரபாரதி மணியன், பா.விஜய், சோலை சந்தர பெருமாள், சி.ஆர்.ரவீந்திரன், பாரதி பாலன், பாலகுமாரன், பி.எம்.கண்ணன், ஆர்.வி.தங்கர்பச்சான், உமா சந்திரன் என்று ஏராளமான எழுத்தாளர்கள்

தங்கள் வாழ்க்கைக் குறிக்கோளைப் புதினமாக மாற்றித் தமிழ் மக்களுக்கு வழங்குகின்றனர். ஆனால் பாடத் திட்டத்தில் வைக்கப்பட்ட ஒரே ஒரு புதினத்தை மட்டுமே தன் வாழ்நாளிலே ஒரே ஒருமுறை படித்த கல்லூரி மாணவச் செல்வங்கள் நிறைந்த நம் தமிழ்நாட்டில் யாரை நம்பி இவர்கள் புதினம் எழுதி அச்சிட்டு விற்பனை செய்கிறார்கள் என்பது சிதம்பர ரகசியமே.

ஆரணி குப்புசாமி முதயார் (1867-1925) ஆனந்த போதினி என்ற இதழில் தொடர்ந்து இவர் எழுதிய புதினங்களாலேயே மிகுந்த புகழ் பெற்றவர். பெரும்பாலும் ஆங்கிலப் புதினங்களைத் தழுவி எழுதியிருந்தாலும் பாத்திரப் பெயர்களும் நிகழிடங்களும் தமிழ் மரபுடன் அமைந்துள்ளன. ஜி.டபுள்யு.எம்.ரெயினால்ட்ஸ் என்ற ஆங்கில ஆசிரியரின் புதினங்களின் ஆக்கமே அதிகம். ஏறத்தாழ 75 புதினங்களை எழுதியுள்ளார். இரத்தினபுரி இரகசியம் (9.பாகம்) பவளத்தீவு ‘தபால் கொள்ளைக்காரர்’ மஞ்சள் அறையின் மர்மம் போன்றவை சில புதினங்களின் பெயர்கள்.

ஜே.ஆர்.ரங்கராஜு (1875-1956) துப்பறியும் கோவிந்தனை மக்கள் மனத்தில் உலவவிட்டனர். இராஜாம்பாள், ‘மோகனசுந்தரம்’, ‘சந்திரகாந்தா’ ‘ஆனந்தகிருஷ்ணன்’ போன்று எட்டுப் புதினங்கள் எழுதியுள்ளார்கள். இவற்றுள் சில நாடகங்களாகவும் பல திரைப்படங்களாவும் ஆக்கப்பட்டன.

வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார் (1880-1942). தாசில்தார் வேலையை எழுத்துச் செல்வாக்கால் விட்டவர். தம் புதினங்களை அச்சிட ஓர் அச்சகமும் ‘மனோரஞ்சனி’ என்ற மாத இதழும் தொடங்கி மாதம் ஒரு கதைநூல் என எழுதிக் குவித்தவர். ‘மேனகா’ ‘கும்பகோணம் வக்கீல்’ ஆகியன திரைப்படங்களாகவும் வந்தன. பாலாமணி அல்லது பாக்தாத் திருடன் ‘கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பர சாமியார்’ போன்றன குறிப்பிடத்தக்கன.

டி.டி.சாமி ‘கருங்குயில் குன்றத்துக் கொலை (மூன்று பாகங்கள் கொண்டது) என்ற புதினத்தைப் படிக்கத் தேடி அலைந்து வாசகர்கள் தவம் கிடப்பார்களாம். இப்புதினம் பின்னர் ‘மரகதம்’ என்ற பெயரில் சிவாஜி, பத்மினி நடித்த படமாக வெளிவந்தது. சரஸா மனோகரி வஸந்தா போன்றன பிற புதினங்கள் ஜாவர் சீதாராமன் (1921-1969) குமுதத்தில்

கதை எழுதினார். நானே நான் மின்னல் மழை மோகினி உடல் பொருள் ஆனந்தி பாசக் கிரகணம் பணம் பெண்பாசம் தூண்டில் மீன் காசே கடவுள்.

தமிழ் வாணன் (1922-1977) சங்கர்லால் என்ற துப்பறியும் நிபுணரைக் கற்பனையாகப் படைத்து உலவ விட்டனர். ‘கருநாகம்’ கருகிய கடிதம் மஞ்சள் தலையணை, ஆயிரம் கண்கள், கதவு திறந்து கை தெரிந்தது மீனழகி, ‘நடுவிரல்’, ‘காலடி ஓசை’ என 76 மர்மப் புதினங்களைப் படைத்தார்.

## தமிழ்ப் புதின வரலாற்றில் சில முக்கியமான எழுத்தாளர்கள்

### அறிஞர் அண்ணா:

(1909 – 1969) அண்ணாவின் ஆறு கதைகள், அண்ணாவின் சிறுகதைகள், அண்ணாவின் குட்டிக் கதைகள் போன்றவை சிறுகதைத் தொகுதிகள். ‘பலாபலன்’, ‘சுடுமூஞ்சி’ போன்றவை சகுன சாதக மூடப் பழக்கங்களைச் சாடுவன அன்னதானம் ‘தேடியது வக்கீலை’ - பேய் ஓடிப்போச்சு ஆகியன போலி சமயவாதக் கபடதாரிகளின் முகத் திரையினைக் கிழிப்பன. இருபரம்பரை என்ற கதை வர்க்கப் போராட்டத்தையும் ‘சூதாடி’ ‘ராஜாதிராஜா’ ஆகியன சமுதாய ஏற்றதாழ்வையும் சித்திரிக்கின்றன. ராஜாபாட் ரங்கதுரை பாகவதர்’ என்ற கதை பெரியாரிடமிருந்து பிரிந்து வந்த துயரையும்; “செவ்வாழை” குடியானவனின் பஞ்சுள்ளத்தையும்; ‘தஞ்சை வீழ்ச்சி, பிடிசாம்பல், புநகம்’ ஆகியன வரலாற்றுப் பின்னணியிலும் அமைந்தவை.

இவருடைய புதினங்கள் குமரிக்கோட்டம் பார்வதி பி.ஏ.ரங்கோன் ராதா, கபோதிபுரக் காதல், குமாஸ்தாவின் பெண், கங்கராணி, குமரிக்கோட்டம்.

**மு.வரதராசனார் (1912-1974):** ‘செந்தாமரை’ முதற்புதினம் பெண் கள்ளாகவும் காவியமாகவும் அமைவதைக் ‘கள்ளோ காவியமோ’ காட்டுகிறது. உலகப் போரில் பர்மாத் தமிழர் நடந்தே இந்தியா வருவதையும் இன்னல்களையும் காட்டுவது ‘அந்த நாள்’ டைரி முறையில் அமைந்த சாயல் பற்றியது ‘அல்’. பண்புணர்த்தும் புதினம் ‘மலர்விழி’. பண்டை அகப்பொருளின் பதியவார்ப்பாக அமைவது ‘பாவை’. எப்போதும் ஒருவனுடனே தப்பாது வாழ்வதே கற்பு என்ற பழம் நிலையினின்று விலகி, இன்னொருவனுடன் வாழும் நிலை நேரிடும்போது அவனுக்குத் துரோகம் செய்யாதிருப்பதே கற்பு

எனக் காட்டுவது - ‘கரித்துண்டு’ பொருளியல் மயமான வாழ்வில் பொறுமை போதிப்பது ‘வாடாமலர்’. சாகித்ய அகாதமி விருது பெற்ற ‘அகல்விளக்கு’ ஒரு துன்பியற் புதினம். ‘கயமை’ என்ற புரட்சிப் புதினம் சிற்றின்ப சுயநலம் கொண்டு வீட்டையோ நாட்டையோ நினையாத ஆடவரைச் சாடுவது. திரைப்படமாக வந்த சிறப்பினைப் பெற்றது ‘பெற்ற மனம்’.

**தி.ஜானகிராமன் (1921-1982):** நூற்றுக்கணக்கான சிறுகதைகள் படைத்தவர். ‘சிவப்பு ரிக்ஷா’, கொட்டு மேளம், அக்பர் சாஸ்திரி யாதும் ஊரே பிடிகருணை சக்தி வைத்தியம் (சாகித்ய அகாதமி விருது) மனிதாபிமானம் ஆகிய கதைகள் சிறப்பானவை. அமிர்தம், மோகமுள் அன்பே ஆரமுதே, அம்மா வந்தாள், உயிர்த்தேன். செம்பருத்தி, மலர் மஞ்சம், மரப்பசு’ ஆகிய புதினங்கள் இவரால் எழுதப்பட்டவை.

**ஜெகசிற்பியன் (1925-1978):** ஜீவகீதம், மண்ணின் குரல், கிளிஞ்சல் கோபுரம், காணக்கிடைக்காத தங்கம், சொர்க்கத்தின் நிழல், காவல் தெய்வம் இனிய நெஞ்சம், தேவ தரிசனம் போன்றவை சமூகப் புதினங்கள். நாயகி நற்சோணை, மகர யாழ் மங்கை, பத்தினிக் கோட்டம், ஆலவாய் அழகன், திருசிற்றம்பலம், மாறம்பாவை, நந்திவர்மன் காதல் சந்தனத் திலகம்’ போன்றவை வரலாற்றுப் புதினங்கள். பாரத புத்திரன், ஊமைக் குயில்,பொய்க்கால் குதிரை, நொண்டிப் பிள்ளையார் போன்றவை சிறுகதைத் தொகுப்புகள்.

**சாண்டில்யன்:**

இவருடைய முதற் சிறுகதை ‘சாந்த சீலன்’. முதற் புதினம் பலாத்காரம் (1933) தமிழில் தோன்றிய சத்தியாகிரகம் பற்றிய முதற் புதினம் இதுவாகும். முதல் வரலாற்றுப் புதினம் ஜீவபூமி. சமூகப் புதினங்கள் செண்பகத் தோட்டம், ‘மனமோகம்’ போன்றன ஆறு எனினும் இவர் வரலாற்றுப் புதினத்தால்தான் பெயரும் புகழும் பெற்றார். மொத்தப் புதினங்கள் ஐம்பது ‘யவன ராணி, உதய பானு, கன்னிமாடம், மலைவாசல், ஜல தீபம், ராஜதீபம், பல்லவ திலகம், ஜீவபூமி, மஞ்சள் ஆறு போன்றன குறிப்பிடத்தக்கன.

**அகிலன்:**

பெண்ணை வைத்துப் புதினம் தொடங்கியவர். புதினங்களிலெல்லாம் பெண்மைக்கே முதலிடம் தந்துள்ளார். பாவை விளக்கில் 4 பெண்கள்.

சித்திரப்பாவையில் ஆனந்தி. எங்கே போகிறோம் என்பதில் புவனா. பொன்மலரின் சங்கரி.

வெற்றி திருநகர், பாண்டியப் பின்னணியில் 'கயல்விழி' சோழப் பேரரசைப் பின்னணியாகக் கொண்ட வேங்கையின் மைந்தன். காந்தியம் பின்னிய கதை புதுமை வெள்ளம் போன்ற வரலாற்றுப் புதினங்களைப் படைத்தார்.

ஆண் பெண் உறவை அடிநாதமாகக் கொண்டது 'சித்திரப் பாவை' ஞான பீடப் பரிசு பெற்றது. அழகாக வாழக் கற்றுக் கொள். முடிந்தால் வாழ்க்கையை அழகுபடுத்து. முடியாவிட்டால் அதை அசிங்கப்படுத்தாமலாவது இரு எனக் குரல் கொடுப்பது. மணமான பின் உள்ளம் ஒவ்வாமை உணரின் பிரிந்திடும் உரிமை பெண்ணுக்கு வேண்டும் என்று வற்புறுத்துவது. மாணிக்கம் உடல் வெறி கொண்டவன். ஆனந்தி கலையுணர்வு கொண்டவள். எனவே இரு துருவங்கள்.

பாவை விளக்கு, நெஞ்சின் அலைகள், வாழ்வு எங்கே? பொன்மலர், எங்கே போகிறோம்,பால்மரக் காட்டினிலே போன்ற 20 புதினங்களைப் படைத்துள்ளார். 200 சிறுகதைகள் எழுதியுள்ளார். மின்னுவதெல்லாம், வழி பிறந்தது, செங்கரும்பு, சக்திவேல், நிலவினிலே என 18 சிறுகதைத் தொகுதிகள்.

**கோ.வி.மணிசேகரன்:**

புரட்சிப் புலவன், அம்பிகாபதி, 'தாயும் சேயும்', 'வாழ்வின் விளக்குகள்', 'உயிரும் ஒளியும்' 'மகுடங்கள்' போன்றன சிறுகதைத் தொகுதிகள். 'செம்பியன் செல்வி', 'செஞ்சி அபரஞ்சி', 'அசோகச் சக்கரம்', 'முதல்வர்' போன்றன வரலாற்றுப் புதினங்கள். இவரது நூறாவது புதினம் 'ஒரு தீபம் ஐந்து திரிகள்' இதுவரை 130 புதினங்கள் படைத்துள்ளார். இவர் வரலாற்றுப் புதின ஆசிரியராகவே போற்றப்படுகின்றார்.

**சுந்தர ராமசாமி** : முதலும் முடிவும் இவரது முதற்கதை. அக்கரைச் சீமையில், பிரசாதம், பல்லக்குத் தூக்கிகள், பள்ளம் போன்றன சிறுகதைத் தொகுதிகள். ஒரு புளிய மரத்தின் கதை ஒரு சிறந்த வட்டாரப் புதினம். ஜே.ஜே. சில குறிப்புகள் இவரது புதுமை முயற்சியான புதினம். திரைகள் ஆயிரம், குறும் புதினம். தகழி சிவசங்கரம்பிள்ளையின் செம்மீன், தோட்டியின் மகன் ஆகியவற்றை மொழிபெயர்த்துள்ளார். 'பசுவய்யா' என்ற

புனைபெயரில் கவிதைகள் படைத்துள்ளார். 'நடுநிசி நாய்கள்' இவரது கவிதைத் தொகுப்பு

**நா.பார்த்தசாரதி:-** இவரது முதற் படைப்பு பழகிய பாசம். புதிய பாலம், கங்கை இன்னும் வற்றிவிடவில்லை,வலம்புரிச் சங்கு, தேவதைகளும் சொற்களும், மங்கியதோர் நிலவினிலே, காலத்துக்கு வணக்கம், வேனில் மலர்கள் போன்றன சிறுகதைத் தொகுதிகள். கல்கி சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு வலம்புரிச் சங்கு.

பாண்டிமாதேவி, மணிபல்லவம், வஞ்சிமாநகர், கபாடபுரம், நித்திலவல் என்று ஐந்து வரலாற்றுப் புதினங்கள் எழுதியுள்ளார். சமூகப் புதினங்கள் 20 எழுதியுள்ளார். குறிஞ்சி மலர் அரசியல் பொருளியல் பின்னணியில் அமைந்தது. ஆதிக்கத்துக்கு அடிபணியாத சத்தியமூர்த்தியைப் பற்றிச் சித்திரிப்பது, பொன்விலங்கு - புனிதக்காதல் பற்றிக்கூறுவது ஆத்மாவின் ராகங்கள் சத்திய வெள்ளம் நெஞ்சக் கனல், சமுதாய வீதியில், அனிச்ச மலர், நீல நயனங்களில் போன்ற புதினங்கள் குறிப்பிடத்தக்கன.

**ஜெயகாந்தன்**

விடுதலைக்கு முன் புதுமைப்பித்தன் சிறுகதை வேந்தன். விடுதலைக்குப் பின் ஜெயகாந்தன் சிறுகதை மன்னன். உதயம், 'ஒரு பிடி சோறு', 'இனிப்பும் கரிப்பும்' தேவன் வருவாரா, சுமைதாங்கி, மாலை மயக்கம் யுகசந்தி. புதிய வார்ப்புகள், சுய தரிசனம், இறந்த காலங்கள், குருபீடம் சக்கதரம் நிற்பதில்லை எனப் பன்னிரண்டு தொகுதிகள் சிறுகதைகளாகும். இவரது முதற் புதினம் வாழ்க்கை அழைக்கிறது. பாரிசுக்குப் போ, உன்னைப் போல் ஒருவன், யாருக்காக அழுதாள், சில நேரங்களில் சில மனிதர்கள், ரிஷி மூலம், சமூகம் என்பது நாலுபேர். ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம், சினிமாவுக்குப் போன சித்தாளு, ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் போன்ற புதினங்கள் பெயர்பெற்றவை.

**தமிழ்ப் புதின வரலாற்றில் இடம் பெறும் பெண் எழுத்தாளர்கள்**

1895-1914 கால கட்டத்தில் ராஜாத்தியம்மாள். பண்டிதை விசாலாஷி அம்மாள், மீனாட்சி சுந்தரம்மாள். தேவ குஞ்சரியம்மாள் போன்றோர் எழுதினார். வை.மு. கோதைநாயகி அம்மாள் வீரு வசந்தா, மகிழ்ச்சி உதயம், கிழக்கு வெளுத்தது, புனித பவனம், புதுமைக் கோயில் போன்ற 115 புதினங்கள் படைத்தார்.

**குகப்பிரியை:** முதன் புதினம் சந்திரிகா 1937ல் விகடன் நடத்திய புதினப் போட்டியில் முதற்பரிசு பெற்றது. சமூப் புதினங்கள் ஆறு. சிறுகதைத் தொகுதி மூன்று படைத்தவர்.

**லஷ்மி:** (திரிபுர சுந்தரி) ஆயிரம் சிறுகதைகள் 110 புதினங்கள் எழுதியுள்ளார். வானொலி நாடகங்களும் எழுதியுள்ளார். விசித்திரப் பெண்கள், படித்த மனைவி, பெண்ணின் பரிசு, நீலப் புடவை போன்ற சிறுகதைத் தொகுதிகள். முதற் புதினம் பவானி. பெண் மனம், மதிலா விலாஸ், தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசும் ஒரு காவிரியைப் போல சாகித்ய அகாதமி விருதும் பெற்றன. காஞ்சனையின் கனவு (காஞ்சனா) பெண் மனம் (இருவர் உள்ளம்) மூன்று மொழிகளில் திரைப்படங்களாயின.

**ஹெப்சிபா ஜேசுதாசன்:**

நாகர்கோவில் வட்ட பனைவிளை கிராம வாழ்வினைக் கூறும் புதினம் 'புத்தம் வீடு'. மறுமணம் பற்றியது.

**ராஜம் கிருஷ்ணன்**: 'குறிஞ்சித் தேன்' புகழ்பெற்ற புதினம் இது படகர் வாழ்வின் பாங்கான படப்பிடிப்பு. போர்ச்சுகீசிய ஆதிக்கத்தை எதிர்த்து நடத்தும் போராட்டம், வளைக்கரம் விடுதலை இந்தியாவில் அரசியற் குழப்பங்களைக் காட்டுவது, வேருக்கு நீர் வினோபா ஜெயப்பிரகாஷ் முயற்சியால் சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளையர்கள் திருந்துவதைக் கூறுவது 'முள்ளும் மலர்ந்தது' அலைவாய் கரையில் மீனவர் வாழ்வு பற்றியது. கருப்பு மணிகள் உப்பளத்தை மையமாகக் கொண்டது. 'கூட்டுக் குஞ்சுகள்' சிவகாசி தீப்பெட்டித் தொழிற்சாலையைக் காட்டுவது.

**விமலா ராணி:**

நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் நூற்றுக்கு மேற்பட்ட புதினங்கள் நூற்று மேற்பட்ட வானொலி நாடகங்கள், 15 மேடை நாடகங்கள் வானப் பூ, அடிவானத்துக்கு அப்பால் பாரிஜாதம், வார்த்தை தவறிவிட்டாய், நதியில்லாத ஓடம், ராஜா ராணி ஜாக்கி, புதைமணல், தாவணி விசிறிகள் வெள்ளைப் புறா ஒன்று இன்றிரவு உன்னை கனவுகள் போன்றன குறிப்பிடத்தக்கன.

**வாஸந்தி:**

இதுபதுக்கும் மேற்பட்ட புதினங்கள், இருபதுக்கும் மேற்பட்ட குறும்புதினங்கள். சுமார் முன்னூறு சிறுகதைகள் எழுதியுள்ளார். ஆகாச வீடுகள், மனிதர்கள் பாதிநேரம், தூங்குகிறார்கள், நான் புத்தன் இல்லை. நிஜங்கள் அந்தி நேரத்து உதயங்கள், மூங்கில் பூக்கள், ஒரு சங்கமத்தைத் தேடி... போன்றவை குறிப்பிடத்தக்க சிறுகதைகள் யுனெஸ்கோ உலக இலக்கியப் படைப்புக்காக ஏற்ற முதல் தமிழ் நூல் ஆகாச வீடுகள்.

**சிவசங்கரி:**

காத்திருக்கிறேன், அரவிந்தர் சொல்கிறார். கழுகு பிறந்த மண், அம்மாவுக்காக ஒரு பொய் போன்றன சிறுகதைத் தொகுப்புகள், திரிவேணி சங்கமம் ஏன், நதியின் வேகத்தோடு 47 நாட்கள். தப்புக் கணக்கு, சுறா மீன்கள் ஒரு சிங்கம் முயலாகிறது. ஒரு பகல் ஒரு இரவு, வளர்த்த கடா, வெட்கம் கெட்டவர்கள், அவன் அவள் அது என நாற்பதுக்கும் மேற்பட்ட புதினங்கள். பெண்கள் என்னதான் படித்து ஏற்றமுற்றாலும் குடும்பத்தில் ஆணுக்கு வளைந்து கொடுத்து வாழ வேண்டிய நிலையினை நவில்வது நதியின் வேகத்தோடு. அக்கால இளைஞர்களின் பாழ்நிலைப் படிப்பிடிப்பு அவன்.

**இந்துமதி**:-இந்துமதியின் முதற் புதினம் 'கீதமடி நீ எனக்கு. முதற் சிறுகதை 'பந்தம்' ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் ஐம்பதுக்கும் மேற்பட்ட புதினங்கள் எழுதியுள்ளார். 'தரையில் இறங்கும் விமானங்கள், வீணையில் உறங்கும் ராகங்கள், மண்ணில் தெரியுது வானம் 'நெருப்பு மலர்' காகிதக் கப்பல்.

**அனுராதா ரமணன்:-** சுமார் 300 கதைகள் எழுதியுள்ளார். முதற் கதை கனவு மலர்கள் கருகும் போது, முதற் புதினம் 'மூடிக் கிடக்கிறது ஓர் நெஞ்சு' முதல் தொடர்கதை சொர்க்கத்தின் நிழல். நூற்றுக்கு மேற்பட்ட புதினங்களைப் படைத்துள்ளார். விகடன் பொன்விழா சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றது, சிறை என்ற சிறுகதை பின்னர் திரைப்படமாக வெளிவந்தது.

## தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

**முன்னுரை**

தமிழ்நாடகத்தின் தொடக்கம் குறித்துத் தெளிவாக அறியத்தக்க சான்றுகள் இல்லை. இலக்கியக் குறிப்புகளும் கல்வெட்டுச் சான்றுகளும் ஓரளவு தமிழ் நாடகத்தின் வளர்ச்சிநிலையை அறியத் துணைபுரிகின்றன.

**தொல்காப்பியர் முதல் வள்ளுவர் உரை**

'நாடகம்' என்ற சொல் மிகப் பழங்காலந் தொட்டே தமிழில் வழங்குகிறது. 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்' என்ற தொல்காப்பியத் தொடரானது தமிழ் நாடகத்தின் தொன்மையை உணர்த்துகிறது. 'நாடகத்தமிழ் நூலாகிய பரம், அகத்தியம்' முதலாகவுள்ள தொன்னூல்கள் இறந்தன என்று அடியார்க்கு நல்லார் கூறுகிறார்.

தமிழில் கிடைக்கும் முதற் காப்பியமான சிலப்பதிகாரத்தில் நாடகப் பண்புகளைக் காணும் போது அக்கால மக்களுக்கு நாடகம் நன்கு அறிமுகமான ஒன்று என்பது தெளிவாகின்றது. 'சங்க இலக்கியம் வளர்ந்த காலத்தில் ஆடல் பாடல் கலைகள் செழித்திருந்தபடியால் நாடகங்களும் பல இருந்திருக்க வேண்டும்' என்கிறார் மு.வரதராசனார்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் தொல்காப்பியம் நாடக வழக்கினைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்நூல் நாடகக் கலைஞர்கள் வெளிப்படுத்த வேண்டிய நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எட்டு வகை மெய்ப்பாடுகளைப் பற்றிக் கூறுகிறது. திருவள்ளுவர் - நாடக அரங்கினை கூத்தாட்டு அவை என்கிறார்.

இத்தகைய நாடகக் கலையானது; இன்ப நுகர்ச்சியை வெறுத்தொதுக்கும் பௌத்த, சமண சமயங்கள் தமிழகத்தில் தலைதூக்கியதால் அழிந்திருக்க வேண்டும். சங்க பாட்டுகளாவது நமக்கு ஒரளவு கிடைத்தன. ஆனால் நாடக நூல் ஒன்று கூடக் கிடைக்காமற் போனது வருத்தத்திற்குரியது. சோழர் காலத்தில் நாடக வளர்ச்சி. குன்றிய நிலையில் இருந்த நாடகக் கலை சோழர் காலத்தில் மீண்டும் வளரத் தொடங்கியது. இராசராச சோழன் பிறந்த நாளாகிய ஐப்பசித் திங்கள் சதய நாளில் தஞ்சைப் பெரிய கோயிலில் இராச விசயம் என்ற

நாடகம் ஆண்டுதோறும் நடிக்கப்பெற்றது. கமலாலய பட்டர் என்பவர் பூம்புலியூர் நாடகம் என்ற நூலை எழுதினார்.

திருவிழாக் காலங்களில் கோயில்களில் நாடகங்கள் நடிக்கப்பட்டன. நாடகக் கலை வளர மன்னர்கள் மானியங்கள் வழங்கினர். இவற்றைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

பதினோராம் நூற்றாண்டில் குறவஞ்சி, பள்ளு, நொண்டி, நாடகம் போன்ற நாடக வகைகள் தோன்றி வளர்ந்தன. கீர்த்தனை நாடகங்கள் என்ற ஒருவகையும் தோன்றியது.

**குறவஞ்சி:** குறிஞ்சி நிலத்துக்குரியதாகக் குறவஞ்சி நாடகம் விளங்குகிறது. திரிகூடராசப்பகவிராயரின் திரக்குற்றாலக்குறவஞ்சியும் கவிக்குஞ்சர பாரதியாரின் அழகர் குறவஞ்சியும் சிவக்கொழுந்து தேசிகரின் சரபேந்திர பூபாலக்குறவஞ்சியும் குறிப்பிடத்தக்கன.

**பள்ளு:**

மருதத்திணைக்குரியதாகப் பள்ளு நாடகம் விளங்குகிறது. முக்கூடற்பள்ளு சிறந்த நாடகமாக விளங்குகிறது.

**நொண்டி நாடகம்:**

தீய வழியில் நடந்து, ஒழுக்கம் கெட்டு பரத்தையரிடம் உறவு கொண்டு, இறுதியில் நொந்து துன்புற்று நொண்டியாகிய ஒருவன் தான் வருந்துவதாகக் கற்பனை செய்து பாடுவது நொண்டி நாடகமாகும். சீதக்காதி நொண்டி நாடகம் என்பது சிறந்த நாடகமாகும். மாரிமுத்துப் புலவர் இயற்றிய திருக்கச்சூர் நொண்டி நாடகம். ஐயனார் நொண்டி நாடகம் போன்றவை குறிப்பிடத்தக்கன. இவை சிந்து என்னும் பா வகையில் பாடப்பட்டுள்ளன.

**கீர்த்தனை நாடகம்:**

சீர்காழி அருணாசலக் கவிராயர் பாடியவை இராம நாடகக் கீர்த்தனைகள், அசோமுகி நாடகம், அனுமார் பிள்ளைத் தமிழ் ஆகியன ஆகும். அவற்றுள் இராம நாடகக் கீர்த்தனை என்பது மக்கள் விரும்பிக் கேட்கும் வண்ணம் மெட்டமைந்த இசைப் பாடல்கள் நிறைந்தது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் கோபால கிருஷ்ண பாரதியார்; நந்தனார் சரித்திரக் கீர்த்தனையையும்,திருநீலகண்ட நாயனார் கீர்த்தனையும் இயற்றினார்.

தெருக்கூத்து: தெருக்களில் வெட்ட வெளியில் நடிக்கப்பட்டுவந்த நாடகம் இதுவாகும். கிராமப்புறங்களில் இரவு தொடங்கி விடிய விடிய நடைபெறும் நாடகம் இதுவாகும். புராணக் கதைகளும் வீர பாண்டியக் கட்டபொம்மன் கதை,அரிச்சந்திரன் கதை, நல்ல தங்காள் கதை போன்றவை நாடகங்களாக நடிக்கப்படும். வாய்மொழி நாடகங்களான இவற்றின் நடிகர்கள் மேடையிலேயே பாடல்களை உதிர்க்க வல்லவர்கள்.

**இருபதாம் நூற்றாண்டு நாடக வளர்ச்சி:-** சங்கரதாக சுவாமிகள், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சுமார் நாற்பது நாடகங்கள் எழுதியவர். இவருடைய நாடகங்கள் பாடல்களும் உரைநடையும் கலந்து எழுதப்பட்டவை. பிரகலாதன், சிறுத்தொண்டர், பவளக்கொடி, லவகுசா, அபிமன்யு, சுந்தரி, சதி சுலோசனா, சதி அனுசூயா போன்ற நாடகங்களை இவர் படைத்தார்.

**பம்மல் சம்மந்தர்:-** தமிழ் நாடகத் தந்தை எனப்பட்டவர். சுகுண விலாச சபை என்ற நாடகக் குழு நடத்தி தொண்ணூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை இயற்றினார். மனோகரா, இரண்டு நண்பர்கள். கள்வர் தலைவன், வேதாள உலகம் போன்ற கற்பனை நாடகங்களையும் ஆங்கில நாடகங்களையும் மொழியாக்கம் செய்தும் வழங்கியுள்ளார். நாடகத் தமிழ், நாடக மேடை நினைவுகள் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

**பரிதிமாற்கலைஞர்:-**நாடகத்திற்கு இலக்கணம் கூறும் நாடக இயல் என்ற நூலையும் கலாவதி, மான விசயம்,ரூபாவதி போன்ற நாடகங்களையும் பரிதிமாற் கலைஞர் எழுதியுள்ளார்.

ஆங்கிலத்தில் லிட்டன்பிரபு என்பவர் எழுதிய “த சீக்ரெட் வே” என்ற நாடகத்தின் கருவை எடுத்துக் கொண்டு படிப்பதற்கேற்ற நாடகமாக மனோன்மணியம் என்ற நாடகத்தை இயற்றினார் பேராசியரிர் சுந்தரனார்.

மிருச்சகடிதம் என்ற வடமொழி நாடகத்தை மண்ணியல் சிறுதேர் என்று தமிழில் எழுதினார் பண்டிதமணி கதிரேசனார்.

சாகுந்தலத்தை மறைமலையடிகள் தமிழில், மொழிபெயர்த்தார். மேலும், ஷேக்ஸ்பியர் நாடகங்கள், இப்சென் நாடகங்கள் போன்றவற்றையும் மொழி பெயர்த்துள்ளார்.

அவ்வை. தி.க.சண்முகம், நாடக மேதையாவார். டி.கே.எஸ்.சகோதரர்கள் நாடகக்குழு ரத்தபாசம், மனிதன், இன்ஸ்பெக்டர்

தமிழ்ச்செல்வம், அவ்வையார், இராசராச சோழன் முதலிய சிறந்த நாடகங்களை நடத்தினார்.

நாடகக் குழுக்கள் தமிழ்நாட்டில் பல்கிப் பெருகி, நாடகக் கலையை வளர்ந்தது ஒரு தனி வரலாறு. கே பாலச்சந்தர் நாடக மேடை மூலம் திரைக்கு வந்தவர் எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ்.ஆர், சிவாஜி கணேசன். என்.எஸ்.கே. எஸ்.வி. சகஸ்ரநாமம், ஆர்.எஸ். மனோகர், ஹெரான் ராமசாமி, பூரணம், விசுவசநாதன், காத்தாடி ராமமூர்த்தி, எஸ்.வி. சேகர் போன்ற திரைப்பட நடிகர்களும் நாடகங்களை வழங்கியுள்ளனர். கே. பாலசந்தரின் பல மேடை நாடகங்கள் பின்னர் திரைப்படங்காளயின. சோ.ராமசமி நையாண்டி நாடகங்களை உருவாக்குவதில் வல்லவர். தண்ணீர் தண்ணீர் நாடகம், போட்ட கோமல் - சுவாமிநாதன், மௌலி மெரீனா, கிரேஸி மோகன் லியோபிரபு அறிவானந்தம். மதுரை திருமாறன், ஏ.எஸ். பிரகாசம், எஸ்.வி. சேகர் போன்றோர் இந்தப் பட்டியலில் சிறப்பிடம் பெறுகின்றனர்.

**பகுத்தறிவு நாடகங்கள்:** பாரதிதாசன், அண்ணா, கருணாநிதி, சி.பி.சிற்றரசு, ப. கண்ணன், ஏ.கே. வேலன், எஸ்.எஸ். தென்னரசு, தில்லை வில்லாளன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள், நாற்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியவர் பாரதிதாசன். இரணியன், படித்த பெண்கள், சௌமியன், பிசராந்தையார், சேர தாண்டவம் போன்ற குறிப்பிடத்ததக்கன.

வேலைக்காரி, ஓர் இரவு, நீதிதேவன் மயக்கம், சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்துராஜ்யம், சந்திரோதயம், காதல் ஜோதி முதலியன அண்ணா மேடையேற்றியவை.

மந்திரகுமாரி, பராசக்தி, மனோகரா, புதையல், காகிதப்பூ, அணையா விளக்கு, மணிமகுடம், தூக்குமேடை, சிலப்பதிகார நாடகம், ஒரே முத்தம் முதலான இருபது நாடகங்களை எழுதியவர் கருணாநிதி.

திருவாரூர் தங்கராசு எழுதிய இரத்தக் கண்ணீர் நாடகத்தை எம்.ஆர். ராதா நடித்தார்.

**சோதனை நாடக இயக்கம்:** சோதனை முறைகளைப் பின்பற்றி, பரிஷா முறை நாடகங்கள், நிஜ நாடக அமைப்புகள், கூத்துப் பட்டறை என்று பல அமைப்புகள் நடத்துகின்றன. வங்காள கவிஞர் பாதல் சர்க்கார் இத்தகைய நாடகங்களை போற்றினார். நா.முத்துச்சாமியின் நாற்காலிக்காரர்,

பிரபஞ்சனின் முட்டை, மு.இராமசுவாமியின் கலகக்காரர், பெரியார் சாபம், விமோசனம், பாகவதாஜீயம் போன்ற நாடகங்கள் சமுதாய உணர்வு ஊட்ட முயன்றன.

**முடிவுரை:**

மக்கள் மனத்தைக் கவர்ந்த நாடகங்களின் இடத்தைப் பின்னர் திரைப்படங்கள் பிடித்துக் கொண்டன. திரைப்படங்களின் இடத்தைத் தற்போது தொலைக்காட்சிகள் பிடித்துக் கொண்டன. வருடக்கணக்கில் நடக்கும் மெகா சீரியல்கள் தொலைக்காட்சியில் இடம் பெறுகின்றன. நாடகக் கலையில் நுழைந்து மக்கள் மனத்தைப் பிடிக்காதவர்கள் தாம் தமிழ்நாட்டின் ஆட்சியையும் தொடர்ந்து ஆண்டு வருகிறார்கள் என்பது குறிப்பித்தகுந்தது.

## நாடகத்தின் வகைகள்:

**(அ).புராண நாடகம்:**

ஆரம்ப கால நாடகங்கள் பெரும்பாலும் புராண நாடகங்களாகவே இருந்தன. மக்கள் அனைவருக்கும் தெரிந்த கதை என்பதால்; கூட்டம் கூட்டவும் பொருள் திரட்டவும் புராண நாடகங்கள் பெருமளவில் உதவின. நாடக காலத்திற்குப் பின் திரைப்படம் தொடங்கிய காலத்தில் புராணப் படங்களே மிகுதியும் வந்தன என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது. நவாப் ராஜமாணிக்கத்தின் சபரிமலை ஐயப்பன் நாடகத்திற்குப் பிறகே ஐயப்ப பக்தர்கள் பெருமளவு பெருகினர் என்பது வரலாற்றுண்மை.

**(ஆ) இலக்கிய நாடகம்:**

தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் நாட்டில் தழைத்திருக்கிறது. மக்களிடையே மொழியுணர்வை நாட்டு பற்றை ஊட்ட பண்டைய இலக்கியங்கள், பழைய வரலாறுகள் தமிழ் மக்களுக்கு நாடகங்கள் வாயிலாக அறிமுகப்படுத்தப்பட்டன. கி.ஆ.பெ. விசுவநாதத்தின் தமிழ்ச் செல்வம், பாரதிதாசனின் பிசிராந்தையார் போன்றவை இத்தகையவை.

**(இ) வரலாற்று நாடகம்:**

ஒரு நாட்டின் அல்லது இனத்தின் உண்மை வரலாறோ அல்லது கற்பனை வரலாறோ நாடகங்களுக்கு அடிப்படையாக அமையலாம். அரு. இராமநாதனின் இராஜராஜ சோழன், சக்தி கிருஷ்ணசாமியின் வீரபாண்டிய

கட்டபொம்மன் ஆகிய நாடகங்கள் தம் சிறப்பினால் பின்னர் திரைப்படங்களாக வெளிவந்தன.

**(ஈ) சமூக நாடகம்:**

நடுந்தர மக்களின் அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களை உள்ளவாறே படம் பிடித்துக் காட்டும் இவ்வகை நாடகங்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றவை. சமுதாயத் தீமைகளை இவை எதிர்க்கும் சமுதாயத்தைச் சீர்திருத்த முயலும். ப.நீலகண்டனின் நாம் இருவர் அண்ணாவின் ஓர் இரவு போன்றவை இத்தகையவை.

**(உ) அரசியல் நாடகங்கள்:**

இந்திய வீடுதலையுணர்வையும் தேசிய எழுச்சியையும் ஊட்ட நாடகங்கள் போராட்ட காலத்தில் பயன்பட்டன. விடுதலைக்குப் பின்னர் ஆளுவோரின் பிரச்சாரத்திற்கும் எதிர்க்கட்சியினரின் விமர்சனத்திற்கும் இவை களங்களாயின. மு. கருணாநிதி சோ. ராமசாமி ஆகிற இருவரும் இவ்வகையில் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

**2. தொலைக்காட்சி நாடகம்:**

திரைப்படத்தின் அனைத்து உத்திகளையும் தொலைக்காட்சி நாடகங்கள் கையாளுகின்றன. இவை, பெரும்பாலும் தொடர்களாக வருவதால் திரைப்படம் போன்று இரண்டு மணி நேரத்துக்குள் முடிக்கும் கட்டாயம் இதில் கிடையாது. எனவே திரைப்படம் போன்று விரைந்த படத் தொகுப்பு இதில் இல்லை. கணினியின் உதவியால் பின்னணிக் காட்சிகளை நினைத்தபடி எல்லாம் உருவாக்க முடிகிறது. உலகில் உள்ள இடங்களிலெல்லாம் இருந்த இடத்திலேயே நாடகப் பாத்திரங்களை நடிக்கச் செய்ய முடிகிறது. ஆனந்த விகடன், பத்திரிக்கையில் வரும் தொடர் நாடகம் உடனேயே தொலைக்காட்சியிலும் நாடகமாக வந்தது.

**3. வானொலி நாடகம்:**

தமிழ் நாடகத்துறை, வளர வானொலி பெருமளவு உதவிய ஒன்று. வானொலி ஒரு கேள்விப்புலவன் கருவி மட்டுமே. எனவே ஒலி ஒன்றே இதன் மூலதனம். உரையாடல் மூலமும் அனைத்தையும் காட்ட வேண்டிய கட்டாயம் கொண்டவை. தொலைக்காட்சி நாடகங்களால் இன்று வானொலி நாடகங்களுக்கு செல்வாக்கில்லை.

# நாட்டுப்புறப்பாடல்கள்:

நாட்டுப்புறப் பாடல்கள் என்பவை பெரும்பாலும் எழுத்தறிவில்லாத கிராமத்து மக்களிடையே நெடுங்காலமாக வழங்கி வருபவை. இவை செவி வழியாகத் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருகின்றன. இப்பாடல்கள் தாமாக மலர்ந்து மணம் வீசும் காட்டு மலர்களுக்கு ஒப்பானவை. இயற்கையோடு இயைந்து வாழும் கிராம மக்களின் உள்ளக் கிளர்ச்சிகளை வெளியிடும் தன்மை வாய்ந்தவை. உள்ளத்து உணர்ச்சிகளை அப்படியே இசையுடன் வெளிப்படுத்தும் இயல்பு உடையவை.

நாட்டுப்புறப்பாடல்கள் குழந்தைப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், தொழிற்பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் எனப் பலகையாகப் பிரிப்பர். இவற்றிற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

**குழந்தைப் பாடல்கள்:**

குடும்ப வாழ்க்கையில் இன்பத்தைத் தருவது மக்கள் பேறாகும். குழந்தை இல்லாத குடும்பம், இறைவன் இல்லாத ஆலயம் போன்று சிறப்பற்றுத் தோன்றும். எந்த இல்லத்தரசியும் தான் மலடியாக இருப்பதை விரும்புவதில்லை. எவ்வளவு வறுமையில் வாடினாலும் பிள்ளைப் பேற்றை அனைவரும் விரும்புகின்றனர்.

பிள்ளைக் கனியமுதுக்கு ஏங்குகிறாள் ஒரு தாய்:

கிண்ணியிலே போட்ட சோற்றைக்
கீறித் தின்னப் பிள்ளை யில்லை
ஊருக்குப் போகையிலே
உடன் வரப் பிள்ளை யில்லை

குழந்தைகள் ஒன்றை அறிந்து கொள்வதில் பேரார்வம் காட்டுவார்கள். வினாவிடையாகப் பாடலைக் கூறிக் குழந்தையின் ஆவலைத் தூண்டுதல் தாயாரின் இயல்பு. இத்தகைய பாடல்களில் ஒரு வரியில் இரண்டு சொற்களே இருக்கும் எல்லாரும் குழந்தையாக இருந்த போது கேட்ட ஒரு பாடல் இதோ.

என்ன ஊர்?
மயிலாப்பூர்.

என்ன மயில்?

காட்டு மயில்

என்ன காடு?

ஆற்காடு

என்ன ஆறு?

பாலாறு.

என்ன பால்?

கள்ளிப்பால்.

என்ன கள்ளி?

இலைக் கள்ளி.

என்ன இலை?

மா இலை.

என்ன மா?

அம்மா.

**தாலாட்டுப் பாடல்:**

அன்புத் தாய் தன் ஆசைக் குழந்தை கண்மூடி உறங்க வேண்டும் என்பதற்காகத் தாலாட்டுப் பாடுதல் உண்டு. தால் என்றால் நாக்கு; ஆட்டு என்றால் அசைத்துப் பாடுதல். எனவே தாலாட்டு என்பது நாக்கை அசைத்துப் பாடும் பாடல் என்று பொருள்படும். அப்படிப்பாடும் போது ஏதாவது நிகழ்ச்சியை கதையைச் சொல்லிப் பாடுவது வழக்கம். குழந்தை அதைக் கேட்டுக் கொண்டே தூங்கிவிடும். இதோ ஒரு தாய் இதிகாசக் கதையைத் தன் தாலாட்டில் அமைத்துப் பாடும் இனிமையைக் கேட்போம். இராமாயணத்தை அறிவோம்.

தாயார் சொற்படிக்கு

இராமர் வழி நடந்தார்

பர்ணக சாலைகட்டி – சுவாமி

கவானும் பள்ளி கொண்டார்.

வகையறியாச் சீதையரும் - சுவாமி

மான் எனக்கு வேண்டும் என்றாள் - ஈஸ்வரரும்

மான் பிடிக்க வனம் புகுந்தார்.

பிச்சை யென்றான் இராவணனும்
அள்ளியிட்டாள் சானகியாள்
கூசாமே சீதையைக்
கொண்டு வந்தான் தென்னிலங்கை
அனுமாரைத் தூதனுப்பிச்
சீராழி கைகொடுத்து - இராமர்
சீதை சிறை மீட்டாராம்.
கணையாழி கைக்கொடுத்து - இராமர்
காரிகையை மீட்டாராம்!

இராமாயணக் கதை சில வரிகளில் அடங்கி விட்டதல்லவா? இத்தகைய நல்ல கதைகளைக் கேட்டுக் கேட்டுப் பழகும் குழந்தை நல்ல குணங்களுடன் வளரும் என்பது உறுதி.

**தொழிற்பாடல்கள்:**

வேலை செய்யும் போது சோர்வு தோன்றாமல் இருக்கப் பாட்டுப் பாடிக் கொண்டே தொழிலை உற்சாகமாகச் செய்வர். படகோட்டி தன் காதலியுடன் பாடும் பாட்டில் மண்ணை நம்பி என்று தொடங்குகிறான். ஏலேலோ என்று மறுமொழி கூறுகிறாள். அவன் காதலி, மரமிருக்க என்கிறான். அவன் ஜலசா என்கிறாள் அவள். இப்படி அவள் ஏலேலோ, ஜலசா என்று கூறும் போது தான் பட்டியல் தாளம் பொருந்தி வருகிறது.

மண்ணை நம்பி – ஏலேலோ
மரம் இருக்க – ஜலசா
மரத்தை நம்பி – ஏலேலோ
கிளையிருக்க – ஜலசா
கிளையை நம்பி – ஏலேலோ
கோல் இருக்க – ஜசலா
கோலை நம்பி – ஏலேலோ
இலை இருக்க – ஜலசா
இலையை நம்பி – ஏலேலோ
பூ இருக்க – ஜலசா

பூவை நம்பி – ஏலேலோ
பிஞ்சிருக்க – ஜலசா
பிஞ்சை நம்பி – ஏலேலோ
காயிருக்க – ஜலசா
காயை நம்பி – ஏலேலோ
பழம் இருக்க – ஜலசா
பழத்தை நம்பி – ஏலேலோ
நீயிருக்க – ஜலசா
உன்னை நம்பி – ஏலேலோ
நான் இருக்கேன் - ஜலசா

மண்மை நம்பி எனத் தொடங்கிக் காதலனும் காதலியும் ஒருவரை நம்பி ஒருவர் வாழும் அன்புள்ளத்தைப் பாடல் எப்படிப் படிப்படியாகச் சித்தரிக்கிறது பாருங்கள்!

**தெய்வ வழியாடு:**

இனி, தெய்வத்தை வழிபடும் பாடல் ஒன்றைக் காண்போம்.

அரியின்னு பாய் விரிச்சு
அச்சுதான்னு பேர் சொல்லி
கிருஷ்ணான்னு படுத்தவர்க்கு
கேடில்லை ஒரு நாளும்
கோவிந்தான்னு படுத்தவர்க்கு
குறைவில்லை ஒரு நாளும்

**ஒப்பாரிப் பாடல்:**

தாய்ப்பாசம் உலகில் ஈடு இணையற்றது. தாயை இழந்து தவிக்கும் ஒப்பாரிப் பாடலில் தாயின் வரலாறே அடங்கிக் கிடக்கிறது. ஒப்பாரியை அழுகைப் பாட்டு என்பர். ஒரு மகள் தன் தாய் எப்படியெல்லாம் தன்னைக் கீழே விடாமல் மடிமேல் இருத்தியும், தோளில் தாங்கியும் வளர்த்தாள் என்பதனைச் சொல்லிச் சொல்லி அழுகிறாள்.

பூமியீலே விட்டாலே – என்
பொற்பாதம் நோகுமென்பாய்

தரையிலே விட்டாலே — என்
தங்கக் கால் நொகுமென்பாய்
அள்ளி எடுத்திடுவாய் - ஆச்சி நீ
கீழ் மடியில் கட்டிடுவாய்
மார்மேலே தொட்டி கட்டி — எனக்கு
மடிமேல் நடை பழக்கி
தோள் மேலே தொட்டி கட்டி — எனக்கு
துடைமேல் நடை பழக்கி
கானல் அடிக்கு தென்றே — ஆச்சி நீ
கையால் நிழல் பிடிப்பாய்
வெய்யில் அடிக்கு தென்றே — ஆச்சி நீ
விரலால் குடை பிடிப்பாய்
கள்ளி நிழலாச்சே - இனி எனக்குக்
கண்டவர்கள் தாயாச்சே
வேலி நிழலாச்சே — இனி எனக்கு
வேண்டியவர்கள் தாயாச்சே!

தனக்குத் தாயாக இருந்த ஒரு தாய், தனக்கு ஒரு தாயைத் தேடிச் சென்று விட்டாளே! அவள் காதில் இது விழவா போகிறது? கேட்டால் உயிர் பெற்று வருவாளோ?

இது போல் எண்ணற்ற நாட்டுப்புறப் பாடல்களைக் கேட்டு இன்புறலாம்.

## இணையத் தமிழ்

இனி ஒரு விதி செய்வோம் எல்லாம் இணைய மயம் ஆக்குவோம் எனும் காலத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். இண்டர்நெட் என்கிற இணையம் உலகத்தைச் சுருக்கி நம்மை இணைத்து வருகிறது. சங்கத்தமிழை உலகத்தமிழாக்க, உலகத் தமிழர்கள் இணையத்தையே கருவியாகக் கொண்டுள்ளனர். உலக வலைப் பின்னலில் (www.world wide web) மகிழ்ச்சியோடு சிக்க விரும்பாதார் யாருமில்லை எனலாம்.

இணையம் என்றால் என்ன? இண்டர்நெட் என்பதையே தமிழில் இணையம் என்கிறோம். இண்டர் எனில் இடையில் எதற்கிடையில், கம்ப்யூட்டர்களுக்கு இடையில் - கணிணினியை (கம்யூட்டர்) ஒன்றோடொன்று இணைப்பதையே நெட் ஒர்க் (Net Work) என்கிறோம். நெட்வார்க்கிலுள்ள நேவ என்பதும், இண்டரும் இணைய இண்டர்நெட் ஆனது. இவ்வாறு இணைக்கபட்ட கணினிகளை மேலும் பெரிய அளவில் உலகளவில் இணைத்துப் பயனடையலாம் எனும் கருதுகோளில் உருவானதே இணையமாகும். இதில் உலகளாவிய வலை (Work wide web-ww) என்பதும் இணைந்துள்ளது. உலகின் நூற்றுக்காணக்கான பல்கலைக்கழகங்களை வலைப் பிணைப்பு (web) இணைத்துள்ளது. இவ்வலைப் பிணைப்பில் ஏறகுறைய 10 கோடி வலைப் பிணைப்புகள் உள்ளன. இதனை இன்று முப்பது கோடிக்கும் மேற்பட்டோர் பயன்படுத்துகின்றனர். இணையதளத்தில் தகவல்களைத் தேடிப் பிடிப்பதற்கு ஏற்பட்டுள்ள ஊடகங்களில் தலையாயது உலகளாவிய வலை இவ்வலை. தகவலை ஒழுங்குபடுத்திக்காட்டப் பயன்படுகிறது. இணையத்தில் நுழைந்து வலம் வர நினைப்போர்க்கு மேய்ப்பான் (பிரௌஎசிங்) கண்டிய்பாக தெரிய வேண்டும். இந்த 'வெப்' பிரௌசரைத் தமிழில் வலை நோக்கர்கள் என்பர். வலை முகவரிகள் எல்லாமே என்று தான் துவங்கும். 1960-களில் ஆர்பாநெட் எனப்படும். இணைப்பு மையத்தின் வளர்ச்சி பல்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டது, எனினும் 1993-ம் ஆண்டு மார்க் ஆண்டர்சன் மொசைக் (mosaic) என்கின்றனர்.

**இலக்கியத்தில் இணையகத்தின் பயன்:**

இலக்கிய ஆய்விற்கு இணையம் இல்லையேல் இயலாது எனும் காலம் வந்து கொண்டிருக்கிறது. தமிழுக்கு இணையத்தைப் பெருமளவில் அறிமுகம் செய்தவர்கள் வெளிநாட்டுத் தமிழர்களே. அவர்களால் தான் இணையகத்தில் ஆங்கில மொழிக்கு அடுத்து உலக அளவில் பயன்படுத்தப்படும் மொழி தமிழ் எனும் பெருமை கிடைக்கிறது. தமிழ் இணையதளம் அமைத்தவர்களில் தொடக்க நிலையில் குறிப்பிடதக்கவர் சிங்கப்பூர் தமிழர் நா.கோவிந்தாசாமி ஆவார். இவரையடுத்துப் பல

இணையத் தளங்கள் தமிழர்கள் குடியிருக்கும் பல்வேறு உலக நாடுகளில் உருவாயின.

உலகத் தமிழர்கள் இணையத் தளத்திற்கு முக்கிய காரணமாக அமையினும் அதற்கு வேண்டிய ஊக்கத்தினை அளித்திடத் தமிழக அரசும் தயங்காது. வேண்டியன வேண்டுங் காலத்தில் செய்தது. தொடக்க நிலையில் உலகத்தமிழர்கள் அவர்களுக்குத் தக்கபடி வெப்தளங்களை அமைத்தால் ஒருவருக்கொருவர் செய்திகள் அறியத் தடையேற்றபட்டது. தமிழக அரசு கி.பி.1999-ல் நடத்திய இணைய மாநாட்டில் உலகத் தமிழர்களைக் கலந்து அனைவரும் ஏற்கும் வகையில் தமிழ் விசைப் பலகையை அமைத்தது. தமிழ் எழுத்துக்களின் குறியீடு தரப்படுத்தப்பட்டு TAB, TAM என்ற குறியீடுகள் அறிவிக்கப்பட்டன. இதனால் தமிழ்த் தகவல் மையம் விரிவடைந்தது. சிக்கல்கள் ஓரளவிற்குத் தீர்ந்தன.

இன்று இணையத்தளத்தில் தமிழ் நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. கவிதைகள் ஏராளமாக வருகின்றன. வார இதழ்கள், மாத இதழ்களிலுள்ள செய்திகளையும் அறிய முடிகிறது.

தமிழ்த் தளங்கள், பல வெளிநாட்டில் உள்ளன. சில தமிழ்த் தளங்களில் ஆங்கிலத்தில் விளக்கம் கொடுக்கப்படுகின்றன. தமிழ் தெரியாத வெளிநாட்டார் தெரிந்து கொள்ள இவ்வாறு அமைத்துள்ளனர்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகம் அளிக்கும் விவரங்கள் Pioneer www.Tamil web / Archieve என்ற தளத்தில் கிடைக்கிறது.

ஜெர்மனியிலுள்ள கொலோன் பல்கலைக்கழகம் Institute of Indology and Tamil studies என்ற தலைப்பில் தகவல்களைத் தருகிறது.

அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைகழகமும் தமிழ்ப்புலம் ஒன்றை அமைத்துள்ளது. Department of Tamil Studies என்ற தலைப்பில் காணலாம்.

ஃப்ளோரிடாவைச் சார்ந்த எஸ். ராஜகோபால் தொகுத்தளிக்கும் தகவலகள் Madras Home Page என்ற பெயரில் கிடைக்கின்றன.

கனடாவில் வசிக்கும் தமிழர்கள் இணைந்து TamilCanadian website நடத்துகிறார்கள். மேலும் Tamil World, Tamil Ulagam, தமிழ் ஓசை என்று பல தளங்கள் உள்ளன.

இணையத் தமிழ் வரி வடிவங்களிலேயே தகவல்களை அளிக்கும் INTAMM தளம் உலகத் தமிழர்களின் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்டது. http://www.intamn//it/literature2.html

info on Tamil Nadu என்ற பெயரிலும் பல தளங்கள் உள்ளன. இவை விளையாட்டு, சுற்றுலா பற்றியும் மாவட்டங்கள் பற்றிய தகவல்களையும் விரிவாகச் சேர்த்து வைத்துள்ளன.

பெர்க்லியிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் தமிழ் இணையத்தளத்தில் சங்க இலக்கியம் பற்றி விரிவான ஆய்வுக் குறிப்புகள் அடங்கியுள்ளன. இத்தளம் பெறக் குறியீடு,

http://tamil berkely edu/Research/Research html

Berkely Home Page

University of California – Tamil Chair 9 Research classes)

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்செல்ஸைச் சார்ந்த பிரகாஷ் என்பவர் நடத்தும் SCT செய்திக்குழு தமிழ்த் தொடர்பாகக் கேட்கும் கேள்விக்களுக்கு பதில் தருகிறது. அணுக வேண்டியது FAQ – Soc culture tamil (SCT)

இந்திய அரசின் வெப்செர்வரில் தமிழ்நாட்டுப் பக்கத்தில் தமிழ்ச் செய்திகள் மிகுதியாக உள்ளன. எடுத்துக்காட்டாக மதுரையைப் பற்றி அறிய Madurai online Madurai.com

தமிழ்நாடு சுற்றுலா வாரியம் தனக்கென இணையதளப் பக்கங்களை உருவாக்கியுள்ளது,

மும்பையின் டாடா அடிப்படை ஆய்வு மையம் Tamil Language Resources on the web என்று ஏற்படுத்தி உள்ளது. மேலும் பெங்களூர் ஆன்லைனும் தமிழ் பற்றிய பல செய்திகளைத் தருகிறது. இணையகத்தில் தமிழ் மின்னணு நூலக வசதியும் உள்ளது. இவற்றை இயக்கின் தமிழ் இலக்கியங்கள் பற்றி முழுமையாக அறிய முடியும். பெங்களூரில் டாக்டர். கீதா ராமசாமியின் வெப்சைட் இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியங்கள் பற்றி அரிய செய்திகளைக் கொண்டுள்ளது.

இன்று வெளிநாட்டில் இணையத்தின் மூலமாகத் தமிழைக் கற்றுக் கொடுக்கும் முயற்சியும் நடைபெறுகிறது.

தமிழ்ப் பத்திரிகைகள் இணையம் வழியாகப் பரவுதல் இன்று எளிதாகிவிட்டது. சாதாரண கிராமத்து எழுத்தாளர் எழுதிய நூலும் இன்று இணையத்தில் ஒரு வெப் (web) பைப் பிடித்துள்ளது. தமிழ்த் தகவல்கள் அடங்கிய வெப் (web) பக்கங்களை எப்படி அமைப்பது என்று தடுமாற வேண்டாம். அதையும் இணையம் கற்றுத் தருகிறது. அதற்குத் துணைபுரியும் வகையில்,

'A short guide to selling up web pages containing tamil materials' என்று ஏற்படுத்தியுள்ளனர்.

சென்னையில் இருந்து வெளிவரும் தினபூமி 'மயிலை வரி வடிவில்' தமிழ் இணையத்தில் வரும் முதல் நாளிதழ் எனும் பெருமை பெறுகிறது. கணையாழி இலக்கிய இதழும் மயிலை வரி வடிவில் (Mylai Font) வெளிவருகிறது.

தமிழ்க் கவிஞர்களின் கவிதைகள் பல மயிலை வரி வடிவத்தில் இணையத்தில் வருகின்றன. ஞானக்கூத்தன், பசுவய்யா, கல்யாண்ஜி, கவிதைகள் மிகுதியாகக் கிடைக்கின்றன.

எழுத்தாளர் சுஜாதாவிற்கு 'அஞ்சல்','இணைமதி' வரிவடிவங்களில் பக்கங்கள் உள்ளன. சென்னை ஆன்லைன்கள், ஆறாம் திணை எனும் தமிழ்ப்பக்கங்களில் சுவையான செய்திகளைத் தருகிறது. பெரும்பாலான வார இதழ்கள் இணையத்தில் இடம் பெறுகின்றன. இணையம் நடத்தும் தமிழ்ப் பத்திரிக்கைகளும் உள்ளன. தென்றல், தமிழ்ச்சோலை ஆகியன. தமிழ் உலகம் இணைய மாத இதழ், உலகம் என்ற தமிழ் மின் இதழும் வெளிவருகிறது.

தகவல் தொழில் நுட்பமும் கணிப்பொறித் தொழில் நுட்பமும் கூடும் கூடல் சங்கம் தான். இணையம் ஒன்றுக்கு மேற்பட்ட கணிப்பொறி இணைப்பு நெட்வொர்க் ஆகும். இதனை LAN (Local Area Aetwork) MAN (Metropolitan Area Nerwork) WAN (Wide Area Network) என்பர். இவை ஒரே கட்டிடத்தில் அல்லது ஓர் இடத்தில் இருக்கிற கம்பியூட்டர்களை இணைத்துக் தகவல்களைப் பெற, தகவலைக் கொடுக்கப் பயன்படும் நெட்வொர்க்,

ஓரிடம் என்பது கடந்து, உலகளாவிய நிலையில் கம்பியூட்டர்களைத் தொலைபேசி போன்றவற்றால் உலகளாவிய வலைப் பின்னலால் (www) இணைப்பது இணையம். இந்த இணையத்தில் நமக்குரிய தகவல்களைச் சேர்க்குமிடமே வெப்சைட் (website) இதன் மூலம் தமிழ் இலக்கியங்கள் எப்படி இணையத்தில் இடம் பெற்றுள்ளன என்பதை விரிவாகக் காண முடியும்.

இணையத்தில் தமிழ் என்பது இலக்கியங்களை இணையத் தளத்தில் சேர்ப்பது என்பதோடு முடிந்து விடுவதன்று. தமிழ் இலக்கியங்களின் புதிய வளர்நிலைகளையும் ஒப்பிட்டு ஆய்வுகளையும், மொழிச் சிந்தனைகளையும் அறிவியல் வழியில் தமிழை மாற்றும் முயற்சிகளையும் செய்தல் வேண்டும்.

நம் நூல் இணையத்தில் வெப்பக்கம் உருவாக்க வேண்டுமா? இது எளிமையானது. நம்மிம் கம்பியூட்டர் இருக்க வேண்டியதில்லை. கம்பியூட்டர் தெரிய வேண்டியதுமில்லை. இணைய சேவை செய்வோரிடம் கூறின் நாம் தேவைக்குத் தனி வெப் பக்கம் அல்லது பிறர் பக்கத்தில் நமக்கு ஓரிடம் வாடகைக்கு ஏற்படுத்தி அதற்குரிய கட்டணத்தை வாங்குவர். இப்போது நம் நூல் இணையத்தளத்தில் நுழைந்து விடும்.

தமிழ் இலக்கிய ஆய்வு மாணவர்களுக்குப் பெரிதும் மின்னணு நூல்நிலையம் பயன்படும். தன்வீட்டுக் கம்பியூட்டரில் இருந்தபடி உலகெங்கிலும் உள்ள இலக்கியங்கள் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள முடியும். எனவே ஆய்வு மாணவனுக்கு நெறியாளர், முதல் வழிகாட்டி எனின் இணையம் இரண்டாவது வழிகாட்டியெனலாம்.

தமிழகத்தில் கலைஞர். கருணாநிதி முதல்வராய் இருந்த காலத்தில் சென்னையில் அமைக்கப்பட்ட தமிழ் இணைய பல்கலைக்கழகம் இலக்கிய ஆர்வலர்களுக்கும் பேராசிரியர்களுக்கும், பல்கலைக்கழகத்திற்கும் பலவகையில் பயன்படுகிறது. இலக்கிய கல்வி அளிக்கும் திட்டமும் உள்ளது. இதனால் வெளிநாட்டுத் தமிழர்கள் இணையம் வழியாக இலக்கியக் கல்வி பெற முடிகிறது.

இன்று இணையத்தளத்தில் ஆங்கிலத்திற்கு அடுத்த நிலையைப் பெற்றுள்ள தமிழ்மொழி அதற்கெனத் தனிப் பல்கலைக்கழகமும் கண்டு 'தமிழன்' என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா எனும் நாமக்கல் கவிஞரின் வாசகத்தை மெய்ப்பிக்கிறது, பாரதியின் தேமதுரத் தமிழோசை உலகமெல்லம் பரவும் வகை செய்தல் வேண்டும் எனும்கனவு இணையத்தால் நனவாகிறது. இதயத்தால் இணைய மறுப்போர் கூட இனி இணையத்தால் இணைவர்.

## அலகு– 4 மொழிதிறன் பயிற்சி

### அ. கடிதங்கள்

அ. வேண்டுகை

ஆ. முறையீடு

இ. விண்ணப்பம்

### வாழ்க்கை வசதி வேண்டி விண்ணப்பம் வரைதல்

அனுப்புநர்,

செயலாளர்,
முத்துநகர் குடியிருப்போர் நலமன்றம்,
திருச்சி சாலை,
திண்டுக்கல் - 5.

அனுப்புநர்,

தலைவர்,
திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம்,
திண்டுக்கல்.

ஐயா,

பொருள் : முத்துநகர் - குடிநீர்க் குழாய் அமைத்துத்தர வேண்டுதல்.

எங்கள் குடியிருப்பு பகுதியில் ஐந்து தெருக்கள் உள்ளன. இருநூறு வீடுகள் உள்ளன. இப்பகுதியில் வாழும் மக்களுக்குப் போதுமான குடிநீர் வசதி இல்லை. மக்கள் அவரவர் வீடுகளில் போட்டுள்ள குழாய்க் கிணறுகளில், மழையில்லாத காரணத்தால் சிறிதளவும் நீரில்லை.

எனவே இப்பகுதி வாழ்மக்கள் நாள்தோறும் நெடுந்தூரம் சென்று, அன்றாடத்தேவைக்கான குடிநீரைக் கொண்டுவர வேண்டியுள்ளது. அலுவலகப் பணிக்கும், பள்ளிக்கும் செல்பவர்களுக்கு இச்சூழ்நிலை துன்பந்தருவதாய் அமைந்துள்ளது. இதனால் பணியில் காலத்தாழ்வு ஏற்படுகின்றது.

எங்கள் குடியிருப்புப் பகுதிக்கு அருகிலேயே ஊராட்சி மன்றத்தின் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே அதிலிருந்து எங்கள் பகுதிக்கு ஊராட்சிமன்றத்தின் மூலமாக குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தாங்கள் இது குறித்து விரைவில் களஆய்வு மேற்கொண்டு, “நீரறம் நன்று” எனும் உயர் கொள்கைப்படி, குடிநீர் வசதிக்காக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மன்றத்தின் சார்பில் கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

திண்டுக்கல், இங்ஙனம்,
18.01.2003, இளஞ்செழியன்,
செயலாளர்

**உறுப்பினர்கள்**

ப. ஊர்வேந்தன்

க. கண்ணப்பன்

ஆ. வீராசாமி

மோ. இராமுத்தாய்

பெ. அரங்கநாயகி

சி. இளவரசன்

க. முத்தையா (குடியிருப்போர் சார்பாக)

## முறையீட்டு விண்ணப்பம்

அனுப்புநர்,

பெ. அருள்சக்தி,
2.6, முதன்மைச்சாலை,
கோவிந்தாபுரம்,
பொள்ளாச்சி.

பெறுநர்,

மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்,
கோயம்புத்தூர்.

ஐயா,

பொருள் : காணாமல் போன ஈருருளை வண்டி – கண்டுபிடித்துத்தர வேண்டுதல்.

நான் இன்று காலை, பொள்ளாச்சிப் பேருந்து நிலையம் அருகில் உள்ள இந்தியன் வங்கிக்கு என்னுடைய ஈருருளை வண்டியில் சென்றேன். வண்டியை வெளியே நிறுத்திவிட்டு, வங்கியினுள் சென்று பணியில் ஈடுபட்டிருந்தேன். ஒரு மணிநேரம் கழித்து, வெளியே வந்து பார்த்தபோது, என் வண்டியைக் காணவில்லை. சுற்றுப்புறத்தில் தேடியும் வண்டி கிடைக்கவில்லை.

**வண்டியைப்பற்றிய குறிப்பு**

| | | |
|---|---|---|
| வண்டியின் பெயர் | : | டிவிஎஸ்50 |
| வண்டியின் நிறம் | : | அடர் பச்சை |
| வண்டியின் எண் | : | த.நா. 57 2156 |
| வண்டி தயாரிப்பு எண் | : | கே 043278 ஒய்எம். |

மேற்கண்ட விவரங்களைக் கொண்ட காணாமல் போன என் ஈருருளை வண்டியைக் காவல்துறை மூலமாகக் கண்டறிந்து கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தாங்கள் அழைக்கும் போது, காவல்நிலையத்திற்கு வந்து, மேற்கொண்டு இது தொடர்பான செய்திகளைக் கூற அணியமாய் உள்ளேன் என உறுதி கூறுகிறேன்.

பொள்ளாச்சி,
18.01.2003.

தங்கள் உண்மையுள்ள,

**பெ. அருள்சக்தி.**

## மாற்றுச்சான்றிதழ் வேண்டி விண்ணப்பித்தல்

விடுநர்

சா. மலர்விழி,
45, பூங்கா தெரு,
ஈரோடு – 638 001,
பெரியார் மாவட்டம்.

பெறுநர்

தலைமையாசிரியை அவர்கள்,
கலைமகள் கல்வி நிலையம் பெண்கள் மேனிலைப்பள்ளி,
ஈரோடு – 638 001,
பெரியார் மாவட்டம்.

அம்மையீர்,

**பொருள் : மாற்றுச் சான்றிதழ் வேண்டுதல்.**

நான் தங்கள் மேல்நிலைப்பள்ளியில் 1995 – 1996 ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பு பயின்று, அரசு பொதுத்தேர்வில் வெற்றி பெற்றுள்ளேன். தற்போது நான் மேல் நிலை வகுப்பில் சேருவதற்கு மாற்றுச்சான்றிதழ், தேவைப்படுகிறது. எனவே, எனக்கு மாற்றுச் சான்றிதழ் தந்து உதவும்படிப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இடம் : ஈரோடு

நாள் : 23.10.96

பெற்றோர் (அ) பாதுகாவலர் கையொப்பம்

இங்ஙனம்,
கீழ்ப்படிந்துள்ள மாணவி,
சா. மலர்விழி.

## ஆ. பத்திரிக்கைகளில் செய்திகள் வெளியிடுவதற்குப் பயிற்சி அளித்தல்

மக்களுக்கு நாள்தோறும் நாட்டு நடப்புகளைத் தெரிவிக்கும் பணியைச் செய்தித்தாள்கள் செய்தி வருகின்றன. எளிய மக்களுக்கும் செய்திகளைக் கொண்டு செல்லும் பணியில் செய்தித்தாள்களே முன்னிற்கின்றன. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் விளைவாகத் தொலைக்காட்சி போன்ற புதிய ஊடகங்களும் இன்று உருவாகியுள்ளன. நவீனத்தகவல் ஊடகங்களின் பணி இன்று வியக்கத்தக்க அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது. நேற்று நிகழ்ந்ததை இன்று அறிந்து கொள்வது என்னும் நிலைமாறி நிகழ்ச்சிகளை உடனுக்குடன் அறியும் நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. செய்தி இல்லாமல் இன்று உலகம் இல்லை தகவல் உலகில் உண்டான பெரும் புரட்சி இது.

எனவே செய்தியாளர் ஒருவர் செய்தியைச் சேகரிக்கும் முறையும், எழுதும் வகையும் செய்தியின் இயல்புக்கும் முக்கியத்துவக்கும் ஏற்ப மாறுபடுகின்றன.

அரசுச் செய்திகள், நீதிமன்றச் செய்திகள், சட்டப்பேரவை நாடாளுமன்றச் செய்திகள், பொதுக்கூட்டங்கள், சொற்பொழிவுச் செய்திகள், அறிவியல் செய்திகள், விளையாட்டுச் செய்திகள் எனச் செய்திகள் பல வகைப்படும்.

இத்தகைய செய்திகளை உயிரோட்டத்துடனும், சுவையுடனும் தரும் பத்திரிக்கைகளுக்கே புகழும் பெருமையும் சேர்கின்றன. இப்புகழுக்கும் பெருமைக்கும் அடிப்படை அமைத்துத் தருபவர்கள் செய்தியாளர்களே.

எனவே ஓரிடத்திற்குச் சென்று தகவல்களைத் திரட்டும் போதோ, ஒரு பொதுக்கூட்டத்திற்குச் சென்று நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் போதோ, முக்கியமானவற்றை மட்டும் குறிப்பெடுத்துக் கொண்டு பின்னர் அதனைச் செய்தியாக எழுத வேண்டும்.

எடுத்துக்காட்டாக, சொற்பொழிவுகளைக் குறிப்பெடுக்கின்ற செய்தியாளர், கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாகவே சென்று உரிய இடத்தில் அமர்ந்து, தொடக்க முதல் கூட்டத்தைக் கவனிக்க வேண்டும்.

சொற்பொழிவைச் சரியான முறையில் விரைந்து குறிப்பெடுக்க வேண்டும். செய்திகளை மாற்றியோ, கூட்டியோ எழுதலாகாது. சொற்பொழிவு முழுவதையும் சொல்மாறாமல் கொடுக்க வேண்டியதில்லை. சொற்பொழிவின் சாரத்தை வெளியிட்டால் போதும்.

சொற்பொழிவில் இடம் பெறுகின்ற உயர்ச்சிமிக்க கருத்தாழமுள்ள சொற்றொடர்களை அப்படியே பயன்படுத்தலாம். அது செய்திக்கு வளத்தைச் சேர்க்கும். மேற்கோள்கள் சிலவற்றையும் செய்தியில் சேர்க்கலாம்.

நிகழ்ச்சியில் மிக முக்கியமானவர்கள் கலந்து கொண்டால், அவர்களின் பெயரைச் செய்தியின் இறுதியில் குறிப்பிடலாம்.

பல்கலைக் கழகத் தேர்வில் குறிப்புகளை மட்டும் கொடுத்து மாணவர்களே செய்தி எழுதுமாறு ஒரு வினா அமையும்.

அதற்கு முன் மாதிரியாக புகழ்பெற்ற நாளிதழான தினமணியில் வெளியான இரண்டு செய்திகள் அடுத்தடுத்துத் தரப்படுகின்றன.

1. நாடறிந்த கவிஞர் மீரா அவர்களுக்குச் சிவகங்கையில் நடந்த அஞ்சலிக் கூட்டம் பற்றியது.
2. தமிழறிஞர் அ.ச. ஞானசம்பந்தர் அவர்களின் நினைவாகச் சென்னையில் நடைபெற்ற அஞ்சல் உறை வெளியீட்டுவிழா தொடர்பானது.

மாணவர்கள் இவற்றை உதாரணமாகக் கொள்ளவும். மேலும் பத்திரிக்கைகளில் வெளிவரும் பலவகையான செய்திகளையும் படித்து, அவற்றில் உள்ள வெளியீட்டுத் திறன்களை எண்ணிப் பார்க்கலாம். இது தொடர்பாக வகுப்பில் ஆசிரியர்கள் விளக்குகின்ற கருத்துக்களையும் நினைவிற் கொண்டு, செய்திகளை எழுதிப் பயிற்சி பெற வேண்டும். அத்தகைய பயிற்சியே தேர்வின் போது உங்களுக்குக் கை கொடுக்க வேண்டும்.

மாதிரி 1

1. கவிஞர் மீராவின் படைப்புகளை நாட்டுடமையாக்க வலியுறுத்தல் :

சிவகங்கை செப். 5 : கவிஞர் மீராவின் படைப்புகளை, நாட்டுடமையாக்க வேண்டும் என அரசுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிவகங்கையில் அண்மையில் நடைபெற்ற கவிஞர் மீராவின் முதலாமாண்டு நினைவு நாள் நிகழ்ச்சியில் பேராசிரியர் குழந்தைநாதன் இக்கோரிக்கையை வலியுறுத்தினார்.

அசுரம், அரங்கில் காலையில் நடைபெற்ற இந்த நினைவு நாள் நிகழ்ச்சியில், மீரா அறக்கட்டளை தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த அறக்கட்டளை சார்பில் மீரா நினைவு நூலகம், அவரது மார்பளவு வெண்கலச் சிலை, கவிஞர்களின் குரல் ஆவணக் காப்பகம் ஆகியவை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

நிகழ்ச்சியில் கவிஞர் மீராவின் படத்தைத் திருவரங்கராசன் திறந்து வைத்துப் பேசினார்.

தேவார இசைப் பாடலைச் சிவகங்கை இசைப் பள்ளி மாணவர்கள் பாடினர். சாகாதவானம் என்ற பாடலைக் கவிஞர் மீராவின் பேத்தி பிரபஞ்சனா பாடினார்.

"மீராவோடு நான்" என்ற தலைப்பில் நடைபெற்ற முதல் அமர்வில், கவிஞர் சிற்பி தலைமை வகித்துப் பேசினார். பின்னர் நா. காமராசன், நா. தர்மராஜன், பு. ராசதுரை, தனுஷ்கோடி, ராமசாமி, ம.பெ. சீனிவாசன், கந்தர்வன், தேனி சீருடையான், க.வை. பழனிச்சாமி ஆகியோரைத் தொடர்ந்து விஜயா மு.வேலாயுதம், இரா.மோகன் ஆகியோர் பேசினர்.

கவிதை வாசிப்பு நிகழ்ச்சிக்குக் கவிஞர் பாலா தலைமை வகித்தார். கவிஞர்கள் அறிவுமதி; சுபாஷ், ர.சுப்பிரமணியன், பிரான்சிஸ், கிருபா, இராகுலதாசன், திகலபாமா ஆகியோர் கவிதை வாசித்தனர்.

பிற்பகலில் பா.செயப்பிரகாசம் தலைமையில் விவாதங்கள், விமர்சனங்கள் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் இந்திரன் பேசினார்.

தமிழின் நவீனச் சிந்தனைகளைத் தொடர்ந்து வெளியீடுகளாகக் கொண்டு வர வேண்டும் என்றார் கூ.பஞ்சாங்கம்.

மறுவாசிப்பில் மீராவின் ஊசிகள் என்ற தலைப்பில் குருசாமி மயில்வாகனன் பேசினார். மீராவுடனான நினைவுகளை இளசை மணியன் நினைவு கூர்ந்தார்.

“மீரா கட்டுரைகள்” என்ற நூலை முனைவர் தமிழண்ணல் வெளியிட மு.மாரிமுத்து பெற்றுக் கொண்டார். காலத்தின் குரல் என்ற நூலை நா.தர்மராஜன் வெளியிட, கலைப் பண்பாட்டு மையத்தின் உதவி இயக்குநர் நா.கலைமான் பெற்றுக் கொண்டார்.

பிரான்சிஸ் கிருபாவின் “மெசியாவின் காயங்கள்” என்ற நூலுக்குக் கவிஞர் மீரா விருதை விஜயா பதிப்பகத்தின் மு.வேலாயுதம் வழங்கினார்.

அது குறித்து மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ப.சு.பொன்னுச்சாமி விமர்சன உரையாற்றினார்.

'என் சாளரத்தின் வழியே' என்ற தலைப்பில் மாலையில், சாகித்திய அகாதெமி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அகாதெமியின் தமிழ் மாநில ஒருங்கிணைப்பாளர் கவிஞர் பாலா பேசினார். தமிழ் இலக்கியத்துக்கு மிகச் சிறப்பான பங்களிப்பை ஆற்றியவர் மீரா என அவர் குறிப்பிட்டார்.

கவிஞர் மீராவின் முதலாமாண்டு நினைவுச் சொற்பொழிவாற்றிய கவிஞர் அப்துல் ரகுமான், எதிரிகளே இல்லாதவர் மீரா, மீராவின் கவிதை வரிகளைத் தற்போது திரைப்படப் பாடல்களில் திருட்டுத்தனமாகப் பயன்படுத்துகின்றனர் என்றார். சாகித்ய அகாதெமியின் திட்ட அலுவலர் இளங்கோவன் வரவேற்றார். மீராவின் சகோதரர் மீ.சுகுமாரன் நன்றி கூறினார். தினமணி 05.11.2006.

## மாதிரி – 2

**2. பேராசிரியர் அ.ச.ஞா. சிறப்பு அஞ்சல் உறை வெளீடு :**

சென்னை, நவ. 11 : மறைந்த பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தனின் 67வது பிறந்த நாளையொட்டி, அவரது நினைவாகச் சிறப்பு அஞ்சல் உறை வெளியிடப்பட்டது.

சென்னையில் திங்கள்கிழமை நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு வட்டத் தலைமை அஞ்சல் துறைத் தலைவர் யு. சீனிவாசராகவன் சிறப்பு அஞ்சல் உறையை வெளியிட்டார். தபோவன பிரசாத் இதழ் ஆசிரியர் கே. விஸ்வநாதன் அதைப் பெற்றுக் கொண்டார்.

அ.ச.ஞா. எழுதிய தொட்டனைத்தூறும் மணற்கேணி என்ற நூலை உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி எஸ்.நடராஜன் வெளியிட கம்பன் கழகத் தலைவர் இராம. வீரப்பன், பேராசிரியர் தெ. ஞானசுந்தரம், கிருஷ்ணா சுவீட்ஸ் அதிபர் முரளி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

அ.ச. ஞானசம்பந்தனின் தமிழ்ப் பணிகளை நினைவு கூர்ந்து புகழாரம் சூட்டினார். யு.சீனிவாசராகவன், பேராசிரியை இளம்பிறை மணிமாறன் சிறப்புரை நிகழ்த்தினர்.

அ.ச.ஞா.வின் மகன் ஜி. மெய்கண்டான் வரவேற்றார். சென்னை கம்பன் கழக் செயலர் டி.ராமலிங்கம் நன்றி கூறினார். முன்னதாகத் தர்மபுரம் எஸ்.ஞானப்பிரகாசம் குழுவினரின் தேவார இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இலக்கியச் சிந்தனை மற்றும் அ.ச.ஞா. குடும்பத்தினர் சார்பில் இவ்விழா நடைபெற்றது. இலக்கியச் சிந்தனை, ப.லெட்சுமணன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். தினமணி 11.11.2006.

## செய்தித் தாள்களுக்குச் செய்திப் பத்திகள்

## எழுதி அனுப்புதல்

மாணவர்களே!

நாம் பேசவேண்டுமானாலும் எழுதவேண்டுமானாலும், கருத்துக்களை முதலில் நன்கு சிந்திக்க வேண்டும். கருத்துக்கள் தோன்றும்போது, அவற்றைக் குறித்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒவ்வொரு கருத்தையும் சிலவாக்கியங் களாலேனும், பல வாக்கியங்களாலேனும் விளக்க வேண்டும்.

இங்ஙனம் ஒரு கருத்தை விளக்கும் வாக்கியங்களின் தொகுதிக்குப் "பத்தி" என்பது பெயர். ஒரு பத்தியின் முதல் வாக்கியம் அதிற் கூறப்படும் கருத்தை வெளிப்படுத்துவதாக அமையலாம். மற்ற வாக்கியங்கள் அதை விளக்குனவாக அமைய வேண்டும். ஒரு பத்தியைத் தொடங்கும்போது, அதன் முதல் வரியை மற்ற வரிகளைவிடச் சற்று வலப்பக்கம் தள்ளித் தொடங்க வேண்டும்.

நீங்கள் பயிலும் கல்லூரியில் விழாக்கள், சிறப்புக்கூட்டங்கள் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்நிகழ்ச்சிகளில் பங்குகொண்டர்வர்களுக்கு நேரிற் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்பும் ஏற்படுகின்றது. ஆயினும் மற்றவர்கள் இதனை அறிதல் வேண்டுமென்றோ? எனவே அந் நிகழ்ச்சிகளைப் பற்றிச் செய்தித்தாள்களுக்கு நீங்கள் எழுதி அனுப்பி வைத்தால், செய்தித்தாள்களில் அவை வெளியாகலாம். அவற்றைப் படித்துப் பலரும் அறிந்து கொள்ளும் வாய்ப்பும் உண்டாகும். எனவே மாணவர்களாகிய நீங்கள் செய்தித்தாள்களுக்குச் செய்திப்பத்திகள் எழுதியனுப்புதல் எவ்வாறு என்பதைத் தெரிந்து கொள்ளல் நலம் பயப்பதாகும்.

1. செய்தித்தாள்களில் வெளிவரத்தக்க செய்திகள் பலவாகும். எனவே நீங்கள் எழுதி அனுப்பும் செய்தி சுருக்கமானதாகவும் படிப்போர் செய்தியை உணர்ந்து கொள்ளத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும்.

2. செய்திகளுக்குப் பொருத்தமான தலைப்பிட்டு அனுப்புதல் நலமாகும்.

3. செய்திகளைத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதி அனுப்புதல் வேண்டும்.

4. நிகழ்ச்சிகளைப் பற்றியதாயின் ஊர், நாள், கலந்து கொண்டோர் இவற்றைத் தெளிவாக எழுதியனுப்புதல் வேண்டும்.

## எழுதியனுப்பும் முறை

பெறுநர்,

உயர்திரு. ஆசிரியர் அவர்கள்,
“நவ இந்தியா” அலுவலகம்,
பூளைமேடு,
அவினாசி சாலை, கோவை.

அனுப்புநர்,

செயலாளர்,
பாவேந்தர் பாரதிதாசன் மன்றம்,
77, திருவேங்கடசாமி வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை – 2.

பேரன்புசால் ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம். தங்கள் செய்தித்தாளில் அடியிற்குறித்த செய்திகளைத் தனித்தனியே அச்சிட்டு வெளியிடுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
ம. கலைச்செல்வன்.

## பாரதி விழா

எங்கள் பாவேந்தர் பாரதிதாசன் மன்றத்தின் சார்பில் 12.09.2008-ஆம் நாள் பாரதிவிழா கோவை, கோ.துரைசாமி நாயுடு அவர்களின் பிரசிடெண்டு மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு பூ.சா.கோ. கலைக்கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர் டாக்டர்.ஞானமூர்த்தி அவர்கள் தலைமையேற்றார். கோவை அரசினர் கலைக்கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர்.மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்.

பாவலர் பாரதியார் பாடல் பைந்தமிழ் மொழிக்கே சிறப்பளிப்பதென்றும், விடுதலை வேட்கையை வீறுபெறச் செய்ததென்றும், நாட்டுப்பற்றை நனிவளர்ப்பதென்றும், புதுமையையும் புரட்சியையும் தோற்றுவிப்பதென்றும், பாரதிக்கு விழாக் கொண்டாடுதல் நமது கடமை என்றும் சொற்பொழிவாளர் குறிப்பிட்டார். தலைவர் அவர்கள் பாரதியார் பாநலத்தை எடுத்து விளக்கினார்.

மன்றச் செயலாளர் புலவர் மருதவாணன் நன்றி கூற, இனிப்பு வழங்குதலுடன் விழா இனிதே முடிந்தது.

## எழுதியனுப்பும் முறை – 2

## காவேரியில் பெருவெள்ளம்

சென்ற நான்கு நாட்களாக இடைவிடாமல் மழைபெய்ததின் காரணமாகக் காவேரியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இதனால் கரையோரங்களில் உள்ள வீடுகளுக்கு அழிவு ஏற்பட்டிருக்கின்றது. நூற்றுக்கணக்கான வீடுகள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. வீடுகளை இழந்த மக்கள் இந்நகரத்தில் உள்ள பள்ளிகளிலும் சத்திரங்களிலும் தங்கியிருக்கின்றார்கள். நகராட்சி மன்றமும், பொதுநல மன்றங்களும், துன்பப்படும் மக்களுக்கு உணவும், உடையும் அளித்துப் பேணி வருகின்றன.

## அலகு– 5 பொதுக்கட்டுரை